معارف الوجود

للشيخ الامام العارف احمد النسكى القاهرى المدفون

فى مقبرة مسجد المخدوم

இஃது;

மஆரிபுல் உஜூது

இதன் ஆசிரியர்:

காயல்பட்டணம்,

ஷைகு அஹ்மது நுஸ்கீ அவர்கள்

இது

தவ்ஹீது, மஅரிபா இபாதத்து

ஆகியவைகளை விளக்கிக்கூறும் ஒரு நூல்.

1965.

قال الله تعالى وماخلقت الجن والانس الاليعبدون

அல்லாஹுதஆலா திருவுளமானான், ஜின்னையும் மனுவையும் நான் படைத்தது என்னை அவர்கள் ஒன்று படுத்தி அறிந்து வணங்கவே யல்லாது, வீணுக்காகப் படைக்கவில்லை. என்று அறி- தாலியானவனே; தவ்ஹீ தாகிறது. அதன் பொருள், ஒட்டுச் சாட்டை விட்டு விடு கிறது. அஃதெப்படி என்றால், என்னுடைய நப்சு என் னுடைய றூஹு, என்னுடைய கல்பு, என்னுடைய கை என்னுடைய-அவனுடைய என்ற பாகுபாடான அன்னி யத்தை, விட்டு விடுகிறது. தவ்ஹீதென்றது நாலுவகை யுண்டு. ஒன்றாவது – தவ்ஹீதுல் – உலூஹிய்யத்து –நாய கத்தனத்தை ஒன்று படுத்துவது.

நாயனென்று பேர்பெற்றது மூன்று வகையுண்டு. முதலாவது இலாஹுல் பாத்தில் - பொழுது, பிறை, நெருப்பு, காற்று, மண், தண்ணீர் ஆகியவை போன்ற வைகளைக்கொத்த நாயனென நம்புவது.

இரண்டாவது இலாஹுல் ஹக்கு என்பதாகிறது. தாய், தந்தை, குரு, இராஜா ஆகியவர்கள் போற்கொத்த வைகள் எல்லாவற்றையும் மறந்துவிடுவது. இலாஹுல் முத்லக் கென்னும் அல்லாஹு சுபுஹானஹூ வத ஆலாவை இதுபாத்தென்ற தறிபாடாக்கிக் கொள்வது.

இனி இரண்டாவது. தவ்ஹீதாகிறது, தவ்ஹீதுல் அப்ஆலி – அதாவது, செயல்களை ஒன்று படுத்துகிறது. ஆனால் பாயிலென்று பேருள்ளது இரண்டுண்டு. ஒன்றா வது பாயில் மஜாஸீ; இரண்டாவது பாயில் ஹகீக்கி; அதாவது, அல்லாஹுதஆலா செயல்களை யுடையா னென்றது அதை இத்பாத்தென்று தரிபடுத்துவது.

மூன்றாவது, தவ்ஹீதுஸ் சிபாத்தி, சிபாத்தி சிபாத்தை ஒன்றுபடுத்துகிறது. இதுவும் இரண்டுண்டு. அதாவது, முதலாவது. மஜாஸீயென்பது; இந்த ஆலம் ஹயாத்துள்ளது, அறிவுள்ளது, நாட்டமுள்ளது, தத்துவமுள்ளது, கேள்வியுள்ளது, பார்வையுள்ளது, பேச்சுள்ளது என்பவைகளை, 'நபீ' என்று மறந்துவிடுகிறது.

இரண்டாவது, ஹகீக்கீ; அல்லாஹு தஆலாவே உண்மையாக அந்த ஏழு சிபாத்தும் உடையானென்றது என இதுபாத்தென்ற தரிபாடாக்குவது.

நான்காவது தவ்ஹீதுல் வுஜூதி, அதாவது, தாத்தை ஒன்று படுத்துவது. எவ்விதமானால்,

لا موجود الا الله லா மவ்ஜூத இல்லல்லாஹ்

உண்டாகியவன் அல்லாஹு தஆலா அல்லாது வேறு யாருமில்லை;

لا معبود الا الله லா மஅபூத இல்லல்லாஹ்

வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹு தஆலாவே அல்லாது வேறு யாருமில்லை.

لا مقصود الا الله லாமக்சூத இல்லல்லாஹ்

நாடப்பட்டவன் அல்லாஹு தஆலாவே யல்லாது வேறு யாருமில்லை.

لا مطلوب الا الله லாமத்லூப இல்லல்லாஹ்

தேடப்பட்டவன் அல்லாஹு தஆலாவே யல்லாது வேறு யாருமில்லை,

لامحبوب الاالله லாமஹ்பூப இல்லல்லாஹ்

உவக்கப்பட்டவன் அல்லாஹுதஆலாவே யல்லாது வேறு யாருமில்லை

لافاعل الاالله லாபாயில இல்லல்லாஹ்

செய்து முடிப்பவன் அல்லாஹுதஆலாவே யல்லாது வேறு யாருமில்லை.

لاحاضر الاالله லாஹாளிர இல்லல்லாஹ்

எல்லா வஸ்திலும் சேர்ந்து கூடியிருப்பது அல்லாஹுதஆலா அல்லாது வேறில்லை.

لاحى الاالله லாஹைய்ய இல்லல்லாஹ்

ஹயாத்துள்ளவன் அல்லாஹுதஆலாவே யல்லாது வேறில்லை.

لاعالم الاالله லாஆலிம இல்லல்லாஹ்

அறிவுள்ளவன் அல்லாஹுதஆலாவே யல்லாது வேறு யாருமில்லை.

لامريد الاالله லாமுரீத இல்லல்லாஹ்

நாட்டமுள்ளவன் அல்லாஹுதஆலாவே யல்லாது வேறில்லை.

لاقادر الاالله லாகாதிர இல்லல்லாஹ்

தத்துவமுள்ளவன் அல்லாஹுதஆலாவே யல்லாது வேறில்லை.

لاسميع الاالله லாஸமீஅ இல்லல்லாஹ்

கேட்கிறவன் அல்லாஹுத தஆலாவே யல்லாது வேறில்லை.

لابصير الاالله லாபஸீர இல்லல்லாஹ்

பார்க்கிறவன் அல்லாஹுத தாஆலாவே யல்லாது வேறில்லை,

لامتكلم الاالله லா முத்தகல்லிம இல்லல்லாஹ்

பேசுகிறவன் அல்லாஹுத வதஆலாவே யல்லாது வேறில்லை.

لارب الاالله லா ரப்ப இல்லல்லாஹ்

படைத்து வளர்க்கிறவன் அல்லாஹுத வதஆலாவே யல்லாது வேறில்லை.

لارحمن الاالله லா ரஹ்மான இல்லல்லாஹ்

நல்லவன், பொல்லாதவன், எல்லோருக்கும் ஒன்று போல் கிருபை செய்கிறவன் அல்லாஹுத தஆலாவே யல்லாது வேறில்லை.

لارحيم الاالله லா ரஹீம இல்லல்லாஹ்

மூஃமீன்களுக்கு தனது கிருபை செய்கிறவன் அல்லாஹுத தஆலாவே யல்லாது வேறில்லை.

لامالك الاالله லா மாலிக்க இல்லல்லாஹ்

எல்லா வஸ்துவையுமுடையவனாகிய, இராஜாவாகியவன் அல்லாஹுத தஆலாவே யல்லாது வேறில்லை.

لا محيط الا الله லா முஹீத்த இல்லல்லாஹ்

எல்லா வஸ்துவையும் சூழ்ந்திருப்பவன் அல்லாஹு தஆலாவேயாம்.

لا حكيم الا الله லா ஹக்கீம இல்லல்லாஹ்

எல்லா வகையிலும் பூராயங் கொண்டறிந்தவன் அல்லாஹு தஆலாவேயாம்.

இப்படி யெல்லாம் அறிந்துகொண்டு அவனுடைய தாத்தாகிய, உள்ளமைக்குத்தானே, வுஜூதுண்டென்றும், உறுதி கொண்டும், மற்றதுக்கில்லை என்றும் நபீச் செய்ய வேண்டும்.

மஅரிபத்து

அதன் பொருளை அறிகிறது ஏழுவகையுண்டு. ஒன்றுவது, மஅரிபத்து அஸ்மா இல்லாஹி தஆலா—அல்லாஹு தஆலாவுடைய நாமங்களை அறிகிறது. ஒவ்வொரு நாமத்துக்கும் ஒவ்வொரு ரூபம் உண்டு. நாமமாகிறது றப்பு, ரூபமாகிறது அப்து இதற்கு விபரம், அல்லாஹ்வென்கிற நாமத்துக்கு அப்து மள்ஹறுள் அத்தம்மாகிய இன்சான் அக்மலாகிய, நம்முடைய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். இனி ரஹ்மானென்னும் நாமத்துக்கு அப்து. இன்சான் அடங்கலுமாகவிருக்கும்.

இரண்டாவது, மஅரிபத்துத் தஜல்லியாத்தி தாத்து டைய தஜல்லியை இன்னதென்றும், ஸிபாத்துடைய தஜல் லியை இன்னதென்றும் அறிகிறது; இதைக் கேட்டறிந்து கொள்ளவும்.

மூன்றாவது, மஅரிபத்துல் கஷ்பில் கியாலி—கியாலாகிய கஷ்பை அறிகிறது எப்படியானால், காலிபிய்யாத்—தபயிய் யாத்—நப்சிய்யாத்—கல்பிய்யாத்—ரூஹிய்யாத்—சிர்ரிய்யாத் ஹகீக்கிய்யாத் என்னும் இந்த ஏழுக்கும், ஒவ்வொன்றுக் கும் பதினாயிரந் திரையாக எழுபதினாயிரந் திரைகளுண்டு. அதில் காலிபிய்யாவுடைய திரை நீங்கினால் ஜின்னுடைய ஆலம் வெளியாகும்; தபயிய்யாவுடைய திரை நீங்கினால் நரகலோகம் வெளியாகும்; நப்சிய்யாவுடைய திரை நீங்கி னால் சொர்க்கலோகம் வெளியாகும்; கல்பிய்யாவுடைய திரை நீங்கினால் இன்சானுடைய ஆலம் வெளியாகும்; ரூஹிய்யாவுடைய திரை நீங்கினால் மலக்குகளுடைய ஆலம் வெளியாகும்; சிர்ரிய்யாவுடைய திரை நீங்கினால் ஆலம் அடங்கலும் வெளியாகும் ஒரு முகமாக வெளியா கும்; ஹகீக்கிய்யாவுடைய திரை நீங்கினால் முஹம்மதிய் யாவான ஹகீக்கத்து வெளியாகும்.

நான்காவது, மஅரிபத்து கமாலில், வுஜூதி வஹக் கிஹி வுஜூதுடைய நிரப்பத்தையும் குறைத்தலையும் அறி கிறது. அஃதெப்படியானால், ஆலமெல்லாம் ஹக்கு தானாக இருக்கிறதென்று அறிகிறது நிரப்பம். இனி ஆலம் வேறு ஹக்கு வேறு என்றறிகிறது குறைத்தல்.

ஐந்தாவது, மஅரிபத்துல் இன்சானில் இன்சானை அவனுடைய ஹகீக்கத்தின் புறமாக அறிகிறது அஃதெவ்

விதமானல். இன்சானுக்கு ஆலமெல்லாம் வசப்பட்டிருக்கிறது; இன்சான் ரஹ்மானுக்கு வசப்பட்டவனென்றறிகிறது.

ஆருவது, மஅரிபத்து. சித்தாபில்ஹக்கி இபாதத்துன் பில்லிசானிஷ்ஷர்யி ஹக்கு தஆலா தன் அடியார்களுடனே ஷரஉ என்னும் நாவு கொண்டு பேசுவதை அறிகிறது.

அஃதெப்படியானல், ஹக்கெனும் வுஜூது, தன் இல்மிலே நூறு முஹம்மதாகிய ஷுஹூதாய்ப் பேசுகிறது. இவ்விதம் ஹக்கை ஹக்கென்றும், கல்க்கை கல்க்கென்றும் அறிகிறது.

ஏழாவது, மஅரிபத்துல் இல்லி வல்அதுவாயி; நசல் இன்னது; இதற்கு மருந்து இன்னது தானென்றறிகிறது. அது ஏதுபோலென்ருல், கல்பு—ஜஹ்லு கொண்டு பாராட்டுகிறதாஞல் நசலென்னும், இல்மு கொண்டு பாராட்டுகிறதாஞல் மருந்தென்றும் அறிகிறது

மஅரிபா நான்குவகை

அறிந்துகொள் தாலிபானவனே! இந்த மஅரிபத்து ஏழு விதத்தையும் நான்கு வகையாகவும் சொல்வார்கள் அதாவது:—

அல்லாஹு தஆலாவின் தாத்தையும் சிபாத்தையும், ரப்பையும், நப்சையும் அறிகிறது. ஆதலால், அல்லாஹு தஆலாவுடைய தாத்தை அறிகிறதற்கு மூன்று வகையுண்டு. முதலாவது, தன்ஸீஹ் இதன் விபரமாவது, அல்லாஹு தஆலாவுக்கு அவன் தாத்துடைய புறத்தால் ஒரு பருமன் உருவம் மட்டுத் திட்டம் ஒன்றுமில்லையென்பது.

அல்லாஹு தஆலா குர்ஆனிலே திருவுளமகின்றன்:-

سبحان ربك رب العزة عما يصفون

சுப்ஹான ரப்பிக்க ரப்பில் இஜ்ஜத்தி அம்மா யஸிபூன்

"முஹம்மதே உம்முடைய சிறப்புடைய நாயன், அவர்கள் கற்பிக்கிற இயல்புகளெல்லாத்தையும் விட்டுத் தூய்தான இறைவனென்" என்று. தன்ஸீஹில் அதற்குத் தகுமான அதில் தஷ்பீஹ் இல்லாத தன்ஸீஹு அல்லா இனி தஷ்பீஹு செய்கிறதில், சண்டிப்பில்லாத அதற்குத் தகுமான தன்ஸீஹ் கொண்டு தஷ்பீஹ் செய்து கொள்வதாகும்.

தஷ்பீஹுக்குத் தஷ்பீஹும், தன்ஸீஹுக்குத் தன்ஸீஹும். இது இரண்டையும் சேர்த்தது தன்ஸீஹு மஹளுமாயிற்று. இதுதான் சிராத்துல் முஸ்தக்கீமென்னும் நேர்பாதை. இரண்டாவது தஷ்பீஹ். இதன் விபரமாவது:- பருமன், உருவம், மட்டு திட்டம் ஆகியவைகளில் நின்றும், முன்னே அவனுடைய தாத்தின் புறத்தால் இல்லை என்று சொன்ன தடங்கலும், அவனுடைய தஜல்லியாத்தின் புறமாக அவனுக்குண்டாயிருக்குமென்பது.

அல்லாஹு வதஆலா குர்ஆனில் திருவுளஞ் செய்கின்றன்

وله المثل الاعلى

வலஹுல் மதலுல் அஃலா

அவனுக்கே மேலாம்பரமான சூரத்தெல்லாம் என்று. மூன்றாவது. தன்ஸீஹு மஹளு, இதன் விபரமாவது:- அல்லாஹு தஆலாவின் வுஜூது, உருவம் கொண்டும்

மட்டுதிட்டம் கொண்டும் தஜல்லியாகிலும் ஒக்கும் உருவில்லாமல் மட்டில்லாமல் இருந்தானே, அந்த ஹகீக்கத்தை விட்டும் பெயர்ந்து பிரியவில்லை என்பது.

لیس کمثله شیئی وهوالسمیع البصیر

லைசக் கமித்லிஹி ஷைஉன் வஹுவஸ் ஸமீஉல் பஸீர்
அதாவது, அல்லாஹு தஆலா குர்ஆனில் திருவுளமாகின்றுன். "அவனைப் போலொரு வஸ்துவுமில்லை; அவனே கேட்கிறுன்; அவனே பார்க்கிறுன்" என்று.

இனி, சிபாத்தை அறிகிறது; மூன்று வகையுண்டு. ஒன்றுவது, வாஜிபாத்து; இதன் பொருள் யாதொன்றையும், ஹக்கில் உண்டென்று சொல்லுவதல்லாமல் இல்லை என்று சொல்லுவதில்லை.

அவை, 1. வுஜூது وجود உள்ளமை

2. கிதம் قدم அநாதி 3. பக்கா بقا முடிவுற்றமை

4. முஹாலபத்துன் லில் ஹவாதிதி مخالفة للحوادث

படைப்புகளுக்கு ஒப்பாமை

5. கியாமுஹு பிநப்ஸிஹி قيامه بنفسه ஏகத் தன்மை

6. வஹ்தானிய்யத்து وحدانية தான் தானய் நிலைத்திருத்தல்

7. ஹயாத்து حياة அழியாமை

8. இல்மு علم அறிவு 9. இராத்தது ارادة நாட்டம்

10. குத்ரத் قدرة வல்லமை 11. சம்உ سمع கேள்வி

12. பசரு بصر பார்வை 13. கலாம் كلام பேச்சு

14. ஹையுன் حي ஹயாத்தானவன்

15. ஆலிமுன் عالم அறிவுள்ளவன்

16. முரீதுன் مريد நாடுபவன் 17. காதிருன் قادر வல்லவன்

18. சமீஉன் سميع கேள்வியுள்ளவன்

19. பசீருன் بصير பார்வையுள்ளவன்

20. முத்தகல்லிமுன் متكلم பேசுபவன்

இரண்டாவது முஸ்தஹீலாத்து

இதன் பொருள் மேலே கூறப்பட்ட சிபாத்துகளுக்கு மாறுன சிபத்து. யாதொன்றும் ஹக்கில் இல்லையென்று சொல்கிறதன்றி உண்டென்று சொல்லக் கூடாதவைகள் என்பதாம்.

மூன்ருவது ஜாயிஸாத்து

ஹக்கில் உண்டாயிருத்தலும் இல்லாதிருத்தலும் சமமாயிருக்குமே அப்படிப்பட்ட சிபாத்துகள்.

அவைகளின் விபரமாவது, அழிக்கிறது, ஹயாத்தாக்குகிறது, மவ்த்தாக்குகிறது, நேர்வழி காட்டுகிறது, வழி கெடுக்கிறது, படைக்கிறது, இரணங் கொடுக்கிறது ஆகிய இப்பேர்க்கொத்ததாயிருக்கும்,

ஆனல், அல்லாஹு தஆலாவின் வுஜூதுடைய மர்த்தபாவை அறிந்தாலல்லாது மேலே சொல்லி வந்த மஅரிபா நிறப்பமாகாது. தாலிபானவனே! வுஜூதுடைய மர்த்தபா ஏழுண்டு.

எழுவகைத் தோற்றங்கள்

அஹதிய்யத்து, வஹ்தத்து, வாஹிதிய்யத்து, ஆலம் அர்வாஹ், ஆலம்மிதால், ஆலம் அஜ்ஸாம், ஆலம்இன் சான் இவைகளாயிருக்கும்.

எழுவகைத் தோற்றங்கள் அஹதிய்யத்து தாத்துடைய மர்த்தபாவாயிருக்கும்; அதாவது, குறிப்பில்லாதது என்றும், அல்லாஹ்வுடைய ஹக்கீகத் தென்றும் சொல்லப்படும். இனி வஹதத்து என்பது சிபாத்துடைய மர்த்தபா என்பதாகும். அது மர்த்தபத்து தஅய்யுன் அவ்வலென்றும், முதற் குறிப்பென்றும், முஹம்மதுடைய ஹக்கீக்கத் தென்றும் சொல்லப்படும். இந்த மர்த்தபாவில், ஹக்கு தஆலா தன்னுடைய தாத்தையும் சிபாத்தையும் மற்றுமுள்ள மவ்ஜூது தாத்து அனைத்தையும் ஒன்றைவிட்டொன்றை அகலாத படி தொகையாக அறிந்த மர்த்தபாவாயிருக்கும். இனி, வாஹிதிய்யத்தாவது அஸ்மா வென்னும் நாமங்களின் மர்த்த பாவென்றது அதை தஅய்யுனு தானி இரண்டாங் குறிப் பெனப்படும். இன்சானுடைய ஹகீக்கத் தென்றும் சொல் லப்படும். இந்த மர்த்தபாவில் ஹக்கு தஆலா தன்னுடைய தாத்தையும் சிபாத்தையும், மற்றுமுள்ள மவ்ஜூதுதாத்து அனைத்தையும் வெவ்வேறே பிரித்து அறிந்த மர்த்தபாவாயி ருக்கும். ஆனால் அதன் விபரம் எப்படி என்றால், அந்த வாஹிதியத்திலே வுஜூது, இல்மு, நூறு ஷுஹூது என்னும் அஸ்மாவுல் ஊலாவாகிய நாலு இஃதிபாறுண்டு. இதில் வுஜூது என்னும் ஹக்கு அறிவென்னும் அயியான் தாபித் தாவாகிய தஅய்யுனுத் தென்ற இன்சானுடைய சிர்ரிலே வெளியானதினால் முஹம்மது பிறந்தது. அந்த நூரிலே ஜலாலும், ஜமாலும் ஆகிய இரண்டுமுண்டு.

அந்த ஜலாலும் ஜமாலும் கூடி, ஷுஹூதெனும் தரிசனையிலே, ஆலம் அர்வாஹ், ஆலம்மிதால், ஆலம் அஜ்சாம், ஆலம் இன்சான் பிறந்தது. இந்த நான்கும் நாறு, ஹவாவு, மாவு, துராபு இந்த நாலும் அனாசிராயிருக்கும். இந்த நெருப்பு, காற்று தண்ணீர், மண் ஆகிய இந்த நான்கும் மேலே சொல்லப்பட்ட வுஜூது, இல்மு, நூறு, ஷுஹூது ஆகிய நான்காகிய பாத்தினுக்கு லாஹிர் இன்சான். பாத்தினுக்குப் பேர் றஹ்மான். தாலிபானவனே! ஆலம் அர்வாஹென்பது எல்லா வஸ்த்துக்களின் றூஹுகளைப் படைத்த ஆலம்; அதுவதுவான றூஹுகளின் ஆலம்; அவைகள் ரூபமாக விருக்கும்; இன்னும் பதின் மூன்று வடிவுடையனவாயிருக்கும்.

றூஹின்வகை பதின் மூன்று

1. வுலுல்-அஜ்மிகளின் அர்வாஹ். 2. முருசலீன்களின் அர்வாஹ். 3 அன்பியாக்களின் அர்வாஹ். 4. அக்தாபுகளின் அர்வாஹ் 5. அவ்லியாக்களின் அர்வாஹ், 6. உலமாக்களின் அர்வாஹ். 7. சாலிஹீன்களின் அர்வாஹ் 8. பாசிக்கீன்களின் அர்வாஹ். 9. காபிரீன்களின் அர்வாஹ் 10. ஹைவான்களின் அர்வாஹ். 11. நபாத்துக்களின் அர்வாஹ், 12. ஜமாதுகளின் அர்வாஹ். 13. துற்றத்தலைளாவாகும்.

ஒன்பது கிரகங்களும் நான்கு மண்டலங்களும்.

இனி ஆலமிதாலென்பது பதின்மூன்று வடிவுடையது. அர்வாஹுக் கெல்லாம் மாதிரியான ஆலம். அது எவ்விதமெனில், சரத்தைச் சரமாகவும், அசரத்தை அசரமாகவும் காண்பிக்கின்றது. இனி ஆலம் அஜ்சாம் என்பது, அர்ஷு முதல் தகுத்ததரா வரையுமுள்ள சடவுலகம். அதாவது பதின்மூன்று வகையுண்டு. அதில் முதலா

வதுஅர்ஷு, இரண்டாவது குருஸு, மூன்ருவதுபலக்குஸ் ஸுஹல் என்னும் ஏழாம் வானம்; நான்காவது பலக்குல் முஸ்தரி என்னும் ஆரும் வானம்; ஐந்தாவது பலக்குல் மிற்றீஹ் என்னும் ஐந்தாம் வானம்; ஆருவது பலக்குஷ் ஷம்சு என்னும் நான்காம் வானம்; ஏழாவது பலக்குஸ் ஸுஹரா என்னும் மூன்ரும் வானம்; எட்டாவது பலக்குல் அதாரிது என்னும் இரண்டாம் வானம்; ஒன்பதாவது பலக்குல் கமரு என்னும் முதல் வானம்; பத்தாவது நெருப்பு மண்டலம், பதினொன்ருவது காற்று மண்டலம் பன்னிரண்டாவது தண்ணீர் மண்டலம், பதின்மூன்ருவது மண் மண்டலமாயிருக்கும்.

இனி ஆலம் இன்சான் என்பது, இன்சானைப் படைத்த ஆலம். அது சரத்தையும் அசரத்தையும் காண்பிக்கின்ற ரூபம். அது ஒன்ருய்க் கூடிய மர்த்தபா நாற்பதாகவிருக்கும். இப்போது சொல்லிய நான்கு ஆலமும் கியானியான புதினமான மர்த்தபாவாயிருக்கும். முந்தின மூன்று மர்த்தபாவும் இலாஹிய்யத்தான பூர்ப்பமான மர்த்தபாவாயிருக்கும். இந்த கியானியான நான்கு ஆலமும், இன்சானிலே ஷுஹூதாயிருக்கும்.

இன்னும் தன்னை அறிகிறது எவ்விதமானல், தாலிபானவனே! மேலே சொல்லி வந்த ரஹ்மானென்னும் வுஜூது, இன்சானின் சிர்ராகிய இல்மு என்னும் கண்ணடியிலே வெளியாயிற்று. சூரத்து முஹம்மதாகிய நூறு பிறந்தது. இந்த நூறிலே தன்னை ஷுஹூது செய்து தரிசித்து. அந்த சூரத்துக்கு ஜிஸ்மு, நப்சு, அக்லு, றூஹு, கல்பு, லத்தீபத்து ஆகியவை பிறந்தன. ஆன தால், ஜிஸ்மாவது துருபு மண் நப்சாவது மாவு தண்ணீர்

அக்லாவது ஹவாவு காற்று, நூறாஹுறாவது நாறு நெருப்பு, கல்பாவது நூறு ஒளிவு, லத்தீபாவது சிர்ரு தாத்து. ஆனதால், இந்த ரகசியத்தை துருபு, மாஉ, ஹவாவு, நாரு, நூறு, சிர்ரு என்னும் இந்த ஆறையும் ஆரிபீன்கள் (சு-ன-ன்-ஹி-ம்-து) என்று ஆறு ஹருபாக்கினார்கள்.

சிர்ரு என்பது தாத்து; நூறு என்பது சிபாத்து, இவையிரண்டும் அசரமானவையிருக்கும் உள் கோலம்; மற்றது நாரு, ஹவாவு, மா்வு, துருபு என்று, றூஹ அக்லு, நப்சு, ஜிஸ்மு இது நாலும் தபீஅத்தாயிருக்கும் வெளிக்கோலம். ஆனபடியால், (சு-ன-ன்-ஹி-ம்-து) என்னும் ரம்ஸை, ஆரிபீன்கள் மப்தஉ, மஆது என்று ஷஹாதத்தாக்கினார்கள். அதானுஸாரல், உறூஜ்உடைய ஷுஹூதத்திலே துருபென்னும் ஆலம் இன்வது, இந்த ஷுஹூதத்திலே துருபென்னும் ஆலம் இன் சானை விட்டும், மாவு என்னும் ஆலம் அஜ்ஸாமை விட்டும், ஹவாவென்னும் ஆலம் அர்வாஹை விட்டும், நாரென்னும் ஆலம் மிதாலை விட்டும், நூரென்னும் மலக்கூத்து அதனைவிட்டும், சிர்ரென்னும் மலக்கூத்து சுஉலாவுலேயேறி, ஜிஸ்மு, நப்சு, அக்லு, றூஹு, கல்பு, லத்தீபத்து, நாசூத்து, மலக்கூத்து, ஜபரூத்து, லாஹூத்து என்னும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இது நான்கும் பனுவாகி, லத்தீபத்தென்னும் இல்மிலே தன்னை அறிந்து, வுஜூதென்னும் றப்பை அறிந்தால், ஜிஸ்மென்னும் அனாசிய்யத்திலே ஹவிய்யத் பொதிந்த மக்காமெல்லாம் வெளியாகும். வுஜூது, இல்மு, நூறு, ஷுஹூது இன்னும் இதற்குபேர் நாசூத்து, மலக்கூத்து, ஜபரூத்து, லாஹூத்து.

இன்னும் நப்சு, அக்லு, றூஹு, கல்பு நப்சாகிறது மனம்; அக்லாகிறது புத்தி; றூஹு ஆகிறது அகங்காரம் கல்பாகிறது சித்தம்; ஆகையால் மனமென்னும் நாசூத்து தன் வுஜூதை விட்டும் புத்தி என்னும் மலக்கூத்தாகிய இல்மை பனுவாக்கி, அகங்காரமென்னும் ஜபரூத்தாகிய நூறை விட்டும் சித்தமென்னும் லாஹூத்தாகிய கல்பு முஹம்மதான குதுஸிய்யத்தாகிய றூஹைத் தரிசனை பண்ணினால், அந்தத் தரிசனை சித்தமென்னும் குதுஸிய்யத் தாகிய றூஹை வுஜூதாகவும், அகங்காரம் ஹகீக்கத் தென்னும் இல்மாகவும், புத்தி ஆலமென்னும் நூறு முஹம்மதிய்யாவாகவும், மனம் இன்சானென்னும் ஷுஹூதாகவும், தன்னை அறிந்து தான் ஹக்கென்கிற வுஜூதுக்கு ஹக்கென்கிற கண்ணுடியிலே. ஆலமென் னும் ஞூரத்து முஹம்மதாகிய இன்சானின் கோலமாயிருக் கிறதென்று றப்பை அறிந்தால் (ஆனதால்) அல்இன்சானு சிர்ரீ வஅன சிர்ருஹு என்று அல்லாஹு வதஆலா ஹதீது குதுஸியில் திருவுளமானதும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மன் அரப நப்சஹு பகத் அரப ரப்பஹு என்று திருவுளமானது போலுமாம்.

ஆகையினுல், இப்படியெல்லாம் அறியவும் காணவும் இயலாது; ஆனபடியால், முருக்கபா முஷாஹதாவைக் கொண்டு எல்லா ஹாலிலும் பராக்காயிருக்க விதியாயிருக் கும்.

இனி முருக்கபாவின் மஅனுவாகிறது, தன்னுடைய அன்னியத்தை நபீச் செய்வதும், தன்னுடைய ஹாவி யத்தை இதுபாத்துச் செய்வதுந்தான் முருக்கபாவாகும். அறிந்துகொள் தாலிபானவனே! அன்னியத்தை நபீச் செய்வது எவ்விதமானுல், வுஜூது, இல்மு, நூறு

ஷுஹூது, தாத்து, சிபாத்து, அஸ்மா, அப்ஆலாக விருக்கும். தாத்தென்பது தன்னுடைய உள்ளமை; சிபாத்தென்பது தன்னுடைய ஹயாத்து; அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பார்வை, பேச்சு ஆகியவை போற்கொத்ததாயிருக்கும். இனி அஸ்மாவென்பது, தன்னுடைய எல்லாத் தத்துவங்களுமாயிருக்கும்.

அப்ஆலாகிறது, தன்னுடைய எல்லாச் செயலுமாயிருக்கும். இவைகளெல்லாவற்றிலும் தன்னை இல்லாமையாக்கி, கண்ணை மூடி கல்பைத் திறந்து, நானில்லை அவன் தானெனக் காண்கிறது தான் முருக்கபாவாகும். ஆகவே, அதன்படி கலிமா லாயிலாஹ இல்லல்லாவுக்கு மஅனா—லா அன இல்லா ஹூ என்பதாகும்.

இந்த மஅனா றுபூபிய்யத்துடைய முஷாஹதாவாயிருக்கும். இந்த முஷாஹதாவிலே, உபூதிய்யத்தை விட்டும் புரளாமல் இருக்க வேண்டும். ஆனதால், தாலிபானவனே! உபூதிய்யத்துடைய புறத்தால், நன்மை வருந்துரையெல்லாம் றப்புடைய புறமாகவும், தீமை வருந்துரையெல்லாம் அப்துடைய புறமாகவும் செய்து, உம்மை ஏவப்பட்டதுபோல் செம்மையாய்நின்று வணங்கிக்கொள்.

இனி, முஷாஹதா வென்பது தாத்துக்கு இஸ்மாகிய அல்லாஹ்வென்னும் ஜாமிஆன இஸ்மை கல்பிலே தரிசனை பண்ணுவது, இதுவும் அல்லாஹு தஆலாவுடைய மள்ஹரில் நின்றும் ஒரு மள்ஹரு; இந்த மள்ஹரிலே ஹக்கு தஆலா ஹூலூலும், இத்திஹாதும் இன்றியே தஜல்லியாகிறானென்று. இப்படி தரிசனை பண்ணாவிட்டால், முஷபிக்கென்றும் இதைத் தானே நாயனென்று எண்ணினால் காபிரென்றும், நாயன் வேறே அடிமை வேறே

என்று எண்ணினல் முஷ்ரிக்கென்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளஞ் செய்திருக்கின்றார்கள். இன்னும் இந்த ஜாமிஆன இஸ்மு தனக்கு ஹயாத்தாகவும், தான் மவுத்தாகவும் காண்பது. அஃதெவ்விதமென்றால் மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கைக் கொண்டுதான் நாம் ரூபமாயிருக்கின்றோமென்றும், ஆனல் மண்ணுக்குத் தண்ணீரில்லாமல் செம்மையாகாது; அதுபோல், பாலில் நெய் கலந்ததுபோல் ஜிஸ்மென்னும் ஜடலத்தில் இஸ்மென்னும் றப்பு கலந்திருக்கிறதென்று அறிந்து ஜிஸ்மென்ற ஜடலம்தான் மவுத்தென்றும் இஸ்மாவது அல்லாஹ்வென்றும், அவன் ஹயாத்தென்றும், ஹயாத்தானது உயிரென்றும், மவுத்தானது உடலென்றும் கல்பிலே நிறுத்திக் காண்பதுதான் முஷாஹதாவாகும். அதுவே அல்லாமல், தன் உடலாவது தன் உஸ்தாதுடைய உடலாவது றப்பாக விருக்கிறதல்லவென்று அறிந்துகொள்.

தாலிபானவனே! மேலே சொல்லி வந்த லா அன இல்லாஹு என்னும் கலிமாவில், அனவென்கிற அன்னியத்தும் ஹூவென்கிற ஹூவிய்யத்தும் உண்டு. ஆனதால், அந்த அனவென்னும் ரம்சுக்கு இலக்கம் ஐம்பத்தொன்று உண்டு; அந்த ஐம்பத்தொன்றுக்கும் விபரம்:-

ஜவ்ஹறு, ஜிஸ்மு, நப்சு, முன்தபிஅத்து, அக்லு, கல்பு, றூஹு சுபுலி, றூஹு உல்வி, றூஹு குதுசி, நூறு, நாரு, ஹவாவு, மாவு, துறுபு, ஹயாத்து, இல்மு, இராதத்து, குத்ரத்து, சம்உ, பசறு, கலாம், தவ்க்கு, ஷம்மு, லம்சு, கியாலு, வஹ்மு, பிக்று, திக்று, ஹிஸ்ஸு, ஷுஜாஅத்து, ஜுபானத்து, றுஊனத்து, கப்லத்து,

குத்ரத்து, ஜாதிபத்து, மாசிக்கத்து, ஹாளிமத்து, முமய் யிசத்து, தாபிஅத்து, முன்மிஅத்து, முசவ்விரத்து, முவல் லிதத்து, கிப்பத்து, திக்லு ஆகக் கூடியது நாற்பத்து நான்கு. இன்னும் அதில் சொல்லி வருகிறது:- றூஹு சுப்லியுடைய ஹறூரத்து, புறூதத்து, றுத்தூபத்து, யெபூ சத்து ஆகிய நான்கும். இன்னும் றூஹு உல்வியுடைய வாடை நஜீசு இரண்டும், இன்னும் றூஹு குதுசியுடைய தஹாறத்து ஒன்றும் ஆகக் கூடியது ஐம்பத்தொன்று. அந்த ஐம்பத்தொரு அட்சரத்தையும் நபீச் செய்யவேண் டும்.

உடலுக்கு ஷஹ்வத்தும், உறுப்புக்த குவ்வத்தும் வருகிறது. லாஹூத்துடைய ஆலம்நாரு என்ற நெருப்பு வயிற்றிலும், ஹவாவென்னும் காற்று தொப்புளிலும், மாஉ வென்னும் தண்ணீர் நாக்கின் கீழேயும், துறூப்பென் னும் மண் விலாவிலும் இந்த நான்கும் அறிசிறு: (நிறம்) வெள்ளை, சிகப்பு, பச்சை, கருப்பு ஆகியனவாம்.

இனி ஹயாத்து நெருப்பைக் கொண்டும், இல்மு காற்றைக் கொண்டும், குத்ரத்து மண்ணைக் கொண்டும், சம்உ காது கொண்டும், பசறு கண் கொண்டும், கலாம் நாவு கொண்டும் தரிபட்டன.

தவ்க்கு சுவைத்தறிவு, ஷம்மு முகர்ந்தறிவு, லம்சு தொட்டறிவு, கியால் இல்லாததை உண்டென்று மனும லறிகிறது; வஹ்மு இல்லாததை உண்டென்று விழிப்பில் காண்கிறது; பிக்ரு துன்யாவுடைய விஷயத்தில் ஆலோசிக் கிறது; திக்று மறந்ததை நினைக்கிறது; ஹிஸ்ஸு ஐயறிவு; ஷுஜாஅத்து வீரத்தனம்; ஜுபானத்து கோழைத்தனம்;

றுஊனத்து இயலாமை; கப்லத்து மறந்திருக்கிறது; கது ரத்து கலக்கமாயிருக்கிறது.

இனி ஜாகிபத்து உண்ட உணவை இழுத்துக்கொண்டு போய்ப் பெருங் குடலில் சேர்க்கிறது. மாசிக்கத்து இதைத் துவைப்பது. ஹாளிமத்து இதைச் செரிக்க வைப் பது. முமையிஸத்து இதைத் தெளிவு வேறே கழிவு வேறே பிரிக்கிறது; தாபிஅத்து தெளிவைக் கல்லீரலில் ஏற்றி, அதிலிருந்து தெளிவில் கழிவு பிரித்து தெளிவை மூளையிலேற்றி வைக்கும்; தெளிவை எல்லா நரம்புகளி லும் ஏற்றி சரீரத்தை வளர்க்கும்.

முசவ்விரத்து சூரத்து கொடுக்கிறது. முவல்லிதத்து நுத்பத்தைக் கர்ப்பத்திலே வைத்துப் பிள்ளையாகச் சமைக்கிறது. கிப்பத்தும் கிகலும் ஆகிய இரண்டும் சரீரத்துடைய இலேசும், கனமும்; ஹாராரத்து அக்கினி பித்தம்; புருதத்து குளிர்ச்சி, வாதம்; றுத்தூபத்து ஈரம் சிலேற்பனம்; யபூசத்து வரட்சி, சடம்; இனி கிபு-குபுது நல்லது கெட்டது. தஹாரத்து துப்பரவு ஆக ஐம்பத்தொரு அட்சரத்தின் முடிவு. இனி உஜூது—உள்ளமை; கிதம்-பூர்வீகம்; பக்கா-முடிவுற்றிருப்பது; முகாலபத்துன் லில் ஹவாதிதி-ஒப்புவமையில்லாதிருப்பது; கியாமுஹூ பிநப் சிஹி—தனியே தானே நிலைபட்டது. சமதானிய்யத்து-எல்லா உலகமும் நிறைந்திருப்பது; வஹதானிய்யத்து—ஒருவனுயிருப்பது; இலாஹிய்யத்து—நாயகத்தனமானது; ரப்பிய்யத்து-படைத்து வளர்க்கிறது; ரஹ்மானிய்யத்து-எல்லோருக்கும் ஒன்றுபோல் கிருபை செய்கிறது; முல்க்கியத்து—ராஜாங்கம் ஆள்கிறது ஆகக்கூடிய இவை ஹூவி யத்து பதினொன்றுக்குள்ளது அறியவும்.

முன் சொல்லப்பட்ட தாமரைக் காயில் சதறு, கல்பு, புவாது, லுப்பு, ஷிஆஉபு இவ்விதம் நப்சு அம்மாறு, லவ்வாமா, முல்ஹிமா, முத்மஇன்னு, ருளிய்யா, மற்ளிய்யா காமிலா ஆகப் பன்னிரண்டில் ஒவ்வொன்றுக்கும் எவ்வேழு கருமம் உண்டு. ஆகக் கூடிய எண்பத்தி நான்கும் கலேக்கியானமாகவும், அந்தப் பன்னிரண்டுடன் தொன்னூற்றாறு தத்துவமாகவும் முன் சொல்லிய நப்சென்ற பலக்குல் ஹயாத்தில் பன்னிரண்டு புறூஜு-ம், இருபத்தேழு மன்ஸிலும், மற்ற ஏழு நட்சத்திரமும் அடையுமிடமுண்டு. அந்த ஏழும் வருமாறு:- இல்மு, திக்று, பிக்ரு, அக்லு, வஹ்மு, கியாலு, ஹிஸ்ஸு.

இனி, புருஜு பன்னிரண்டில் ஜத்தி தல்வு இவ்விரண்டும் ஸுஹலென்ற இல்மு அடையும் தலமாகவும், கவ்சு ஹூத்து இவ்விரண்டும் முஸ்தரி என்னும் திக்ரு, இராதத்து அடையுமிடமாகவும், ஹம்லும் அக்ரபும் மிற்றீஹ் என்னும் அக்லு குத்ரத்து அடையும் தலமாகவும், அசது மட்டும் ஷம்சு என்னும் பிக்ரடையும் தலமாகவும், தவ்று மீஸான் இரண்டும் ஸுஹறு வென்னும் வஹ்மு அடையுந் தலமாகவும், ஜவ்ஸான் சும்புலத்து இவ்விரண்டும் அதாரிது என்னும் கியாலடையுந் தலமாகவும், சறுத்தான் மட்டும் கமரென்னும் ஹிஸ்ஸடையுமிடமாகவும் இருக்கும். இன்னும் ஹவாசு சம்உ பசறு கலாம் அடையுந்தலம் 27, மஞளீல், ஷர்த்தீன், பித்தீன், துரைய்யா, தபரான், ஹக்அத்து, ஹன்அத்து, திருஉ, மருத்து, தர்பத்து, ஸுபுரத்து, சிறுபத்து, உவா, சம்மாக்கு, உபுறபாபு, இக்லீலு, கல்பு, ஷவ்லத்து, நஆயிமு, பல்தத்து, சஅதுத்தாபிஹு, சஅதுசுஊது, சஅதுல் அக்பிய்யாத்து, தல்வுல் பருவுல் முகத்தம், தல்வுல் பருஉல்மு அக்கறு இவைகளாயிருக்கும்.

இன்சானிலே ஏழு பூரி உண்டு. அதாவது ஜில்து, ஷஃறு, லஹ்ம், அஸ்பு, டதுலாத்து, உறூக்கு, இளாம், இன்னும் முவல்லிதாத்து மூன்றும். பலக்கு, ஜின்னு, இன்சு என்ற மலக்கானி, ஷெய்த்தானி, நப்சானி என்ற மூன்று சத்ருவுமுண்டு, அதனாலேதான் வேறுபடுகிறது.

தாலிபானவனே! இன்சானுக்கு நான்கு நப்சும் நான்கு றூஹுமுண்டு. ஆனதால், அந்தந்த நப்சு அந்தந்த றூஹுக்கு வழிப்பட்டு நடந்தால், சீதேவியென்று பெயர் பெற்று சொர்க்கம் புகுதும். இனி றூஹு நப்சுக்கு வழிப்பட்டு நடக்குமானால், மூதேவியாகி நரகம் புகுதும்.

தாலிபானவனே! முந்தின நப்சாகிறது அம்மாரா. அதன் குணமானது ஷெய்த்தானிய்யாவாகும்; கெடுதிகளின் பக்கமே இழுக்கும். இரண்டாவது நப்சு லவ்வாமாவாயிருக்கும்; இதன் குணம் இபாதத்தை விட்டதைப் பற்றிப் பழிக்கும்; மற்றக் கெடுதிகளெல்லாஞ் செய்யும். நன்மையுந் தின்மையும் கலந்து செய்யும்; எனவே, மிருகத்திற்கு ஒப்பாகும்: மூன்றாவது நப்சு முல்ஹிமாவாகும். இதன் குணம் மலக்கானி; இபாதத்தை மிகுதஞ் செய்யும்; வேறு பராக்கேயிராது. நான்காவது நப்சு முத்மஇன்னா. இதன் குணம் ரப்பானிய்யா; ரப்புடைய ஏவலுக்கு அடங்கி நடக்கும். ஆனதினால் ரப்பானி ராஜாவாயிருக்கும். மலக்கானி இதன் சொல் கேட்டு நடக்கும் சேவகனாயிருக்கும். நப்சானி இந்த ராஜாவுக்கு அடிமையாயிருக்கும். ஷெய்த்தானியாகிறது இந்த ராஜாவுக்கும் பகைவனாயிருக்கும். ஆகையால், இந்த ராஜாவுக்கு சிம்மாசனம் கல்பாயிருக்கும். அறிந்துகொள்! முத்தின றூஹாகிறது நாமிய்யத்து இந்த றூஹு ஜடலத்தை வளர்க்கும். இரண்டாவது

றூஹாஹிறது முத்தஹர்ரிக்கத்: இந்த றூஹு உடலத்தை ஆட்டுவிக்கும். மூன்றும் றூஹு நாசிறாது நாத்திக்கத்: இந்த றூஹு எல்லாத் தத்துவமுங் கொடுக்கும். நான்காவது றூஹு குதுஸிய்யத்: இந்த றூஹு ஏவுதல் செய்யும். இந்த றூஹில் குதுஸி தாத்தைப் போலாகும். மற்றவை ஸிபாத்து, அஸ்மாஉ, அப்ஆலாகும்.

ஆனதினால் தாத்துக்கு ஸிபாத்து ஏழுண்டு. அதாவது ஹறு பக்காஉ, இல்மு, ழியாவு, தஹாரத்து, உல்பத்து, ஹறு ரத்து, நப்சு இந்த ஜோதியான ஸிபாத்துக்கு அறுதியான ஸிபாத்தாவது தீபு, இல்மு, ஹயாத்து, றீஹு, நாறு, நூறு, அம்று ஆகியவையாயிருக்கும். இனி ஆதியான ஸிபாத்தாவது ஹயாத்து, இல்மு, இருதத்து, குத்ரத்து சம்உ, பசறு, கலாம் ஆகியவையாயிருக்கும்; இதன் விபரம் மேலே சொல்லப்பட்டிருக்கிறது.

தாலிபானவனே! அந்த ஜோதியான ஏழு ஸிபாத்துங் கூடியிருக்குந்தலமாவது, வுஜூது. தனபென்றும், வுஜூது இழாமென்றும், சுல்பென்றும் சொல்லி வந்த மூலமாயிருக்கும். ஆனதினாலே, பக்காவென்னும் ஸிபத்துக் கொண்டு அழியாதிருக்கும். இல்மியென்னும் ஸிபத்துக் கொண்டு அறிவுள்ளதாயிருக்கும். ழியாவென்னும் ஸிபத்துக் கொண்டு ஒளிவாயிருக்கும். தஹாரத்தென்னும் ஸிபத்துக் கொண்டு அன்னியத்தை விட்டுத் துப்புரவாயிருக்கும். உல்பத்தென்னும் ஸிபத்துள்ள ஹாவியத்தைக் கொண்டு மருவுதலமாயிருக்கும். ஹறாரத்தென்னும் ஸிபத்துக் கொண்டு ஜீவனுள்ளதாயிருக்கும். நப்சு என்னும் ஸிபத்துக் கொண்டு நாடியுள்ளதாயிருக்கும். இது குருக்குச் சந்தியாயிருக்கும். இந்த நாடியுள்ள சுல்பிலே எழுபத்

திராயிரப் பனிரண்டு பதம் ஒன்றுக்குச் சரம் ஒன்ருக எழுபத்திராயிரம் நாடி யுமுண்டு.

தாலிபானவனே! இந்தச் சரமெல்லாம் மூலத்திலிருந்து எழும்பி, உந்திச் சமலமென்ற கஃபாவில் வலஞ் சுற்றித் தவாபு செய்து, அங்கிருந்து நுரையீரலென்னும் அரபாத் மலையில் கூடி, அங்கிருந்து பைத்துல்லாஹ் வென்னும் சுழிமுனையில் தவாபு செய்து, பின் சபா மர்வாவென்னும் நாசித் துவாரத்தில் தொங்கோட்டமோடி, கண்ணாலே அங்குலப் பதினறுக்குச் சரம் இருபத்தெண்ணாயிரத்தெழு நூறும், காதாலே அங்குலப் நாலுக்குச் சரம் ஏழாயிரத்து முந்நூறும், வாயாலே அங்குலம் எட்டுக்குச் சரம் பதினாயிரத்து நானூறும், மூக்காலே அங்குலம் பன்னிரண்டுக் குச் சரம் இருபத்தோராயிரத்து அறுநூறும் ஆகக் கூடிய சரம் எழுபத் திராயிரமும் அன்றுடும் சொல்லிவந்த ஏற்றத்தில்படி அனவென்னும் அன்னியத்தான ஐம்பத்தொரு அட்சரங் கொண்டு ஏறித் தலைமுடி இறக்குமாப் போல் அதில் மூன்றிலொரு பங்கும் கழித்து, அன்னியத்தும் மற்ற இரு பங்குப், ஹா வென்னும் ஹாவியத்தான பதினொரு அட்சரங் கொண்டுள் புகுதும். ஆதலால், தாலிபானவனே! இந்தப் பதினொரு அட்சரமென்றது ஐந்து பூதமும் ஆறு ஆதாரமுமாயிருக்கும். ஐந்து பூதமாவது ஜிசுமு, தபீஅத்து, நப்சு, அக்லு, கல்பு.

ஆறு ஆதாரங்கள்

றூஹு கப்லி, றூஹு உல்வி, றூஹு குதுசி, சிர்ரு, ஹகீக்கிய்யா, ஹக்கு ஆகியவையாயிருக்கும்.

அறிந்துகொள் தாலிபானவனே! இன்சானுக்குப் பற்குத்தியும், கல்லீரலும், நுரையீரலும், பித்துமுண்டு. இந்த நாலையும் மேலே சொல்லி வந்த நான்கு நப்செனறு சொல்லப்படும். இந்த நாலுக்கும் வாசல்களானவை வாய், கண், மூக்கு, காது ஆகியவையாயிருக்கும். இனி இவைகளிலே இருக்கின்ற மலக்குகள் ஜிப்ராயீல், மீக்காயீல், இசுராபீல், இஸ்ருயீல் ஆவர். இனி ரசூல்மார்கள் முஹம்மது, மூசா, ஈசா, இபுராஹீம் சலவாத்துல்லாஹி அலைஹிம் ஆகியவர்களாயிருக்கும்.

இனிப் பறவைகள், வெள்ளைச் சேவல், மயில், புறா, காகம் ஆகிய நால்வுமாம். இனி மண் நிறம் வெள்ளை; தண்ணீர் நிறம் சிவப்பு; காற்று நிறம் பச்சை; நெருப்பு நிறம் கருப்பு ஆகியவையாயிருக்கும். இன்னும் 'சனவ்பர்' என்று சொல்லப்பட்ட தாமரைக் காயும், இணையாகிய இரண்டு மாங்காயுமுண்டு. இன்னும் பெருங்குடல், மணிக் குடல், சிறு குடலும் உண்டு.

அந்தப் பெருங் குடலிலே உண்டதும் குடித்ததும் போய் விழுகிறது. அந்த மணிக் குடலிலே அது அரைபடுகிறது. அந்தச் சிறு குடலிலே மலம் ஜலம் நிற்கின்றன. ஆனால் இதற்கு முன் சொல்லி வந்த ஜாதிபாவும் அதைத் துயர்ந்த ஏழும் ஆக எட்டுக் குவ்வத்தும் உண்டு.

முந்நூற்றறுபது நரம்பும், ஐநூற்றெழுபது களஞ்சி இரத்தமும், இருநூற்று நாற்பத்தெட்டு எலும்பும் முந்நூறு களஞ்சி மூளையும், ஆறு ராத்தல் மாமிசமும், சவ்வும், நுரையும், தொலியும் ஆறுலட்சம் ரோமமும் உண்டு. இப்படியெல்லாம் தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்தவனாகிறான்.

இன்னும் தன்னை அறியும் விதம் எப்படி என்ருல், தாலிபானவனே! இன்சானுகிறவன் ஐம்பத்தொரு அட்சரங் கொண்டும், கலிமாவைக் கொண்டும் படைக்கப்பட்டவன்; ரஹ்மானுடைய சூரத்தாக இருக்குமென்றது. ஐம்பத்தொரு அட்சரமாவன:- அலீப் பே எழுத்து இருபத்தொன்பதும், அதன் நுக்கத்து இருபத்திரண்டும் ஆக ஐம்பத்தொரு அட்சரமாயிற்று. அந்த இருபத்தொன்பது எழுத்தினுல் நமது உடல் அமைந்த விபரம் கீழே வருகிற பாடலைப் படித்தால் விளங்கும்.

தொங்கல்

மானிட தேகத்தில் 28-எழுத்துக்கள்

அறியுங்கள் இன்சான் படையுண்டது
ஆகு மெழுநான்கு எழுத்துண்டதில்
நெறியாய் அலிபு ஐன்நடுவே வைத்தான்
நேச பேத்தேயும் புருவமாச்சு

மறுதேய் நெற்றியாம் தலைஜீமுமாம்
மற்ற ஹே கேயும் தோட் புயமாம்
உறுதி தால்கால் இதால் இடைக்கால்
உற்ற றே ஸேயும் விலாக்குடையாம்

இன்னுங்கேள் மார்பு சீனும் ஷீமும்
இணங்குங் காதுதான் சாதும் ளாதும்
பின்னும் தோய் ளோயும் கால் மொளியாம்
பேசும் ஐன் ஙைன் இடக்கையதாம்

உன்னும் எழுத்து பேய் வலப்புறமாம்
ஊக்குள்ள காபு இடப்புறமாம்
நன்னுங் காபுதான் முதுகந் தண்டு
லாம் முழங்காலும் மீம் மூளையாம்

மொழியும் நான்மக்காம் லாவு தொப்பும்
உகந்த ஹே கல்பு லாம் அலிபு
அழிவில்லா சுல்பு பேய் றாஹென் றாம்
ஆக்கினன் அல்லாஹ் வணக்கத்திலே.

ظهرت الى خلقى بصورة ادمى وقررت هذا فى الشريعة ايمانا

ளஹர்த்து இலா கல்க்கீ பிசூரத்தி ஆதமி
வகற்றர்த்து ஹாதா பிஷ்ஷரீஅத்தி ஈமானன்.

ஆதமுடைய சூரத்துக்கொண்டு என்னுடைய கல்க்கு களளவில் வெளியானேன். அந்த சூரத்தை ஷரீஅத்தில் ஈமானுடைய கலிமா லாயிலாஹ இல்லல்லாஹு என்று தரிப்படுத்தினேன். ஆகையால் அதன் விபரமாவது, முஹம்மதுர் றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமாகிறவர்கள் அல்லாஹு தஆலாவுடைய திருத் தூதராயிருக்கிறார்கள் என்பதே. இனி உடலுக்கு உயிராவது.

தன்னை அறியும் விபரம்

இலாஹு அல்லாஹ் என்னும் ஏழு எழுத்தாகவும், உடல் லாஇல்லா ஐந்தெழுத்தாகவும் இருக்கிறது. அஃதெப்படியெனில், இரண்டு காலும் லாவென்னும் எழுத்து; மூலம் இலாஹு வென்னும் எழுத்து; முகம் அல்லாஹ் என்னும் எழுத்து; லாயிலாஹ இல்லல்லாஹு வென்றுயிற்று. இதற்கு மஅனா லா அன இல்லாஹு நானில்லை, அவனே ஒழிய வென்பது.

மூண்டகக் கமலத்தெழுத்து அளவும், உந்திக் கமலத்தெழுத்து வாவும், இருதயக் கமலத்தெழுந்து ஹேயும் ஆக அன ஹூவென்ருயிற்று. ஆனதால் நானில்லை அவனுண்டென்ருயிற்று. இதே விதம் தான் தன்னை அறிந்தவன் தன் நாயனைத் திட்டமாக அறிவானென்றது. ஆனதால் இப்படிக் கலிமாவை அறிந்து வணங்குவதுதான் வணக்கமாகும். பல பல கோலமாக அறிகிறதும் காண்கிறதும் நபியாயிருக்குமென்று ஷெய்கு ஷிபுலி ரஹ்மஹுல்லாஹ் அவர்கள் சொன்ஞர்கள்.

★

உறுாஜுன் ஹுஸூல்

யாதொரு இன்சான் தான் வயதனு யிருக்கும்போதில் தான் மற்றக் காலங்களை நினைத்து, நாம் வந்த வரலாற்றை எப்படி எங்கிருந்து, எப்படி இங்கு வந்தோம் என்று நினைப்பதுதான் உறூஜ் என்பது. அதாவது, தந்தை தாயிடம் வருமுன் எங்கே இருந்தோம்? தாய் தகப்பனில் எவ்விதம் வந்து கலந்தோம்? இனி இவ்வுலகை விட்டுப் பிரிந்தால் எங்கே போவோம்? அதற்குள்ள ஆதாரங்களைத் தேட வேண்டுமே; அதைத் தேடிக் கொண்டாலல்லவோ அங்கே நலம் பெறலாம்; வெறுமனே போனால் கைசேதப் படலாகுமே; நாம் வரும்போது நாயன் அமானிதமாகத் தந்தனுப்பிய அமானிதத்தைத் தாவென்று கேட்பானே! என்றெல்லாம் நாம் வந்ததையும் என்னென்ன செய்தோமோ அவைகளையும் நினைப்பது, இதற்கு முன் வாலிபனாக இருந்தோம்; அதற்கு முன் மதலையாகவிருந்தோம்; அதற்கு முன் மடிப்பிள்ளையாக விருந்தோம்; அதற்கு முன் மாதாவின் வயிற்றிலிருந்தோம்; அதற்குமுன் தாய் தந்தையின் சிரசிலிருந்தோம்; அதற்கு முன் அவ்விருவரின் தேக முழுவதிலுமாக இருந்தோம்; அதற்கு முன் அவ்விருவர் தின்ற பதார்த்தங்களிலிருந்தோம்; அற்குமுன் பழ வர்க்கம் தழை குழை மாமிசம் மச்சங்களிலிருந்தோம்; அதற்குமுன் மண்ணிலிருந்தோம்; அதற்குமுன் தண்ணீரிலிருந்தோம்; அதற்கு முன் காற்றிலிருந்தோம். அதற்கு முன் நெருப்பிலிருந்தோம்; அதற்குமுன் தபீஅத்தாயிருந்

தோம்: அதற்குமுன் அல்லிதாத் தென்னும் ஜாமாதத்து, டாத்து, ஸிஹ்வாத்துகளும், ஆதுபிகளாகவும், லஹுஹு, கலம், அர்ஷு இந்த அப்ஸாகங்களும், அதற்கு முன் அர்ஷில் மையாவென்னும் பிதாதுடைய ஆதைந் திருந்தது. அதற்கு முன் காபிரீன்களாகவும், பாசிக்கீன்க ளாகவும், முஃமினீன்களாகவும், சாலிஹீன்களின் உரு மாக்கள், அவ்லியா, அக்தாபுகள், அம்பியா, முர்ஸலீன் கள், உலுல் அஸ்மி, ஆதம், நூஹு, இப்றாஹீம், மூஸா, ஈசா, இன்சானின் ஹகீகத்தாகவும், முஹம்மது இன்னு நூறு, ஷுஹூது, என்னும் ஜுஹூத்திலிருந்து நூறு முஹம்மது என்னும் ஹாஹூத்தின் மூலங்களாகவும், ஜம்ஹூத்துடைய ஆலத்தில் மூஜ்பமாகவும், காணல் லாஹூ வலா ஷைஅ மஅஹூ அல்லாஹு வதஆலா ஒரு வஸ்துவுமில்லாமல் அவன் தானே தானாக இருந்தானே, அவன் இல்மென்னும் அறிவிலிருந்ததென்று உணரு என்ற ஏற்றத்திலே; அனவென்றும் இங்கே இருந்து இனி தான் வயதனுப் போய்விடுகின்ற இரக்கத்தில் ஹூவென்று இருக்கிறதென்று அறிகிறது. இப்படி அறிந் தவன் தன் நாயனை அறிந்தானென்றது. அல்லாஹு வதஆலா திருவுளமானன்:-

وَاعْبُدْ رَبَّكَ حَتَّى يَأْتِيَكَ الْيَقِينُ

அல்லா திருவுளமானன் முஹம்மதே உம்முடைய நாயனை வணங்கும் மட்டத்தளவும் என்று. வணக்கம் மூன்று காரியமாக இருக்கும். ஒன்றுவது இஸ்லாம், இரண் டாவது ஈமான், மூன்றுவது இஹ்சான்; இனி இஸ்லாமா வது ஐந்து காரியம் கொண்டுள்ளது.

الاسلام ان تشهد ان لا اله الا الله وان محمدا رسول الله وتقيم الصلواة وتؤتى الزكوة وتصوم رمضان وتحج البيت ان استطاع اليه سبيلا

நபி நாயகம் திருவுளமானூர்கள். இஸ்லாமாவது, நீ அறிந்து சாட்சி சொல்கிறது. என்னவென்றால், வணக்கத்துக்குத் தகுமான நாயன் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவே அல்லாது வேறில்லை என்றும் முஹம்மதாகிறவர்கள் அல்லாஹ்வுடைய ரசூலென்றும் நீ சாட்சி சொல்வது. ஆனால் நீ சாட்சி சொல்கிறதற்கு கண்ணால் காண்பது ஷர்த்தாயிருக்கும். ஆனதால், ஷெய்கு அப்துல் கரீமுல் ஜீயலி கத்தஸல்லாஹு சிர்ரஹு சொல்கிறார்கள்.

اى انظر فى عينى شهودا ان لا فى الوجود شيئى الا الله

என் கண் கொண்டு தரிசனையாகக் கண்டேன். ஆலத்தில் அல்லாஹ் அல்லாத தொன்றுமில்லை என்று, இந்த விதம் அறிந்து கலிமா சொல்லுவதுதான் ஈமானென்றது. இந்த ஈமானென்றது இஸ்லாம் ஐந்து காரியத்தில் ஒன்றாயிருக்கும்.

இரண்டாவது தொழுகை நிலைபடத் தொழுவது இதுதான் இஹ்சானென்றது.

இஹ்சான் என்றால் என்ன?

الاحسان ان تعبد الله كانك تراه

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுள மானார்கள் :- இஹ்சானென்கிறது அல்லாஹு வதஆலாவை நீ வணங்குவது அவனைக் கண்டது போலே. ஷெய்கு தாவூதல் கைசரிய்யு ரஹ்மஹுல்லாஹ் அலைஹி சொல்கிறார்கள் யாதொரு முசல்லி தன் தொழுகையிலே நாயனைக் காணாது தொழுவானேயானால் (அல்லது றூஹானியானான காட்சி யாக அல்லது கல்பியானான காட்சியாக அல்லது கியாலியா வான காட்சியாக காணாது போனாலும், ஆண்டவன் தன்னைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறானென்று பயங்கரத்துடன் தொழுகா விட்டால்) அவன் ஹக்கைத் தொழுதவனாகான். வெளிப்பட அத் தொழுகை காளியுடைய தண்டனையை தடுக்குமே அல்லாது ஹக்கைத் தொழுததாகாது. அவ் விதம் வீண்போகாமல் நமது நபி நாயகம் முஹம்மது ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹக்கு தஆலாவை எவ்விதம் அதபுடன் தொழும்படி ஏவி இருக்கிறார்களோ அவ்விதம் மக்பூலான தொழுகையாகத் தொழுகிறதற்கு அல்லாஹ் வதஆலா அவனுடைய ரஹ்மத்தென்னும் உதவியை நம் அனைவர் மீதும் சொரிந்தருள்வானாக! ஆமீன் யாரப்பல் ஆலமீன்!

فمن كان يرجوا لقاء ربه فليعمل عملا صالحا ولا يشرك
بعبادة ربه احدا

அல்லாஹு தஆலா திருவுளமாகிறான்; யாதொருவன் தன் நாயனுடைய தீதாரை ஆதரவு வைத்தானேயானால், அவன் சாலிஹான அமல் செய்யவும், அவனுடைய நாயனை வணங்குகிறதிலே ஒன்றையும் இணை வைக்க வேண்டாமென்று.

عبدنا الهوى ايام جهل واننا
لفى خمرة من شكرنا فى شرابه
وعشنا زمانا نعبد الحق للهوى
من الجنة العليا وحسن ثوابه
فلما تجلى نوره فى قلوبنا
عبدنا رجاء للقا وخطابه

சாலிஹான அமல் என்னவென்றால் ஷெய்கு முஹியித்தீனுபுனு அறபி கத்தசல்லாஹு சிர்ரஹுல் அஜீஸ் திருவுளமானார்கள்; நாயனை அறிவில்லா நாளையில் நாம் வணங்கினதெல்லாம் ஹவாவுக்கே. நாம் இந்த ஹவாவென்னுங் கள்ளைக் குடித்து மஸ்திலிருக்கும் ஹாலிலே வணங்கினோம். பின் சில காலம் உயர்த்தியாகிய சொர்க்கம் அதன் நிஃமத்துடைய ஆசைக்காக வணங்கினோம். பின்பு மஃரிபா வென்னும் நூறு நமது கல்பிலே வெளியான போது, ஹக்குடைய தீதாரையும் அவனிடம் வார்த்தை

யாடுவதையும் ஆதரவு வைத்ததற்காக வணங்கிறோம்.
ஆனதால், அல்லாஹுத் தஆலா நம் அனைவோர்களுக்
கும் அவனை அறிகிற மஃரிபத் தென்னும் ஒளியை நம்
கல்புகளிலே தரிபடுத்தி அவனுடைய தீதாரைக் கொண்டு
வணங்கத் தக்கதாக நல்லுதவி தருவானாகவும். ஆமீன்
யாரப்பல் ஆலமீன்!

சோபன வாழ்த்து

உங்களுக்குச் சீதேவித் தனத்தைத் தந்த நாயனுடன் முனாஜாத்துச் செய்ய வேண்டி இரவுகளினிருளில் நின்று வணங்கினேரே அவனைப் பயந்ததற்கும் ஆசை கொண்டதற்கும் அவன் விலக்கல்களை தவிர்த்து தொழுகை முதலான வணக்கங்களை வாழ்வாக எடுத்துக் கொண்டீர்கள். அவனல்லாத வஸ்து அடங்கலையும் லாஹிரிலும் பாத்தினிலும் இல்லாமையாகக் கொண்டு அவன் வுஜூதை ஒன்றையே தரிசிப்பதென்னும் அமிர்தத்தை அருந்தி திக்ரென்னும் ஒட்டகையில் நடந்தீர்கள். அதன் கால் மடிக்கும் துறையெனும் மக்ருதை எத்தி வைக்கும் வரையில், ஆகையால் சிறப்புத் தங்கிய இந்தப் பொன்னுலகத்தில் ஐயம் பெற்றீர்கள்; வாசம் பெற்றீர்கள். அதில் நின்றும் ஊழிகாலம் வாழுங்கள் என்று சோபனச் சொல்லும் கேட்பீர்கள் என்ற மதுரம் பொருந்திய இம்மொழிகள் நடக்குமே அவ்விதமான சொர்க்கம்.

நாயனே அன்பியா, அவுலியா, ஸாலிஹீன் சகலரையும் ஜன்னத்தில் நின்றும் ஒரு தலத்தில் சேகரித்த நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், பீவி மரியம் ஆசியா அலைஹி மஸ்ஸலாமுக்கும் திருமணக் காட்சி பெறவேண்டி. ஒளி தங்கிய மஹ்மூதென்னும் யானையிலேறிப் பவனி வரும் அக் கூட்டத்தில் எங்களையும் சேர்த்தருள்.

ஆண்டவனே சகல மிஃமத்திலும் அதிகமான உன்னுடைய லிக்காவெனும் பெரு வாழ்வை தந்தருள். நாங்கள் கல்பு கண்ணினால் ஏதுமொரு ரூப சொருபம், பாங்கு, பரிசு, மட்டு, திட்டமன்னியில் தரிசித்ததுபோல் நீ நாடிய விதத்தில், காட்சியை நாங்கள் பெற்றுக் கொள்ளும்வரை அதாவது நாட்டம் தேட்டம் சகலமும் முடியும் முத்திரையாயிருக்கும். நாட்டத்தை நிறைவேற்றும் நாயனே! துன்யாவிலும் ஆகிரத்திலும் சகல புகழ்ச்சியும் உனக்கான தால். எங்கள் துஆவைக் கபூல் செய் நாயனே! நீ தாயி மாயிருக்கும் காலமெல்லாம், நபி முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் மீதும் அவர்கள் கிளையார் தோழர்கள் மீதும் தொடர்ந்தோர் மீதும் சலவாத்தும் சலாமும் சொல்லியருள்.

ஈமான் கொள்ளும் விதம்

الايمان عبارة عن وجدان الحق وتصديق فى القلب واقرر باللسان

ஹக்கென்கிற பார்வையாகக் கல்பு நிச்சயப்படுகிறதும் நாவில் அதுவாக மொழிவதும் இதுதான் ஈமானுயிருக்கும்.

لا وجود الا وجود الحق

இவ்விதங் கலிமா லாயிலாஹ இல்லல்லாஹுக்குப் பொருளாவது.

மெய்யான வுஜூதில்லே, ஹக்கு தஆலாவின் வுஜூதே ஒழிய பார்க்கிறவனும் பார்க்கப்பட்டவனும் அவனே அன்றி வேறில்லை.

இனி முஹம்மதுர் றஸூலுல்லாஹ்விற்குப் பொருள் அல்லாஹு வதஆலா தன்னில் நின்றும் தன்னளவில் முஹம்மதென்னும் திருநாமங் கொண்டு வெளியானு னென்றதாயிருக்கும்.

இனி இஸ்லாமின் விபரம்

انقياد النفس فى احكام الرب

அல்லாஹு வதஆலாவின் ரஹ்மானென்ற இஸ்மில் நின்றும் உண்டான பல அஸ்மாக்களின் துறைகளாகத்

தான் வெளியானதால் தன்னைத்தானே தான் நப்பெக்கிற ஹாக்குமுகனை கொண்டு வெளிப்படுத்திக் கொண்டதே இஸ்லாமென்று சொல்லப்படும். அவ்விஸ்லாமில் ஐந்து பர்ளுகள் கொண்டுள்ள ஐந்து விதமுண்டு.

முதலாவது ஈமான்

اشهد ان لااله الاالله ای انظر فی عینی شهودا ان
لافی الوجود شیئی الاالله

உண்டானதுகளில் யாதொரு வஸ்துவும் அல்லாஹ் அல்லாததல்ல. எல்லாம் அல்லாதானென்று நானும் அவனென்பதாக அவன் கண் கொண்டு கண்டு ஷாஹித் சொல்கிறேன் என்பதாம்.

இரண்டாவது தொழுகை

الصلواة نسيان ماسوی الله

அல்லா அல்லாதது உண்டென்பதை மறந்து விடுகிறது நானும் அவனே என்றெண்ணுவது.

மூன்ருவது ஸக்காத்து

الزكاة تزكية النفس

நப்ஸிய்யத்தென்னும் தன்னை வேற்றுமையில்லாமல் வுஜூது மஹனைக் கொண்டே துப்பரவாக்கிப் போடுகிறது.

நான்காவது நோன்பு

الصوم ترك التعلق من التعلق

அல்லாஹ்வின் அடிமையென்னும் நினைவும் முஹம்மதுடைய உம்மத்தென்னும் நினைவும் நீங்கி, நீங்கினோமென்றதையும் மறந்து விடுவது.

الامتناع اقتضاء البشرية والاتصاف بالصفات الالهية

மனிதனென்பதைத் தவிர்த்து இலாஹிய்யத்தான வர்ணிப்பைப் பூண்டு கொள்வது தான் நோன்பு.

ஐந்தாவது ஹஜ்ஜு

الحج النهوض من المعاد الى المبدأ

ஆலம் இன்சான் முதல் அஹதிய்யத்து வரைக்கும் வுஜூது மஹாளாகக் காண்பது ஹஜ்ஜு.

குறிப்பு:- மேலே சொல்லிய விபரங்களை ஷரீஅத்தின் அமலுடனே சேர்த்து அதே கண்ணுங் கருத்துமாகக் கொண்டு வரவேண்டுமே தவிர ஷரீஅத்தின் அமலை விட்டு அதை மட்டும் கொண்டு வருவதில் பாயிதாயில்லை. மேலும் இதல்லாமல் ஷரீஅத்தின் அமலை செய்வதில் நிரப்பமில்லாததால் சூபியாக்கள் ஷரீஅத்தையும் ஹகீக்கத்தையும் ஜம்உ செய்து இந்த இரண்டுவகை தவ்ஹீதையும் எடுத்து வந்தார்கள். ஆகையால் இந்தத் தவ்ஹீதை அறியாதவன் சூபியல்ல. அவனுக்கு முறாக்கபா முஷாஹதாவின் தவ்பீக்கும் ஹாசிலாகாது. இதிலொரு பேச்சு உன்னுடைய பஹ்முக்கு எட்டாது போனால் இது தப்பு என்று

சொல்லிவிடாதே. உன்னுடைய அக்லுக்குத் தோன்றின படி நடக்காதே நடக்கக் கூடாது. தெரியாததை உலமா வுல் ஆகிருக்களிடத்தில் கேட்டுப் படித்துக்கொள். இன் னுமிதில் சுருக்கமாகச் சொல்லப்பட்டதால் இதன் விபரங் களும் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்ள உனக்கு நசீ பும் வேண்டும்.

ஸலவாத்து அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் இப்பில் குலூபி வதவாயிஹா வ ஆபியத்தில் அப்தானி வஷி பாயிஹா. வநூறில் அப்சாரி வழியாயிஹா வஅலா ஆலிஹி வசஹ்பிஹி வசல்லிம்.

عين الذوق

بسم الله الرحمن الرحيم

الحمد لله رب العالمين والعاقبة للمتقين والصلوة

والسلام على سيدنا محمد واله وصحبه اجمعين

شهد الله انه لا اله الا الله والملئكة واولو العلم قائما بالقسط

அல்லாஹ் அல்லாது வேறில்லை; அறிவுடைய பேரும் அவனுடைய பணிவிடை மலக்குகளும் நீதங் கொண்டு நிற்கிறதாகவும் நீ அல்லாதது ஒன்றுமில்லை என்றும் தான் தானே கண்டிக்கிறவனென்றும்.

رب المشرقين ورب المغربين

இரண்டு உதயமாகுமிடமும், இரண்டு அடையுமிட மும் உடையவனென்றபடியாலும்,

مرج البحرين يلتقيان بينهما برزخ لا يبغيان

பஹ்றுல் வஜூதென்னும் தாத்தாகிய கடலும் பஹ்றுல் இம்கானென்ற சிபாத்து அஸ்மாஉ அப்ஆலாகிய கடலும் ஒன்றிலொன்று சந்தித்துக் கொள்கிறதாகவும், சருகவிட்டு இரண்டுக்கு மிடையிலே ஒரு அறிவு என்னுந்திரையுண்டாகி இருக்கிறபடியாலும் ஒன்றிலொன்று கலந்து கெடுதியாகி அழிவாகாத படியாலும்.

ஒரு நிறம், குணம், வர்ணிப்பு, ரூப அரூப, திசை ஒன்றுந் தரிபடாத ஒரு வஸ்துவைத் தரிசித்தேன். உடனே ஒன்றுந் தரிபடாத ஒரு வஸ்துவைத் தரிசித்தேன். உடனே பலுவாகினேன்: என்னுடைய பலுவும் அவனுடனே பலுவாயிற்று என்று இபுனு அறபி றலியல்லாஹு சொன்னபடி.

நான் தரிசித்ததாகிறது, என்னுடைய அஃனிய்யத்து அந்த அஃனிய்யத்திலே தானுக்கும் தரிசிக்கும் தலமெல்லாம் வெளியாகி இருக்கிறது. எல்லா மக்காம்களிலும் நாசூத்து, மலக்கூத்து, ஜபரூத்து, லாஹூத்து, ஹாஹூத்து, பாஹூத்து ஹாஹூத்து என்னும் மக்காம்கள் யாவற்றையும் என்னுடைய அஃனிய்யத்தென்னும் அறிவாகிய இன்சாவென்னும் ஹூவியத்து சாரிய்யா வென்னும் அறிவு பொதிந்து, ஆலம் அஜ்சாம், ஆலம் மிதால், ஆலம் அர்வாஹ், வாஹிதிய்யத்து, வஹதத்து, எல்லாத்திலும் அகம் புறமாய்ச் சென்று அமிழ்ந்து தத்துதலாக வைத்து ஜாமிஉ என்னும் பேரும் பெற்றபடியால்.

மனிதன் என்னுடைய ரகசியப் பொருள்; நான் மனிதனின் ரகசியப் பொருளென்றும் ஹதீது குதுசியில் ஹக்கு தஆலா திருவுளஞ் செய்கின்றான்.

ஆனபடியால் அஹதிய்யத் தென்னும் தாத்தில் நின்றும், வுஜூதுல் முத்லக் கென்னும் பொழுது இல்முல் முத்லக் கென்னும் வஹதத்து முஹம்மதிய்யாவில் அல்லாஹ்வென்னும் நாமங் கொண்டு உதித்து எழும்பி வாஹிதிய்யா ஆலம் அர்வாஹ், ஆலம் மிதால், ஆலம் அஜ்சாம் ஆகியவெல்லாம் கடந்து, ஆலம் இன்சானென்னும் மஅரிபில் அடைந்து, இந்த ஆலம் இன்சானில் நின்றும் உதித்து, முன் வந்த மார்த்தபாப்படி ஏறி, அஹதிய்யத் தென்னும் மஅரிபில் அடைகிறபடியால்,

இந்த ஆலம் இன்சானி ஜாமிஉ என்றும் அஹதிய்யத் தென்றும் சொல்லலாம். அறிவென்கிறதாக இருக்கும் அறிவென்கிறது எதனால் என்றால், என்ன என்ன தஜல்லி வெளியானாலும் இன்னதின்ன தென்று அறிவு பிறந்து அறிய வருகிறது. இப்படி அறிகின்றபடியால் என்றது. இந்த ஆலம் இன்சானை மஜாசி என்று சொல்லப்படும். மஜாசி என்றால் கானல், தண்ணீருடைய ரூபமாகக் கண்ணுக்குத் தோற்றுவது போலே, இந்த இன்சானென்றும் வஹ்மென்றும் கியாலென்றும் இந்த இரண்டுந் தொடர்ந்து வேறென்னும் வேற்றுமையை உண்டுபடுத்துகிறது. அநியத்தென்றும் கய்ரிய்யத் தென்றும் பேராச்சுது. இந்த நினைவை யாராலும் தள்ள இயலாது. ஏனெனில்:

مامن مولود من بني ادم يولد الا يمسه الشيطان

ஆதமுடைய மக்களில் நின்றும் ஒரு பிள்ளையாகிலும் பிறக்கப்பட்டதில்லை. அந்தப் பிள்ளை பிறக்கிற நேரம் ஒரு ஷைத்தான் தொட்டேயல்லாது. ஷைத்தான் நாம் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் போதே நம்முடன்

தொடர்ந்தே பிறப்பதினால், நம்மைத் தொடர்ந்தே கெடுதலில் புகுத்தி விடுகிறான். அவன் குணம் நம்மைவிட்டு விலகாது. ஒரு விதத்தாலொழிய அதாவது.

واذكر ربك فى نفسك تضرعا وخيفة ودون الجهر من القول بالغدو والاصال ولا تكن من الغافلين!

முஹம்மதே உம்முடைய நாயனை நினைப்பீராக! நப்சை தீமைகளளவில் விடாமல் உள்ளச்சத்துடனும் சாளயப்பாட்டுடனும், அந்தி நேரமும் விடியற் காலமும் வெளிப்படையாய்ச் சொல்லாது நினைப்பீராக! மறந்து விடாதீர்! என்று

உதாரணம்:- தூதர் முஹம்மது மறக்கவில்லை சொன்னபடி வண்டு கொட்டவில்லை இன்னும், ஹக்கு முதல் கல்க்கெல்லாம் வுஜூதும், இல்முமல்லாது வேறல்ல வென்றும் இதென்ன வென்று பார்க்கும்போது, இந்த வஹ்மும் கியாலும் அக்கினி முகத்தில் மெழுகு இளகிறது போல் இளகிப்போம்.

இந்த அறிவை உதிப்பென்றும் சொல்லப்படும். அது எதனால் என்றால் எதையும் இன்னதின்னதென்று ஹக்கு முகமாக அறியுமே அதைக் கல்பு ஹக்கீக்கி என்றும், ஆலமென்றும் அந்த ஆலமென்ற கல்பு ஹகீக்கத்தில் அறிவு உதிக்கிற படியால் உதிப்பென்றும் தன்ஸீஹ் மஹளென்றும், பருஸகென்றும் சொல்லப்படும். அது கிடைக்கிறது என்றது: அந்தக் கல்பு குரு இடத்தில் பெற்ற அருள் கொண்டு அந்த அருளின் கண்ணாக உதிப்பித்து உதிப்பித்துப் பார்த்து பார்த்துப் பழகின பின், அந்த உதிப்பு எழும்புகிற தென்ன வென்று அருள்கொண்டு பார்க்கும்போது

அவ்வுதிப்பு ஹயாத்து, இல்மு, இராதத்து, குத்ரத்து, சம்உ, பசறு, கலாம், இந்த ஏழு சிபத்தும் ஒன்றாக மொத்தமாக ஒரு தெளிவு தெரியும். அதைப் பார்க்கும் போது பார்க்கிறதும் தெரிகிறதும் ஒன்றாய்க்காணும். அந்த உதிப்பென்கிற அறிவு பார்வையென்னும் அறிவு பிதுங்கினால் சியால் பல பல சத்ருவாக இருக்கும். அந்த சத்ருவாகிறது மலக்கானி, நப்சானி, ஷெய்த்தானி என்று சொல்லப்படும்.

இவைகளில் மாறிவிடாமல் ஹிம்மத்துக் கொண்டு நிற்க வேண்டும். இப்படிப் பார்க்கிறதும் பார்க்கப்பட்டதும் ஒன்றாய்க் காணும்; தெரிகிறதும் தெரியப்பட்டதும் ஒன்றை ஒன்றாய்க் காணும். இவ்விதம் பழகிக்கொண்ட பின் எல்லாம் ஒன்றாகத் தெரிந்துகொண்ட பின் நிச்சயமாகுமே அந்த அறிவைக் கொண்டே தன்னைத் திரும்பிப் பார்க்கவும்.

مراة وجه الذى تهواه قلبك كن لنحوه ناظرا تبصر محياه

நீ ஆசை கொண்டிருக்கிறாயே அந்த ஒருவனுடைய முகம் பார்க்கும் கண்ணாடியாகிறது. உன் கல்பு தானாகவே இருக்கும். அந்த கல்புக்கு நேரே பார்க்கிறவனாகயிருந்துகொள். அந்தக் கண்ணாடி நீ ஆசை கொண்டவனுடைய முகத்தைக் காண்பித்துத் தரும் என்றபடி பார்க்கும் போது பார்க்கிறதும் பார்க்கப்பட்டதும் ஒன்றாய் அதில் நின்றும் அறிவு பிறந்து அறியும். இப்படி ஒன்றை ஒன்றாய்த் திரும்பிப் பார்க்கப் பார்க்கப் பார்க்கிறதும், பார்க்கப்பட்டதும், ஒன்றாய் அதில் நின்றும் அறியும்,

அறிவு ஒன்று பிறந்து பிறந்து அறியும். விசைக்கு விசை அறிகிற அறிவு மெலிந்து வரும். இப்படி மிஃருஜாக ஏறி யேறிக் கடைசியில் அறிய அறிவு அறிந்தோமென்கிற விபரந் தோன்றாமல் மெலிந்திருக்கும். அதை இல்முல் முத்லக் கென்று சொல்லப்படும். இந்த இல்முல் முத்லக் தானுக்கும் வுஜூதுல் முத்லக் வெளியாகிற மள்ஹருமாய் முஹம்மதிய்யா வென்னும் அறிவுமாய்,

நாம் மேலான ஹருபென்னும் கலிமாவாக, திடனுக ஆயிருந்தோம். இப்போது கீழ்மையான அயியான் தாபித் ஆயிருந்தோம். இப்போது கீழ்மையான அயியான் தாபித்

தாவில் தரித்து வாஹிதிய்யத் தென்னும் மள்ஹரு ஆதமியா விலும் றூஹு குதுசி என்னும், றூஹு முஹம்மதிய்யா வென்னும் றூஹாகிய ரப்புல் அர்பாபிலும் நூரு முஹம் மதிய்யாவாகிய அக்லுல் அவ்வலென்னும் சஹாபுல் வஹியி வஹீயென்னும் இருபத்தேழு அஸ்மாவாகிய மர்பூபிலும் ஆலம் அர்வாஹ், ஆலம் மிதால், ஆலம் அஜ்சாம், ஆலம் இன்சான் சத்ரென்ற வரிகளில் இறங்கினோமென்று முஹி யித்தீனிபுனு அரபி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்ன கலிமா வென்னும் ஹருபாகிய வுஜூது, இல்மு, நூறு, ஷுஹூது என்று சொல்லப்பட்ட இஃதிபாரு சல்பி என்னும் இல்முல் முத்லக் தோன்றினபடியால் இந்த இல்முல் முத்லக் வுஜூதுல் முத்லக்காகக் கரைந்துபோம்; இவ்விதம் கரைந்து போனுல் சிறப்பமாச்சுது.

அஷ்ஹது அன் லாயிலாஹ இல்லல்லாஹு சிறப்ப மாச்சுது. அவனும் துப்புரவானுன்; இவ்விதமான பின் வுஜூதுல் முத்லக்கு இவனை இல்லாதவனுக வுஜூதாகத் தரிபடுத்தி பக்காவில் திருப்பி ஏறின துறையின் வழியே இறக்கி தஷ்பீஹ் முகமும் வுஜூதாகத் தரிபடுத்தின பின்

உபூதியத்து கொண்டு வஹ்தானிய்யத் தென்னும் மறதியான கடலில் அமிர்தங்களை அருந்தினவன் தனக்கு அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ சிறப்பமான தரிபாடாகிறபான்.

وبالصحو بعد المحو لم اك غيرها

நான் பஹுவான பின் பக்காவானதளவிலும் அந்த வுஜூதிய்யா வென்னும் மஹபூபு நாயகி இல்லாதவனாக இருக்கவில்லை.

وذاتي بذاتي اذ تجلت تجلت

அவள் வெளிப்பட வேண்டுமென்கிற போது என் உள்ளமை அது தன்னில் அவளாக வெளியாகும்.

تجلت في تجليها الوجود لناظري

அந்த மஹபூபு நாயகி வெளியாகிறதிலே என்னுடைய உள்ளமை என் பார்வைக்கு வுஜூதாக வெளியாச்சுது.

ففي كل مرإ ان اراها

ஆனபோதே காணப்பட்டவை அடங்கலும் அவள் தன்னைத்தான் காண்கிறது. என் தன்னைக் காண்கிறதாயிருந்தது. ஆதலால் இப்படி அறிவை அறியாது உறாஜூம் நுஸூலுமா யேற்றி இறக்கி ஹக்கையும் கல்க்கையும் ஒன்றுமில்லாமல் இரண்டுமில்லாமல் தாங்கள் அதமாக ஒரு பார்வையாகக் கண்டு அறிந்தார்களே அந்தக் கூட்டத்தில் நம்மைச் சேர்க்க நல்லுதவி செய்வானாக ஆமீன்!

பிக்குருக்க பீக்க எக்பீக்க உன் தன்னில்தானே நீ யோசித்துப் பார்க்கிறது உனக்குப் போதும். தவாவுக்க பீக்க வமா தஷ்உறு உனக்கு மருந்து உன்னில்தான் உண்டாயிருக்கிறது; நீ அறிகிறாயில்லை. உனக்கு நசலும் உன்னில்தான் உண்டாகின்றது. நீ உற்றுணர்ந்து பார்க்கிறவனாயில்லை. அந்தல் முபீனுல் கிதாபுல்லதீ பி அஹ்ருபிஹி யெழுஹறுல் மள்ஹறு, நீதான் கித்தாபுல் முபீனாயிருக்கிறாய். அது எப்போர்க் கொத்த கித்தாபானால் அதன் ஹ்ருபுகளைக் கொண்டும் மறைவாக்கப்பட்ட தடங்களும் வெளியாகுதே அப்படிக் கொத்த கித்தாபு.

வதஸ்அமு அன்னக்க ஜிற்முன் சகீருன் சயீறுன் வ பிக்கன்தவல் ஆலமுல் அக்பரு, உன்னில்தான் பெரிய ஆலம் சுருண்டு கிடக்கின்றது. திடனாக நீயாகிறது சிறிய ஒரு கண்டிப்புத் தானே என்று எண்ணுகிறாய். பலா ஹாஜத்த லக்க பீகாரிஜி வ பிக்குறுக்க பீக்க வமா தப்குரு அயியான் காரிஜா வென்னும் ஆலத்தில் பார்க்க வேணுமென்ற ஹாஜத்தில்லை. நீ யோசித்தப் பார்க்கிறதே உன்னிலுண்டாயிருக்கிறது; நீ யோசித்துப் பார்க்கிறவனாயில்லை.

பீயெபுசுறு என்னும் ஒளிவில் நின்றுமுள்ள சுர்மாவை ஹக்கு வேறு கல்க்கு வேறு என்று எண்ணும் தூசு நிறைந்த இரண்டு கண்களிலும் தீட்டிக் கொள்வாயானால் அப்போது உள்ளாலும் புறத்தாலும் கீழாலும் மேலாலும் பின்னாலும் முன்னாலும் வலப்பக்கத்தாலும் இடப்பக்கத்தாலும் அவனன்றி யாதொரு மவ்ஜூது இல்லை என்று சாட்சி கொடுக்கிற லாயிலாஹ இல்லல்லாஹு வானது உன்னை மூடிக் கொண்டிருக்கிற திரையை உன் முகத்தி

லிருந்து எடுத்துவிடும் அப்போது அங்கு அல்லாஹ்வுடைய முகமிருக்கிறது என்னும் உண்மை உனக்குத் தெரியவரும். இன்னுமவன் உங்களோடிருக்கிறுனென்பதும் உனக்கு தெரைக் காட்டித்தரும்.

தோழனே இதன் முடிவுவரைத் தேடிப் பிடித்து அதில் எவ்வேளையும் உன் நினைவை தாயிமாக்கிக்கொள். அதாவது தலையில் தண்ணீர் சுமந்து இரு கைகளையும் வீசி வீசிப் போகும்போது அப்பெண்களின் நினைவு தலையிலிருக்கும் குடத்தின் பேரிலேயே இருக்குமாப் போல் நம்மைப் படைத்து ரட்சிக்கும் அல்லாஹ்வின் உள்ளச்சத்தோடுப் சாளயப்பாட்டோடுப் இருந்து வணக்கம் புரிந்து நபிகள் நாயகத்தின் வழியில் சேர்ந்து நடப்போமாக. ஆமீன்!

ان المتقين فى جنات ونهر فى مقعد صدق عند مليك مقتدر

முத்தக்கீனென்னும் தக்வாவுடையவர்களான வட்டத்துக்குள்ளாகியவர்கள் சொர்க்கங்களிலும் அதன் அருகில் ஆறுகள் ஓடுதே அதன் அருகுகளிலும் சிதுக்கென்னும் உண்மை இருப்பிடம் ஒன்றுண்டுபல்லவா அதிலும் வல்லமை மிக்க அரசனுகிய அல்லாவின் சமூகத்திலும் வீற்றிருப்பார்கள்.

ان الذين امنوا وعملوا الصالحات كانت لهم جنات
الفردوس نزلا خالدين فيها لا يبغون عنها حولا

மேலே சொல்லப்பட்ட முத்தகீன்கள் சாலிஹான அமலுடைய முஃமீன்கள். இவர்களைத்தான் ஓ ஈமான் கொண்டவர்களே! நீங்கள் சாலிஹான அமல் செய்யுங்கள்

உங்களை பிருதவ்செனும் சொர்க்கத்தில் தரிப்படுத்துவோமென்றும் அதில் ஊழி யூழி காலம் தரிபடுவீர்களென்றும் புகழான புகழைத் தேடி அலைந்து இல்முல் எக்கீன் இல்லதென்றும் அதை ஐனென்னுங் கண்ணால் கண்டு எக்கீன் கொண்டு ஹக்குல் எக்கீனால் கமால்கள் தோற்றராகும். முகம்மலாக வாய் மூடி அக்மலென்னும் ஷாஹூதில் தான் உண்டுமென்னும் நினைவு வராமல் தன் பிரக்கினை யற்றிருப்பதைத் தெரிந்து எவ்வேளையும் உருஜென்னும் வாசி என்ற வாகனத்தில் கூகிடாச் சவாரி செய்தால் (நுஸூலானால்) வாசமானது

பாட்டு

நாசி நீளம் ஓடலாம் – கோட்டை
வாசலுள் தவாபு செய்து மீளலாம் – அங்கே
ஆவிதாவிடு மேவி யேவியே

கூவிடுங் குயில் வாவி ஸம்ஸமும்
அஞ்சு நிறமான வொரு மேடது-இன்னும்
பஞ்சபூத மஞ்சுபேரின் வீடாமது–அந்த
ஹூம் மென்னுங் கலிமாவை தம்மதில்

கொடுத்து வந்தால் உண்மையைக் கலந்து
உறவாடலாம் நாளை எம்மிறை திரு லிக்காவில்
சேரலாம் என்றும் காமிலன் குரு நாவினால்
மொழி நேமமாய்க் கலிமாவிலே தெளி

காயசித்தி மேனியுங் துலங்கிடும்-இன்னும்
மாயன் இபுலீசு வினை போய்விடும்
அஞ்செழுத்தில் பிஞ்செழுத்தை நெஞ்சிலுருவாயிருந்தால் அஞ்சனம் வெளிக்குமப் போகாணுமே

ஞானக் கண் திறந்து பார்க்கப் பார்க்கத் தோணு
[மே—சகல

ஆசை பாசமும் மோசமென்றறி
மாசகன்றிட வீசுமே யொளி

ஆதமென்னும் பாதமென்ற தாமது—அறிய
வேதமென்னும் கீதமென்ற தாமிது
சந்திர சூரியன் வந்து அந்தரத்திலொன்று
பட சந்தேக மகற்ற வொரு காரணம்-குரு

தந்த உபதேசமதின் பூரணம்-அது
ஹா வதென்றும் ஹூவதென்றும்
ஹீய தென்றும் ஹூம்மதென்றும்
அற்பருக்கு சாற்றொண்ணாத காரியம்—இதில்

நட்புவைத் தபேரில் சொன்னால் வீரியம்
கன்னி கொலு மேடையிலே உன்னிராகம்
பாடுதுபார் கின்னரம் சித்தாருவீணை தாளமும்குயில்
அன்னம் போல் வலம்புரிக்குள் ளோசையும்
[அந்தக்

கன்னியானவள் சென்னியில் திரு
மின்னுபோலொரு வண்ணமானவள்
கையில் குர்ஆனுமேந்தி யோதுவாள்—இந்த
வையகத்தில் முத்தரோ டிணங்குவாள்

என்ன விதமென்று சொல்வேன் சின்னதோர் முழக்க
மென்னுள்]

எண்ணம் யாஹூ பாதையில் முழங்கிடும்-அது
சன்ன பின்னலாகவே கிளம்பிடும்-தொனி
மூண்டகக் கொலு மண்டபத்தினுள்

அண்டமாகிய கண்டமீதினில்
முத்து மஹ்மூது வள்ளல் ஆசனம்—பரி
சுத்த ஹாபுருக்க தங்கே வாகனம்
இல்லென்ற இரண்டெழுத்தைக் கொல்லனின் [குகையில்

வைத்து இல்லென்று மெள்ள மெள்ளவூதவும்—மூல
வல்லபக் குகையதை யெழுப்பவும்—அந்த
சமைய மானதில் லமையலாகிடும்
பயமதாகவே ஜெயமதாகிடும்

சக்கதன்றி துக்கமும் பறந்திடும்—மேலும்
முக்கமல வாயலுந் திறந்திடும்
கண்டவர்கள் விண்டறியாக் கற்றவர்கள் பெற்றறி [யாக்
கண்டகாட்சி யென்னவென்று கேட்டிடில் [மனக்]

கண்திறந்து பாரென்று சொல்லுவாய்—இந்த
ஆலமானது தூலமானதில்
மூலமாகிய கோலமா மொழி
உண்மையான மூன்றெழுத்தின் தந்திரம்—அது

அம்மையப்பனு முறைத்த மந்திரம்
அங்கமதிற் பங்கமில்லே சங்கையான பாதையிது
அங்குமிங்கு மெங்குமது தங்கலாய்—பொங்கும்
குங்குமம் கஸ்தூரி அம்பர் வீசுமாம்

முஹியிதீனுட வழியாதிலே சுழி
ஹாவிலே யொளி

நீனுடைய தீபமது வெங்குமே வீசும்
சீனுடைய சிரசிலுள்ள தாகுமே
விண்ணதிலே நந்தி யொளி காட்ட வேண்டும்
விளங்கிடவே வாசியுடையக் கருவை விள்ளும்

கண்ணதிலே பத்துவது யெங்கே சொல்லும்
கருவான விந்துநிலை காட்டாவிட்டால்
மண்ணையே அள்ளியவன் வாயில் போடே

ஆஷிக்கினே மேல்நாவு கீழ்நாவு மேவும் தொண்டை யுள்நாவு இம்மூன்றுகாலாகும். தொனிமுறைகள் கார்க்கும் பல்லு முப்பத்தி ரெண்டுக்குறிய ராகு முப்பத்திரெண்டு எழுத்து. அலிபிலிருந்து யே வரையில் இருபத்தொன்பது நுக்கத்தும் ஜேரும் ஜபரும், ஆக முப்பத்திரெண்டும் ராகு ஆக எடுத்திருப்பது இருப்புப் பதினெட்டு. ஒவ்வொரு வரதில் ஒவ்வொன்றை எடுத்திருப்பார்கள்.

நாலு வாசலும் அடைத்துப் பார்க்க, தொனிப்பதென்றும் அதில் ஒன்பது நீக்கி பார்க்கில் ஹூவென்னுந்தொனி அவனாகும். கலிமாவின் கடையெழுத்தாக விருக்கும். நினைப்பையும் மூச்சையும் வீணாக்காமல் யா வென்றும் ஹூ வென்றும் நிலை தெரிந்து யாதைப் பூட்டி வாய் மூடியிருப்பது பெரியோர்களின் குணம். இந்த உடலென்ற பட்டணத்தில் ஒரு உண்டைச் சதையிருக்கிறது. அதைக் கல்பெனச் சொல்லப்படும். அது தாமரைப் புஷ்பத்தின் மூகிழ்போல் எட்டிதலுடையதா யிருக்கும். அதற்குள் அல்லாஹூ வதஆலாவின் நூரென்னும் ஐந்து அறுசிர்கள்

ஐந்து நரம்புகளில் முள்ளின் முனைபோல் மெல்லினதாய்ப் பிரகாசித்து ஜடலமெங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள்: கல்பாகிறது கஃபாவையும் சொர்க்கத்தையுங் காண மேலானதாயிருக்குமென்று. அது ஏனெனில் கஃபாவை இப்ருஹிம் அலைஹிஸ்ஸலாம் கட்டினார்கள். கல்பை அல்லாஹ் உண்டுபண்ணினான்.

கஃபாவாகிறது அல்லாவின் வீடு, கல்பாகிறது அவனுக்குக் கஜானாவாயிருக்கும், கஃபாவில் ஹஜறுல் அஸ்வதென்னும் கருப்புக் கல் இருக்கின்றது. கல்பில் ஹஜறுல் அப்யலென்னும் வெள்ளைக்கல் லிருக்கிறதென்றும் இன்னும் சொல்லியிருக்கிறார்கள்: முஃமீன்களுடைய கல்பாகிறது, அர்ஷைக் காண வலுப்பம், குருசைக் காண உயர்த்தி, சூரியனின் நூரைக் காணவும் சந்திரனின் பிரகாசத்தைக் காணவும் நட்சத்திரங்களின் அழகைக் காணவும் மற்றெல்லா வஸ்த்துக்களைக் காணவும் மேன்மையுடையதென்றும்.

மனிதர்கள் கல்பளவில் பார்க்கிறார்களில்லை. அல்லாஹு தஆலா தினமொன்றுக்கு முன்னூற்றறுபது விடுத்தம் ஒவ்வொருவரையும் அவர்கள் கல்பை நோட்டமிடுகிறானென்றும், இன்னும் ஹதீது குதுசியில் அல்லாஹ் உங்களின் அமல்களையும் சூரத்தையும் பார்க்கிறதில்லை. உங்களின் கல்பையும் நிய்யத்தையும் பார்க்கின்றானென்றும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளஞ் செய்திருக்கின்றார்கள். மிபுத்தாஹுல் பலாஹ் என்னுங் கித்தாபில் சொல்லி வருகிறது; ஷைக்குடைய

சமூகத்தில் புகுதவும் அதில் நின்றும் வெளியாகுவதை பிடித்து நடக்கவும் அதனுடன் மருகுதலாயிருக்கவும் குருவில்லாமல் நீ நாடுவாயேயானால் அது உனக்கு இணக்கமாக மாட்டாது. அதேனெனில் உன் கல்பில் றப்பானியாவென்னும் உதிப்பு நீ நாடினதல்லாததற்கு உண்டாயிருக்கிறது. நீயாகிறவன் ஒருவனில் நின்றுமாயிருக்கின்றாய். அவனுடைய ராஜாங்கம் ஆலமடங்கலையும் அடக்கி ஆள்கின்றது. அதையறியாமல் நீ வேறென்று வேற்றுமையாய்த் திரிகின்றாய். அதை அறிந்த முர்ஷிதுகள் உன்னை அதில் நிறுத்தினால் அது உனக்கு உடனே கட்டுப்படாது தோன்றி மறைந்துவிடும். அதற்காகவேண்டி ஒரு சூழ்ச்சியத்தில் நிறுத்துவார்கள். அதில் நின்றும் முன் சொன்ன பலபல நினைவுங் கட்டுப்படத் தக்கதாகப் பழகி வருவதால் ரப்பானியா அப்போது நிற்படுப்பாரவான்களான உலமாக்களாக இருந்தாலும் சரியே.

ஷரீஅத்தென்பது பழக்க வழக்கம்

பள்ளியென்பது அல்லாவை வணங்கும் தானம். அலி றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கின்றார்கள் மூஹம்மதைத் தெரிந்து கொண்டவன் அல்லாவை அறிந்தவனுவானென்று.

நான் கன்சுல் மக்பிய்யாவா யிருந்தேன். யாராலும் என்னை எண்ணி அறிய இயலாது. ஹக்காக கல்க்கை படைத்து அவைகளுக்கு ஆராயுதலையும் புத்தியையுங் கொடுத்தான். ஆனதாலவர்கள் மன்ஜத்த வஜத என்றது போல் தெண்டிப்பும் அதற்குள்ள புத்தியும் நசீபும் வேண்டும். வெகு பிரயாசையில்லாவிட்டால் ஒன்றும் கை கொடாது. என்னைக் கொண்டும் என்னை அறிந்தான். ஹக்குடைய ரூஹாஹு முஹம்மதுடைய தாத்தாயிருக்கும்.

ஹதீது யாதொருவன் என்னைக் கண்டால், அல்லாவைக் கண்டவனென்றும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளஞ் செய்திருக்கின்றார்கள். அல்லாஹுத ஆலா அளவில் அகப்பார்வையாகிறது மாருத்தவமுடைய ஹுப்பும் ஹுளூருன தன்னை ஹக்கில்தானே பனுவாக்கி மனதில் ஹக்கில் ஹக்கு பக்காவான பின் ஹக்கில் உயிர் நிலையில் ஹுப்பாகிய ஹுளூருன ஆஷிக்கீன்கள் சொல்கிறுர்கள். அல்லாஹ்வென்றும் வாசில்கள் ஹுவல்லாஹ்வென்றும் சொல்கிறுர்கள். யாதொருவன்

அல்லாவை அறிந்தானேயானால் அல்லாவென்னுஞ் சொல்லின் சூக்ஷ்மமறிவான். வாய்விட்டுச் சொல்லமாட்டான்.

அவனுக்கு அது சங்கையாகமாட்டாது; அதபாகவுமாட்டாது. அல்லாவின் சூட்சமறியாதாரடங்கலும் அல்லாவென்றே சொல்வார்கள். சூட்சமறிந்தோர்கள் வாயால் மொழியாமல் அவனுடன் சம்பாஷணை யென்னும் தரிசனை என்னும் அஞ்சனத்தை போட்டு ஒரு நொடி நேரமாவது மறவார்கள். அல்லாவின் சந்திப்பில் ஹாலூராவார்கள். அவ்விதம் ஹாலூருன ஹாசிலாகிய வாளில் ஹயாத்தைப் போலும் அன்னியத் தென்ற வேரென்னும் கைரிய்யத் தென்ற இவ்விரண்டும் இதபாத்தும் நபியுமாகும். இவ்விரண்டையும் குருவின் உபதேசத்தின் நோட்டம் குதாவின் பக்கலில் சமானமாக்கி நானும் நீதான் நமது நாவும் நாயனில்லாதில்லை என உறுதியாக்கி ஒன்று படுத்துவதுதான் தவ்ஹீதாகும்.

மஹ்லியத்தான சிறப்பத்தில் சிறப்பமாகுவது இவ்வித இல்மை ஆசித்து அல்லாவின்பால் விண்ணப்பித்துக் கேட்கிறதில் தான் கிட்டும். அதாவது, மர்ஹபா, யா மர்ஹபா யாமர்ஹபா யாநூருல் அயினி மர்ஹபா யா வென்பதை ஓதுவது தானே ஓத வேண்டியது. கண்டால்தான் ஓத வேண்டும்ஆனுல் காணுவிட்டாலும் ஓதுவதும் நலம்தான்.

அந்த மஹ்பூபைக் கண்டு ஓதினுல் எவ்வளவு மகிழ்ச்சியாகும். அந்த நூருல் அயினைக் காணுமலே எவ்வளவு ஆசையுண்டாகிறது. அந்த நூரைக் கண்டு தான் ஓத வேண்டும். இருபதியிலும் சீதேவித்தனம் பெறுவோம்.

فاما من خاف مقام ربه ونها النفس عن الهوى

فان الجنة هى المأوى

மேலாம்பரமான ரப்பின் மீது உவப்பென்னும் ஹவா வைத்து எல்லா விஷயங்களிலும் தன் நப்சை பயபக்தியாய் நடப்பிப்பாரேயானல் அவன் இஷ்டமாக ஜயம் பெறுவான் இது நிச்சயம்.

அத்தகையோர் ஆஷிக் கென்றும் வாஸிலென்றும் காசானவரென்றும் காசுல் கவாசென்றும் பேரைப் பெற்றுக்கொள்பவர்கள். துறவி இந்த உலகத்தின் இன்பமான வாழ்வைப்பற்றி ஆசை கொள்ளாமல் மனமென்னும் நப்சின் கடிவாளத்தை ரூஹென்னும் எஜமானன் பிடித்து நப்சு போகும்போக்குகளில் போக விடாமல் பாதுகாக்க வகை தேட வேணுமே அதற்காக கண் காட்சியாய்க் காட்டி அதில் நின்று ஒழுங்காக வாசியென்னும் வாகனத்தை நம் கை வசமாக்கித் தந்தால் அதைத் தவற விடாமல் வாசியிலேறிப்பழகிக் கூசிடாச் சவாரிசெய்வோமானல் நப்சென்னும்ஹவா றூஹென்னும் எஜமானனுக்கு அடங்கி, ஒடுங்கி, வசமாகி இட்ட கட்டளைப் பிரகாரம் ஆடாது அசையாது ஓடாது ஹக்கின் சமுகமிருந்து வருங் கட்டளையை எதிர்பார்த்து தஸ்லீம் செய்து ஹாஜிருருகுவது நிரப்பமான தவ்ஹீதென்னும் மஃறிபத்தென்றது.

இவ்விதமான இல்மைத் தேடித் திரவியத்தைக் கண்ணுங் கருத்துமாய்க் கண்டு தெளிவில் தெளிவு பெற்றுக் கொள்பவர்கள் சிறந்த அறிவாளிகளாவார்கள். இவர்கள் இகபர மிரண்டிலும் சுக துக்கமற்று ஹக்கின் சமுகமாகிய லிக்காவென்னும் சன்னதியில் சொக்கிச்சுகிப்பார்கள்

இவ்விதமாகிய பாதையைத் தேடி அலைந்து திரிந்து தேடிக்காண முடியாமல் இவ்வுலகுக்கு வந்த நாம் எதைத் தேட வேண்டும் வாங்கிவந்த அமானிதமென்ருல் அது என்ன? நாம் வந்த வழியாகப் போவது நிஜமாயிருக்க தந்தனுப்பிய அமானிதமென்ருல் அது எவ்விதம்? காண முடியுமா? அதை யாரைக் கண்டு கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்? அந்த அமானிதப் பொக்கிஷம் என்ன?

انا عرضنا الامانة على السماوات والارض والجبال

இதைத் தெரிந்து, கண்டு, தொழுது அமலில் காசாகுவது தவத்தில் சிறப்பானதும் சீதேவித் தனமானதுமாகும். அந்த அமானிதத்தைக் கண்ணுல் காண வேண்டும் இதைக் காணுது போனல் நீ வழக்கடித்து அதைச் சுமக்கத் தகுமென்று, அத் திராணி என்னிடந்தான் உண்டு; மற்றவர்களால் அந்த அமானிதத்தைச் சுமக்கச் சக்தி போதாதென்று இன்சான் சொன்னுன். அல்லாவுடைய ஹக்காகிய அமானிதத்தைத் தான் சுமப்பேனென்று பெற்று வந்த அமானிதத்தைப் பேணிப் பாதுகாக்க மறந்தவனேயென்று திட்டுகின்ருன் அதை நன்ருக யோசிப்பார்களானுல மறதியாளராகார்கள்.

فابين ان يحملنها واشفقن منها وحملها الانسان انه كان
ظلوما جهولا ليعذب الله المنافقين والمنافقات
والمشركين والمشركات ويتوب الله على المؤمنين
والمؤمنات وكان الله غفورا رحيما

திட்டுகின்றான் முனிகின்றான் அதைப் பேணினவர்களைப் புகழ்கின்றான். மூஃமீனென்றும் அவர்களின் பிழையும் பொறுத்து கிருபை செய்வேனென்றும் சொல்கின்றான். இந்த அமானிதம் என்னவென்று கொஞ்சமேனும் யோசியாமல் தூங்குகின்றீர்கள். விழித்தீர்களானும் கவலையடைவீர்கள். அதைத் தேடிக் கண்டு கொண்டால்தான் முஃமீன். இல்லையேல் மனிதனையும் மிருகமாகவே கருதப்படும். ஆகிரத்தில் யாதொரு சம்பந்தமுமிராது. இந்த உலக வாழ்வு கொஞ்ச நாளேதான் ஆகிரத்து வாழ்வுதான் ஊழியூழி கால வாழ்வு.

நாம் இவ்வுலகுக்கு ஏன் வந்தோமென்று யோசிக்க வேண்டும். இதற்கு முன் யாரால் எப்படி இந்த மனித ஜன்மம் நமக்குக் கிடைத்தது. இனி நாம் சாபல்யமடைவது எப்படி? அதற்காக நாம் தேடவேண்டிய தென்ன தெரியுமா? நாம் வாங்கி வந்தோமே அமானிதம் அதைத் தேடிக் கண்டு கொண்டு அமல் செய்வதுதான். அது எப்படி? தொழுகை, ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு அஸ்திபாரமாகிய கலிமாவை தீவிரமாக ஷஹாதத் தென்னும் திட்டப் படுத்துவது. அதெப்படித் திட்டப் படுத்துவதென்று ஆலோசித்து அதைக் கண்ணாலே கண்டால்தான் இன்னதுதானென்று திட்டமாகும். அப்படிக் கண்டு திட்டப் படுத்துவதே கண் காட்சியாகும், அவ்விதமான காட்சியைக் கண்டு திட்டப்படுத்தின பின், நம்மைப்பற்றி நாமே சிந்திப்பதும் நாமென்பதை மறந்து ஹக்கில் தரிப்படுவதும் ஹாலுருகுவதும் நிரப்பத்தில் நிரம்பி விடுவதும் உச்சஸ்தானமாகிய வுஜூதை யெத்தி முத்தியடைவதும்.

தன்னில் கலிமாவைக் காணல்

கலிமாவை கித்தாபுகளில் பார்ப்பது போலவே தன்னிடம் பார்ப்பது முக்கியமானது. ஏன் சிந்திக்கிறீர்களில்லை இன்னும் பர்ளு, சுன்னத்துகள், வாஜிபுகள் வெளியாகி வாசிப்பது போல் பத்து இரண்டெழுத்தையும் பண்புருகுங் குருவினிடத்தில் அறிய வேண்டும். அறிந்து வாசிலானோர்கள் அவர்கள் தான் காணுஞ் சுரூபமெல்லாம் கத்தன் மன்ஹறென்றே பேணி ஷுஹூது செய்து பலப்படுத்திக் கொள்வார்கள் தங்களிலே:

பாட்டு

ஞானக் கதிர்மதியும்
நல்குமொன்றுஞ் சுழிமுனையில்
வீணற்றிருப்பார் வீதிதனில்
விருப்பமுற்றே சற்றேனுந் தவரார்கள்,

வெட்ட வெளிப் பட்டப்பகல்
வெளிச்சம் என்னில் காட்டி
வெளிப்படுத்தும் சய்யிது
முஹம்மதெங்கள் ஷெய்கே,

வாஸிலும் ஆஷிக்கும்

பெரியோர்கள் வாசிலானவர்களுக்கு அவர்கள் மக்காம் நினைப்புக்கும் பிறப்புக்கு மிடையிலாயிருக்கும். அதன் தீர்மானம் எவ்வேளையும் மனத்தை விட்டு மாறுவதில்லை. அதாவது;- ஆரிபுடைய கல்பு காபகௌசைனியைக் காண மூடுகுதலா யிருக்கும். ஹாஜூருன தொழுகை மிஃரு ஜாக விருக்கும். கல்பாகிறது சிராத்திற்கும் சொர்க்கத் திற்கும் நரகத்திற்குமிடையிலாக யிருக்கும். ஈமாறுகிறது அசதிக்கும் ஆசைக்கு மிடையிலாயிருக்கும் ஆஷிக்காகிற வன் இஷ்க்குக்கும் மஅஷூக்குக்கு மிடையிலாயிருக்கும், வாஸிலானவன் முவஹ்ஹிதா யிருக்கும். முவஹ்ஹிதா கிறவன் பிர் அவ்னுக்கும் மன்சூருக்கு மிடையிலா யிருக்கும் ஷரீஅத்தில் அல்லாவை அறிந்தவன் வெளிப்படச் சொல்லு வான். தரீக்கத்தில் வாய் மூடி யிருப்பான். ஹக்கீக்கத் தில், லாரப்ப வலாஅப்த. மஅரிபத்தில் தீர்மானம் துவர்க் கத்தில் திரும்புவதாயிருக்கும்.

மவ்த்திற்கு முன் மவ்த்து

ஆஷிக்கானவர் வாஸிலானவரிடம் எனக்கொரு வழி காட்டுமென்றால், வாஸிலானவர் இஷ்கு ஹவாவென்றும் மன்சில் ஹக்கை சேரும் உமக்கு சங்கை என்று சொல்வார். ஷரீஅத்தின் மவ்த்தைத் தேடுகிறவன் காபி ராயிருக்குமென்றும் உயிரை உடலிலே அடங்கிப் போட்டேன் நீ மெய்யான ஹக்காயிருந்தாயானால் உன்னுடைய புலன்களெல்லாம் மவ்த்தாகாதென்று அப்படித் தேடுகிறது சூபிகளுக்குப் பர்ளாயிருக்கும்.

ஹதீது நீங்கள் மவ்த்துக்கு முன் மவ்த்தாகிக் கொள்ளுங்களென்றும் நீங்கள் பனாவாக வேண்டுமென்றால் விளக்கின் சமீபத்தில் பார்த்தால் அந்த விளக்கின் பிரகாசத்தில் விளக்குப் பூச்சிகள் விழுந்து மடிவதைப் பார்க்கிறீர்கள். ஏன் நீங்களும் உங்களின் பிரகாசத்தைத் தூண்டிவிட்டால் பிரகாசிக்கும் அதில் நீங்களும் மடியலாம். பிரகாசத்தில் இஷ்க்கு கொண்டால் தன்னை பனாவாக்கி ஹக்கின் வுஜூதென்னும் பிரகாசந் தன்னிலே பிரகாசிக்கத் தன்னை பனாவாக்கி ஹக்கின் மன்ஹரில் நிரம்பி விடுவாய்.

கடலும் வாஸிலும்

நீ வாசிலாக வேண்டுமானால் கடலருகில் போயிருந்து பார். அக் கடலின் அலை கிளம்பி அக் கடலிலேயே மாய் வதுபோல் நீ எங்கிருந்து வந்தாயோ அங்கேயே போய் அடைய வழி தேடித் தெண்டித்தால் வாஸிலாகி விடுவாய்.

அல்லாஹுத்தஆலா உங்களுக்குத் துப்புரவான குடிப்பைப் புகட்டுவான். ஹிக்மத்தை பாத்திரவாளருக்கே அல்லாது வீணர்களுக்குக் கொடுக்காதீர்கள். பாத்திர மானவர்களுக்குக் கொடுக்காது போனால் அவர்களுக்கு அனியாயஞ் செய்ததாகும்.

தாத்தைக் கேட்டாயானால், முன் போலேதான் இப் பவுமிருக்கிறது. உன் தாத்தையும் சிபாத்தையுங் கேட் டாயானால், கிணற்றினுடைய தண்ணீர் நிறங் கண்டது போலே ஒப்புவமை இல்லை. முழுதும் அல்லாததாயிருக் கும், பார்வைக்கு ஒப்புவமை யுண்டு போலிருக்கும். உடைத்தால் ஒப்புவமை இல்லை.

அதாவது பக்கீர்கள் தர்வேஷ்கள் முஹக்கிக்கீன்கள் வழி யாகும். தர்வேஷ் என்பவர்கள் வுஜூது கொண்டும் உள் ளமையிற் தரிபட்டவர்கள். அதாவது வாஜிபுல் வுஜூது மும்கினுல் வுஜூது ஆகிறது விலாயத்தாக விருக்கும். இது இரண்டும் இரண்டு மக்காமா யிருக்கும்.

இனி தாலிபும் வாஸிலும் சிறு பிள்ளையும் பெரிய ஆளும் போலே. வயதாலே வித்தியாசம் சிறுபிள்ளை ருசியறிய மாட்டான். பெரிய ஆள் ருசி அறிவான். இப்படிப் போலேதான் தாலிபு சிறு பிள்ளை போலும் வாஸிலு பெரிய ஆள் போலும்.

ஆலிமுக்கும் காஸ்ஸானவருக்கும் வித்தியாசம் உண்டென்பதைக் கண்டவர்தான் காஸ்ஸானவர். ஆலிமானவர் அல்லாவென்று துதிக்கிறது பர்ளு. காஸ்ஸானவருக்கு அல்லாவை அறிகிறது பர்ளு. தன்னை மறந்து ஹக்கை எவ்வேளையும் ஷுஹூது செய்து கொண்டே காஸ்ஸானவர் இருப்பார்.

நானென்னும் நினைவும் வேறென்னும் நினைவும் நீங்கி ஒன்றுபட்டு நிரப்பத்தளவில் அதாவது தாத்தில் கடலுடைய ஆலம் அறிந்தவன் அறிவான். ஒருவன் மீன் வேட்டைக்கும் ஒருவன் முத்துக் குளிக்கவும் இவ்விரண்டு பேரும் தங்கள் தங்கள் நாட்டத்தை நிறைவேற்றிக் கொள்வது போல் இதை விளங்கிக் கொண்டவர்தான் தர்வேஷ். மும்கினுல் வுஜூதென்ற அஃயானிரு நாலிலும் ஒத்தாயிருக்கும். சூபியினுடைய சூரத்து சுன்னத்து ஜமாஅத்திலாயிருக்கும். அல்லாவை அறிந்த ஆரிபாயிருக்கும்.

மூன்று மன்சில்களும் முப்பாழும்

நல்லோர்கள் நல் வழியையே நாடி நடப்பார்கள். எல்லாம் முடித்துக் கொள்வார்கள். பொல்லாத மறதியை நீக்கிவிட்டு நான்கு மன்சிலும் (மன்சிலென்றது தானம்) முதலாவது மன்சில் நாசூத்து அது ஷரீஅத்து இல்முல் எக்கீன். அதன் பேரில் நின்ருல் ஜமாலின் பேரில் ஆஷிக்காகும். அதல்லாதாருக்கில்லை இரண்டாவது மன்சில் மலக்கூத்து அது தரீக்கத்தாகும். ஐனுல் யெக்கீன் ஷெய்கில் பனுவாகுவது. மூன்ருவது மன்சில் ஜபறூத்து ஹக்குல் எக்கீன் றசூலில் பனுவாவது நான்காவது மன்சில் லாஹூத்து மஅரிபத்துல்லாஹ்.

பனுபில்லாஹ் லாயிலாஹ இல்லல்லாஹூ நிரப்பத்தில் தரிபாடாகிவிட்டது.

ஷைகு வேண்டும்

இவ்விதம் பக்காவில் தரிபாடாகிக் கொள்வதைத் தெரிந்து கொள்வதற்காக ஒரு காமிலான ஷெய்கைத் தேடிக் கண்டு அவர் அன்பிற்குப் பாத்திரமாகி ஒன்றுவது ஒழுச் செய்து ரக்அத் இரண்டோதித் தொழுது பின் துஆ விரந்து கண்ணுன ஷெய்கு முன்னிருந்து கருதி குர்ஆன் ஓதக் காதில் கேட்டு நன்ருக்கைப் பற்றி நசீஹத்தாகி நாட்டமுடன் திக்ரைக் காதில் வாங்கியென்ருர் முரு திலே ஷெய்கைக் கண்டாலென்னைக் கண்டாரென ரசூல் சொன்ருர்கள்.

இவ்விதமாக ஷெய்கின் சமூகத்தில் தரித்து அவர் களில் உறூஜு நுஸூலென்னும் வாசி ஏற்றமிறக்கத் தைக் கவனித்து பழக்கஞ் செய்து பின் அவர்களின் நாட் டத்தில் வெளியாகுவதைக் கண்ணுல் கண்டு மர்ஹபா, யா மர்ஹபா நூருல் அயினி மர்ஹபா ஓதி அஷ்ஹது கலிமா ஓதி நிரப்பமான தரிபாட்டில் நின்று நிலைபடுவோ மாளுல் அந்த கய்பென்னுஞ் சிர்ரதான கஜானுவின் திறவு கோலைப் பெற்று,

மெய்தரும் பாதைக் கெல்லாம் வெளிதரும் ராஜவாழ்

இந்த கய்பில்லா அடிமை யென்னும் [வே

ஆரிபாப் பதவிசேர செய்தருள் கிருபை—என்றும்

சய்யிதா முஹியிதீனே

வேறு

சுழி முனையறிந்தே சுகம்பெற நாடு
சுல்த்தான் தஸ்தக்கீர் கௌதுல் அஃலத்தைத்
வழிபாடறிந்து கொண்டே படியேறு [தேடு
வாசியுடன் கலிமா நினைப்புடன் கூறு

தெளிவான முச்சுடர் தன்னிலே சேரு
திங்கள் முஹம்மது நபி வருவார்கள் பாரு–சுழி

உவமைகள்

மானில் கஸ்த்தூரி மறைந்திருப்பது போல் மறைந்திருக்கும். இஷ்க்காகிறது ஆஷிக்கென்னும் வீணையினுல் கஸ்த்தூரி மாறுகிறது. எந்த மரத்தை நுகர்ந்தாலும் தன்னில் உள்ள வாடை அம் மரங்களில் பட்டு அம் மரங்கள் கஸ்த்தூரி வாடை கமழ்வது போல் அந்த ஆஷிக்கென்னும் வீணையிலும் வாசனையாகுவதற்கு வாசிலானவரை முலாகாத்து செய்தார். என்ன தேடுகிறீரென்று கேட்க ஆஷிக்கானவர் சொல்கிருர். கஸ்த்தூரியுடைய வாடையைத் தேடுகிறேனென்ருர். அதற்கு வாசிலு கஸ்த்தூரியுடைய வாசமுண்டு அது ஜடலமென்னும் வீணையிலிருக்கிறது. பார்த்துக் கொள்ளென்று சுட்டிக் காட்டினுர். அதனைக் கண்டு ஆஷிக்கு பூரித்தகமகிழ்ந்தார். வாசமாகிவிட்டார்.

ஆனபடியினுல் வேடதாரிகளல்லாமல் உண்மையுடையோர்கள் தாமா வென்று சம்பாஷணை செய்து விளக்கத்தை விளக்கின். பிரகாசத்தைப் போல் கண்டு தெளிவடைவதே சிறந்த மனமுடைய பாக்கியவான்களின் அடையாளம். ஆனபடியால் முர்ஷிதின் அல்லாமல் வழியில்லை வயதானவரல்லாமல் வாழ்வில்லை யென்பது பெரியோர்களின் உவமையின் அறிவுறுத்தல்.

சந்தேகக் காரர்களே ஹசதியர்களென்னும் எழுபத்தி ரண்டு கூட்டமென்போம். ஹேக்கு எட்டு சீனுக்கு அறுபது தாலுக்கு நான்கு ஆகக் கூடிய எழுபத்திரண்டு கூட்டமும் நரகவாதிகள்.

ஒருகூட்டமென்பது ஹேய்க்குக் கீழே ஒரு நுக்கத்து குத்தினால் ஜீமாகிவிடும். அந்த ஜீமுக்கு மூன்று சீனுக்கு அறுபது தாலுக்கு நான்கு ஆகக் கூடியது அறுபத்தேழும் அல்லாஹ் வென்னும் இஸ்முக்கு இலக்கமாம். மேலேகுறிப்பிட்ட நுட்பத்தை விளங்கியவர்கள் அல்லாஹ்வுடைய கூட்டம்.

இதற்கு பாடல்

ஒன்பத் தெட்டைத் தவிருங்கள்.

இந்த இல்மு தரிப்படாத வரை ஆஷிக்கும் வாசிலாக இயலாது. ஆரிபும் ஆஷிக்கும் வாசிலானவரிடம் மையத் தாகவேண்டும் ஆகம் அலேஹிஸ்ஸலாத்தின் உள்ளமையை அறிந்தோர்கள் எக்காலமும் விழித்தே யிருப்பார்கள். ஹயாத்தாகவு மிருப்பார்கள். அவர்களுக்கு மறைவுத லுண்டல்லாது மவ்த்தில்லை. அவர்கள் நாயனிடமிருந்து இரணமும் பெற்று ஹயாத்தாகவே இருப்பார்கள்.

நம்மளில் சிறு மவ்த் தென்றது தூக்கம். இத்தூக்கம் மவ்த்தின் உடற் பிறப்பாயிருக்கும். பெரியோர்கள் எவ்வேளையும் ஹக்கை ஷுஹூது செய்தவர்களாக விழிப்பாகவே யிருப்பார்கள். அவர்கள் விழிப்பிலும் உறக்கத்திலும் மறதி இராது. மறதியென்றது மவ்த்து. விழிப்பென்றது நினைப்பே; ஹயாத்து மறதியிற் சேராததால் அவர்கள் ஒலிமார்கள் ஹயாத்தைச் சேர்ந்தவர்கள்; மறதி

என்னும் மவத்துத்தான் துன்யாவாகும். இந்தத் துன்யாவை விட்டும் வெளிச்ச மென்னும் விழித்தவர்களாக எல்லா இன்பங்களிலும் கலந்து கொள்ளும் மக்காமென்னும் வீட்டில் போகவும் வரவும் வழியைத் தெரிந்துகொள்பவர்களாயிருக்கும். அவர்கள் ஹக்கு தஆலாவிடத்தில் வெகு சலுகை பெற்றுக் கொள்வார்கள்.

அவ்வித பாக்கியசாலிகளின் மரணம் உண்மையில் மரணமாகாது. யூனுசு நபியவர்களுக்கு மீன் வயிற்றை ஆக்கி வைத்தது போல ஆண்டவன் அவர்கள் கபுரைக் கண்ணுடியாக்கி வைப்பான். உசைர் நபியை நூறுண்டுக் காலம் தூங்க வைத்து எழுப்பியது போல அவர்களை கபுரில் தூங்க வைத்து கியாமத்து நாளில் எழுப்புவான். ஹக்கு தஆலாவைஉள்ளச்சத்துடன் வணங்குபவர்களுக்கு அவனின் ரட்சிப்பை யாராலும் மட்டிட முடியாது. அவனில் முடுகுதல் வெகு வலுப்பமானதாக விருக்கும்.

இன்னும் அஸ்ஹாபுல் கஹ்பு மூன்னூற்று ஒன்பது வருடம் மலைப் பொதும்பில் அல்லாஹ்வில் அடைக்கலமாகி கல்புக் கண் விழித்தவர்களாக தூங்கினூர்கள். அவர்களை மண்ணும் தின்று விடாமல் புரண்டு புரண்டு தூங்க வைத்தான். ஹக்கு தஆலா மிக்க குத்ரத்தும் மிகத் தகுதி வாய்ந்த சிறப்பும் நிறைந்தவன். அவனின் அந்தரங்கமான தாத்தில் முடுக வைக்க எவருக்கும் இடம்பாடாகாது.

இன்னும் மட்டிட முடியாத குத்ரத்தென்னும் தத்துவங்கள் வெளியாகிக் கொண்டிருக்கும். யாராயிருந்தாலும் ஹக்கு தஆலாவில் உள்ளச்சங் கொண்டு வெகு அளயப் பாட்டுடன் மனம் உருகுதலோடும் கினைந்து

அவன் சமூகத்தில் அதப்பு மரியாதையாக நடப்பார்களானல் அவர்கள் தங்களின் நப்ஸை தன்னை விட்டும் விலக விடாமல் அடக்கி ஒடுக்கி வாயைப் பேணுவதும் கண்ணைப் பேணுவதும் மூக்கைப் பேணுவதும் காதைப் பேணுவதும் இவ்விதம் உருப்புகள் அனைத்தையும் பேணுவதும் நாமெல்லும் அகங்காரம், கோபம், பொய், கோள், களவு, பொருமை போன்ற துர்க்குணங்களை யெல்லாம் நீக்கி அல்லாஹ்வின் சமூகத்தில் அடைக்கலமாகவும் வேண்டும். ஏனெனில் மெய்யாகவே நம் செயல் அடங்கலும் அவன் பார்க்கவும் கேட்கவும் செய்கிருன். பிடாரி நரம்பைக்காண நம்மில் முடுகுதலா யிருக்குருனென்ற அச்சத்துடன் உள்ளாலும் வெளியாலும் அவனை வணங்கி இபாதத்து செய்து வருபவர்களை அல்லாஹ் உவந்திடுவான். அவர்களை என்னில் அச்சந் தீர்ந்தவர்களென்றும் என்னில் முடுகுதல் பெற்றவர்களென்றும் அவர்களை மவ்த்தானவரென்று சொல்ல வேண்டாமென்றும் சொல்கின்றதை நல்லெண்ணத்துடன் யோசிப்பீர்களேயானல் நீங்களும் ஒரு ஞானியாவீர்கள். ஒவ்வொருவரின் செயலடங்கலும் அவன் முன்தான் நடக்கிறது யாரும் அவனை விட்டும் தப்ப முடியாது. அல்லாஹு அக்பர் வலில்லாஹில்ஹம்து!

நித்திரையின் சிர்ரு தாத்து. அதில் பொதிந்துள்ளது விழிப்பு நித்திரையில் தாத்தை மறக்கக் கூடாது. அதில் பொதிந்துள்ளதே முஹம்மது. ஹயாத்தான நித்திரை அல்லாஹ். விழிப்பே முஹம்மது.

உடலெல்லாம் நிறைந்திருப்பது றூஹு முப்தரிக்கா அது வுஜூதுக்கு குவ்வத்தாயிருக்கும். றூஹு நாத்திக்கா தொப்புளிலா யிருக்கும். றூஹு குத்ஸி கல்பிலாயிருக்கும். காஸ்ஸான பாதை கல்பாயிருக்கும். கல்பாகிறது

இடது மார்புக்குக் கீழாக யிருக்கிறது. அதில் புவாதென் னும் பலகையில் ஷம்செனுஞ் சாயத்தால் இருபானென் னும் எழுது கோலால் அல்லாஹ் வென்னும் இஸ்மை எழுதி அதை முஷாஹதா செய் என்பார்கள். சில ஷெய்கு மார்கள் அதுபோல் உரைப்பார்கள். அதனால் இணை நீங்க மாட்டாது நிரப்பமாகவும் மாட்டாது.

நிரப்பம்

நிரப்பமாகுவது:- இல்முல் எக்கீனுகுவதும் அயி னுல் எக்கீனுகுவதும் ஹக்குல் எக்கீனுகுவதும் கமாலியத் துகள் தோற்றுவதும்.

பார்க்கு மிடமெல்லாம் பரிபூரணமாக
யேர்க்கையுட னின்ற வியல்பே-நிராமயமே

என்று குணங்குடியார் பாடியதைப்பார்.

தவ்கெனும் பவ்கை நாடி தம்மில் உறவு கூடி பவ் கென்னும் பார்வையோடி பத்தியே உறாஜ¯தேடி ஷவ்கெனும் றூஹைச்சாடி ஷம்ஷ¯ தாத்ததனில் கூடி கவ்பில்லா நுஸ¯ஊலதாக காட்டும் யாமுஹியிதீனே. குர்பது லாஹூ¯ஊத்தென்னும் கோட்டையுள் புகுதல் செய்து ஷ¯ருபது தாத்துமாகி—சுகமதாய் முஸ்ஜி பெற்று ஹருபில்லா லாமக்கானில் கணபதி வாழ்வு செய்வீர் கிருபை செய்தருள்வீரென்னுள் ஹிம்மத்தே முஹியிதீனே.

இடைக்கிடை வருகின்ற உவமைகளையும் அதில் உள்ளவைகளையும் ஆராய்ந்தீர்களானுல் நல்லறிவென்னும் ஞானம் உதயமாகுமென நம்பிக்கையுண்டு மஹனென்ற நிரப்பத்தைத் தெறிந்து கொள்பவர் ஆரிபு- அவ்வாரிபு

டைய இராவில் மஃரிபாவென்னும் பொழுது உதையமா னுல் ஒருக்காலமும் மறையாது. அந்த இன்சான் அதிக ஷபீபாகயிருப்பார் அவருடைய கண் பொழுதின் பிரகாசத்தில் கூசாது. கூசுமானுல் கண்டவரில்லை.

முஹம்மதெனுங் கண்ணுடியில் முராக்கபா முஷாஹதாவில் நாஸூ~ல் குத்சியை தெரிசித்துக் கொண்டால், கய்பாகிய நாஸூ~ காண்பார்கள்.

மானிடரில் ஏழு கடல்

தன்னில் ஏழுகடலுண்டு. ஒன்று ஆஷிக்கு-இரண்டாவது இஷ்கு-மூன்ருவது கடல் உப்புத்தண்ணீர். அதில் சிப்பியுண்டாகி பிரயோஜனமாகிய முத்துண்டாகி அதன் பரக்கத்தால் விலாயத்துண்டாச்சுது. அந்தச்சிப்பி நல்ல தண்ணீரருந்திஞல் நுபுவத்தாகும் இம்மூன்றும் ஒன்ருக மாட்டாது.

முத்தைக் காணுமல், இருக்கும்வரை அது எப்படி எனில் கடலுக்குள் முத்தென்னும் (முத்தி) ஏழுதிரைக்குள் மறைவாயிருந்தது- அது ஆஷிக்காளவன் கையில் அகப்படும் முத்து. அது அகப்பட்டால், அவரின் மகிழ்ச்சி போலாயிருக்கும். அது தெண்டிப்பின் பயன் கூர்மை என்றறிவிக்கின்றது. அவ்வுவமையில் நின்றும் வெளியாகின்றதுதான் விலாயத்து என்பது.

முங்கவறியா மூடன் முத்தெடுக்கப் போய் கடலில் மூழ்கி ஹலாக்காகுமுன்னே. தகுமானவர் பாலறிந்து முச்சுடரின் நிச்சயத்தில் முங்கும் மூன்றுமொன்ருன திலே முனையறிவார் மூஃமீனே.

முத்தலக்கான மஅஷூக்கும் சுதிமான இஷ்கும் ஒன்ருஞல் ஒரு பேச்சும் பேசான். அவன் படித்த இல்மெல்லாத்தையும் தன்னிலேயே மறைத்துக்கொள்வான். நாயனுக்கொருபோதும் மாறுசெய்யான். எல்லாம் ஒன்ருக

ஹக்கென் றுகந்தான்—வுடக்கு கமாலியத்திலே ஒப்புவமை யில்லான். கமாலியத்து வாஸிலிலே ஒப்புவமையுள்ளான் வாஸிலானோர்க்கில்லை

இருவினை யுகந்தான் ஹாசிலிலே இல்லென்றயாதில் பழக்கமாவான் ஒரு நிதாருங்காணுன் ஹக்கைத் தவிர.

என்னவிதமென்று சொல்வேன்
முழங்குவதென்னுக்குள்ளாலே
ஒரு அன்னமிருந்து அழகுபிறக்க
அசைந்தசைந் தாடுவதாலே.

என்று குணங்குடி அப்பா பாடி இருப்பதைப்பார்க்கவும்.

பகுமுன் பகும் ஐனுள் மணி அதுவே. ஐனுல் ஹக்கும் ஐனுல் கமாலும் அணு அணுவாகி ஐனின் கெதி இது. ஐனின் மலர் மணமாகுமே.

ஐனின் துறை அசியார்களும் அன்வாருட நவ்தாதுவும் ஐனின் கனி கண்டுநின்ருல் ஐனின் மகிழ் தனுவானதால் ஐனுமற்றபீக்குல்லலைா வுலே.

ஐனுமற் றஹ்மானுமாம் ஐனும் லாயிலாஹ இல் லல்லாவாம். ஐனே முஹம்மதுற் ரசூலுல்லாஹி ஐனே தத்ததுவும் சிபாத்ததுவும் ஐனே வுஜூது ஷுஹூது தனில் முளங்கும் முஷாஹதா வுஜூது ஐனே.

தொங்கல்.

ஐனே காரிஜா தாபித்தாவும் ஐனே அதில் கண்ட குத்ரத்தெல்லாம், ஐனே விளைவித்து பின்னெழுப்பிப் பேணும். ஐனே பெரிய கடலெல்லாம் அமைத்து. மண்ணிற் றேகையெல்லா மதிக்கும் ஐனே.

இலங்கும் நுக்த்ததனின் சிர்ரை யானும் இல்மு இருதயக்கமலக் கண்ணால் முனைந்து முர்ஷிது முன்னிருந்து மூனே மஅரிபா ஐனைக் கண்டால், கண்டகரு ஐனில் காணுமப்போ.

மஹளாம் மர்த்தபா மக்காம் அஹமாம். மல்லா நபி யுல்லா வெளியாகவே. அஹதென்றொரு நாமம் அவ்வ லாச்சு. உஹ்து. அஹ்மது, வாஹித் ஆதம் ஆதமுதுகாலே அருவாஹெல்லாம் அல்லாஹுவென்று வெளியானதால்.

ஆலம் மிதாலுலே இருந்த சிர்ரு ஆலம் அஜ்சாமி லுருவாகியே ஆலம் இன்சானில் வெளியான பின் அருளை மறப்பது ஞாயமில்லை. ஞாயமில்லாத குற்றத்தாலே நரகம் புகுதுவான் நம்பாதவன்.

நாயன் அதுக்கொரு கருணையான நல்ல அறிவுகள் பரத்த வேண்டி கோனின் நுகப்பது அடிமைகளில் கூற வந்தோர்கள் யாவராலும் கூறிக்கூறியும் குணமில்லார்க்கு குருநூற எனக் கூற வந்தேன்.

நாறு அனுசிடா நயனங்காண நல்லோன்றன் ஐனே மெய்யிற் காட்டும் ஐனே அறிவித்த காமிலுக்கு அல்லாஹ் ரஹ்மத்துண்டாக ஆமீன்.

ஐனே கராமத்தைச் கருதார்க் கிதை விட்டும் அறி வைத்தேட அறிவைத் தேடியே யுறிமைபெற அருளுங் குருவால் நரகை விட்டும் ஷஹூது சுகூலாக தணித்த பேரால் துலங்கும் அருளன்புக் கவிகளாக துணிந்த பேரால் துலங்கும் மஅரிபா மவ்னமணி இலங்கும் யேவ லுக்காகச் சொன்னேன்.

இது வேறு.

கடலுள் சிப்பி சிர்ரு. சிப்பியுள் முத்து சிர்ரு. உயிர் வுஜூதில் நூறு முஹம்மது ஐனினுள் நூருல்லாஹ் முஹம்மதில் புதையல் வட்டமாகவும் அது அலிபாகவபடிர் தபடியால் அதைத் தாங்கலோக மில்லாமல் வட்டமும் அலிபுமாக ஒன்ருய்க் கூடிய மீம் அதாகிறது சிர்ரு முஹம்மதா யிருக்கும்.

முஹம்மதுடைய சிர்ரு முஹியிதீனுயிருக்கும். முஹியிதீனே சற்குருவென்று சொன்னது அவர்களைக் கொண்டே முஹம்மது வென்னும் பிரகாசத்தை அறிய வேணும். முஹம்மதை யறிந்தால் ஹக்கில்ச் சேர்ந்தது ஹக்குதான் கமாலியத்தில் ஹாளிறு வுஜூதாச்சுது. வுஜூதே உள்ளமையாச்சுது. உள்ளமை நுக்கத்தாச்சுது நுக்கத்து அலிபாச்சுது. அலிபு சிர்ரில் அஹதாச்சுது. சிர்ரில் அலிபு அறிவாச்சுது அறிவை அறிய ஐனே நோக்கு.

பதுக்கவும், ஒதுக்கச் சொல். எவர்க்கும் பண்பாய்ச் சொன்னேன்- அறியுமென்றுருவையின் உத்தரவாய் உற வோர் மறைவைத் திருத்த வென்று அறிவும் அறிவாய் அருவுருவை யெவரும் விரும்பி அறியவிதி.

அகமுந் தெளிவாய் அருள்பெறவே விரையும். விரையும் மேதினில்-விளங்கும் விளங்கும் வித்தைகளால் புளங்கும் புளங்கும். புகழுதுவாய் வழங்கும். வழங்கும் வரவதுவாய் வாய்க்கும் வாய்த்த பொருளதனை விளங்கிப்பார் வெற்றிபெற விரும்பும் தீனேரே மேலவரே.

இவ்வித உபதேசங்களும் நமக்கு மவ்த்தென்னும் ஞாபகமே எவ்வேளையும் உள்ளச்சத்துடன் நடந்து கொள்ள ஞாபகமூட்டுவது கடமை.

ஹக்கு தஆலா நம்மைப் படைத்ததை நினைத்து ஆங்காரமாகிய கோபம், பொய், களவு, பொருமை, ஒற்றுக் கேட்குதல், கோள்மூட்டுதல், நம்பிக்கை மோசம் செய்தல், கண்ணைக் கேடானவழியில் பார்ப்பதும், கேடானவைகளைக்கேட்பதும், கேடாக நடப்பதும் கொடுப்பதும், நினைப்பதும் இவ்விதக் கேடுகள் செய்து, அதை நாமே அனுபவிக்கும்படி ஆகிவிடும். இங்கும் அதாபு – மரண தருவாயிலும் அதாபு, மரணத்திற்குப் பின்னும், நரக வேதனையாகிய அதாபுக்குள்ளாகாமல், செய்த தவறுகளை நினைத்து அல்லாஹ்விடம் சாளையப்பாடாக அழுது, மன்னிப்புத் தேடியும், இனி ஒருபோதும், தவறுகள் செய்வதில்லை யென்று பிழை பொறுக்க, ஒவ்வொரு நாளும், மன்றாடிக் கெஞ்சுதலோடு உள்ளச்சமாக நடந்துகொள்ள அல்லாஹ்தான் நமக்குப் பிழைபொறுத்துக் கிருபை செய்திறவன்.

அல்லாஹ் அல்லாஹ் அல்லாஹ் அல்லாஹு
அல்லா சலவாத்து ஆலனபி வசலாம்
என்னையாளும் வல்லோனேயேகாந்த நாதா
தன்னை யறியுந் தவத்தைத் தந்தாளுவாய் நீ.

உன்னையல்லாது வேறு யாரை நினைப்பேன்
என்னைவிட்டும் ஹக்காக உன்னில் ஒளிப்பேன்
எந்த னிருளைத் தூராக்கி, உன்னில் ஷுஹூதை
பந்தம்போல் பற்றிப்பாய பட்தஹ் முருதி.

பர்க்கை ஜெம்ஆக்கி பண்பிலாகாமல் காலே
சருகிப் போகாமல் கார்த்துத் தஹ்ஹிர் என்ஹாலே
மாகைப் பாலூட்டை மாற்றி மவ்லாவைத் தோற்
றும்-சாகை நாமத்தை பெற்ற பல்தத்தகி துனி
ஹக்கை கல்கில் ஹக்காகக் காணு தவாணுல்
துக்கமா மென்றதால் துனக்கினீபில்ஹால்

வேறு

தயங்காம லென்மகனே சொல்லக் கேளு
தானுனஹா வெழுத்தைக் கருணைகொண்டு
மயங்காமல் மனந்தனிலே வைத்துச் சேர்த்து
வாகி யென்ற புரவி கடிவாளம் பூட்டிக்

கயங்காமல் திலேறி கமலத்துள்ளே
காரணத்திற் கண்ட பூரணமதானுர்
பயமேது மில்லையப்சா காலன் வந்தால்
பயப்படுவான் நம்முயிரைப் பிடிக்கமாட்டான்.

பாத்தினுடைய இல்மாகிறது வெண்ணையைப் போலும், லாஹிருடைய இல்மாகிறது பாலைப்போலும் பாலில்லாவிட்டால் வெண்ணையாக மாட்டாதே போல், பீரில்லாமல் பேருண்டாகாதே ஆனபடியால் காமிலான ஷெய்குல் இல்மைத் தேடி வாஸிலாகுவதுதான் சிறப்பு. அதல்லாமல் எவ்வளவு அமலில் ஈடுபட்டாலும் உப்பில்லா உணவு போலாகும்.

ஆலிமானவர் முன் அவாமுகளெல்லாம் மய்யித்து ஆரிபுக்குமுன் ஆலிம்கள் மய்யித்து. ஆரிபு ஆஷிக்குமுன் மய்யித்து- ஆஷிக்கு வாஸிலானவர்முன் மய்யித்து.

அல் ஆலிமு இல்முல் யெக்கீன் அல் ஆஷிக்கு ஐனுல்யெக்கீன். அல்வாஸிலு ஹக்குல் யெக்கீன் ஒரு கூட்டத்தில் சேருங்கள். வம்பில் வணக்கத்தை விடாமல் வல்லோனை வணங்குங்கள்- தம்பிரானை நாயனென்று தன்னையறியாதவன் சொல்லுவான்-செம்பில் களிம்பைப் போக்கிடிற் சிறந்த தங்கமாகுமே- பனிரெண்டுமாலையில்

ஷஹாதத்தென்பது திட்டப்படுத்துவது-

அஷ்ஹதுக்கு இலக்கம் முன்னூற்றுப் பத்து இந்த முன்னூற்றுப் பத்தை அதாவது அஷ்ஹதுக் கலிமாவைச் சொல்வது திட்டப்படாமல் சொன்னால் அதை கண்ணால் கண்டு திட்டப்படுத்த வேண்டும்.

அஹதுக்குஇலக்கம் பதிமூன்று. உஹதுக்குஇலக்கம் பதிமூன்று- வாஹிதுக்குஇலக்கம் பத்தொன்பது. ஆகக் கூடியது நாற்பத்தைந்தாகும் ஹாம்மென்ற ஹேக்கி அஞ்சும், மீமுக்கு நாற்பதும் ஆக நாற்பத் தைந்தும் ஹாம் மென்றுருவாகி ஆதமென்றது எழுந்தது. ஆதமென்ற தற்கு இலக்கம் நாற்பத் தைந்தேயாகும்-

உஜூதென்றதற்கு வாவுக்கு ஆறும் ஜீமுக்கு மூன்றும் வாவுக்காறும் தாலுக்கு நாலும் ஆக பத்தொன்பதும் உஜூது ஆகும்.

(பூரணம்) நூஹு ஒலியுல்லாபாடியது

பூரணத்தினடிதானெங்கே முடிதானெங்கே
பூண்டுநின்ற நடுவெங்கே மூப்பாமெங்கே-

காரணத்தினலமெங்கே- வட்டஞ்சேர்ந்து
கருத்தைந்து மொன்ருன தலந்தானெங்கே

பாரணத்திலேறுதற்கு வசைந்ததெங்கே
வன்னிமலர் தனிலே னண்டுமுகர்ந்ததெங்கே
தாரணியிலிதை யறிந்திடாதபேர்கள்
தாயில்லாப்பிள்ளைகள் போல் தயங்குவரே.

லாயிலாஹ இல்லல்லாஹு வென்பது பனிரெண்டெ ழுத்துக்கள். அதில் முதலாவது லாமும் இரண்டாவது அலிபும், ஐந்தாவது ஹேயும் பக்காவென்னும் தரிபாடா னவையா யிருக்கும் மற்ற ஒன்பதெழுத்தும். பறுவென் னும் அழிவுடையவை யென்று சொல்லப்படும்.

இனி முஹம்மதுர் ரசூலுல்லாஹி யென்பது பனி ரெண்டெழுத்துக்கள். அதில் முதலாவது இரண்டாவது நான்காவது ஐந்தாவது, ஆருவது ஏழாவது ஆக இந்த ஆரெழுத்துக்களும் பக்காவென்னும் தரிபாடானவை யென்றும் மற்ற ஆரெழுத்துக்களும் பறு வென்னும் அழிவுடையவை யென்றும் சொல்லப்படும்.

ஆக இருபத்து நான்கெழுத்துக்களின் விபரம் லா வென்கின்ற லாமும் அலிபும் பக்காவென்று வந்திருப்பதில் இல்லை யென்கின்ற நபியும் உண்டா யிருக்கின்றது இலாஹவிலுள்ள ஹேய்க்கும் பக்காவுண்டா யிருப்பதால் தரிபாடென்கிற இதுபாத்து வந்திருக்கின்றது இல்லை யென்ற சொல்லுக்குப்பின் உண்டென்று வந்திருப்பதால் இல்லையென்கிற அலீபும் லாமும் வுண்டென்கிற ஹேயும் ஒன்றாகூடி லாஹு வென்ருச்சுது ஆனதால் பக்காவென் கிற பெயரை யெடுத்துக்கொண்டது.

பக்கா வென்பதை முடிவற்ற அதிகமென்று சொல்லப்படும். எப்போது அதிகப்பட்டதோ அதிலிருந்த லாயிலாஹா விலுள்ள ஹேயாகிறது ஹா வென்கிற சப்தத்தை இல்லாஹூ வென்னும் அட்சரத்தில் ஹூ வென்று வெளியானதால் ஒன்பதெழுத்தை பறுவாக்கி மூன்றெழுத்தை பக்காவாக்கிக் கொண்டது.

அவ்வெழுத்துகள் மூன்றையும் அல்லாஹ் முஹம்மது ஆதமென்று சொல்லப்படும்.

இனி முஹம்மதுர் றசூலுல்லாஹி யென்கின்றது பனிடெண்டெழுத்துக்கள். அதில் முஹம்மது யென்பதில் நான்கெழுத்துகளுண்டு முதலாவது மீமும், இரண்டாவது ஹேயும் நான்காவது தாலும் இந்த மூன்றும் பக்காவென்னும் தரிபாடானது; அதிலுள்ள மீமாகிறது பறுவாகின்றது. அதாவது அந்த மீம் துவர்க்கத்தில் அலீபாயிருந்து மூன்றும் மர்த்தபாவில் தன் அசலைவிட்டும் மீமானதினால் பறுவாச்சுது அந்தபறுவான மீமை முந்தின அவ்வளவில் மீட்டி அலீபாக்கி பக்காவுடைய முந்தின மீமை பறுவுடைய விடத்தில் வைத்தால் அஹ்மதாச்சுது இதிலிருக்கின்ற மூன்றாவது மீமை பறுவாக்கினால் அஹதாச்சுது. அந்த மூன்று சரங்களும் பக்காவானதால் அலீபு புரண்டு றேயாகவும் ஹே சீனாகவும் தால் வா வாகவும் முன் பறுவாகிய மீமாகிறது லாமாகி இன்னென்கும் ஒன்று கூடினால் ரசூலாச்சுது. இதில் ரேயும் சீனும் வாவும் பக்காவாகி லாமான மீம்பறுவாகி லாயிலாஹவென்கிற ஹாவும் இல்லல்லாஹூ வென்கிற ஹூவும் முஹம்மதுர் ரசூலுல்லாஹி என்கிற ஹீயும் இம்மூன்றும் ஒன்றாகி ஹா வென்பது அலீபும் ஹூவென்பது யாவும் ஹீயென்பது பேயுமா இருக்கின்றது. இந்த மூன்றெழுத்தையும் இல்லல்லென்னும்

சுபாவமற்றதென்று சொல்லப்படும் அலீபுக்கு ஸபரும் வாவுக்கு பேசும் யேயிக்கி ஸேரும் பாத்தியமா இருப்பு தால் ஹாஹு⁻வஹீ யென்னும் லபீருனதாக விருப்பதால் அதன் அகமியம் யெழு நுக்கத்துக் கூடி அலீபாய் நீண்டு யாவரும் அறிவதற்க்கு அருமையாயிருந்த அலீபில் நபியாக லாம் வந்து கலந்தமையால் வெளியாகிவிட்டது அலீபு அல்லாஹு⁻வாகவும் லாம் முஹம்மதாகவும் மீம் ஆதமாக வும் துலங்கி ஆ ஊ இ யென்னும் சத்தங்கள் மூன்றும் அலீபில் மறைந்து லாமில் கலந்ததால் நபியையும் இதுபாத் தையும் பறுவையும் சக்காவையும் ஒப்புக்கொண்டு பாத் தின் ஒன்பதுக்கு பக்கா ஒன்பதாகவும் பறு பதினைந்தாக வும் கூடிய யெழுத்துக்களை இருபத்தி நான்காகப் பிரித்துக் காட்டப்பட்டது வஅல்ஸமஹு⁻ம் கலிமத்த தக்கவா.

அவர்கள் தக்வாவுடைய கலிமாவை லாஸிமாக்கிக் கொள்வார்களென்பதாம். இதை தக்வாவுடையவர்கல்பில் நின்றும் பெற்றுக் கொள்ளென்றுகும்.

அக்கலிமாவாவது லாயிலாஹ இல்லல்லாஹு⁻ வென் கிற கலிமாவாக இருக்கும். அஃதாவது அல்லாஹ் அல்லா ததுகளை விட்டு நீங்கிக் கொள்கிறது அப்படி நீங்கிக் கொள்வதை தக்வாவுள்ளவர்களிடத்தில் கேட்டு தெரிந்து கொள் அக் கலிமாவை அறியாத அவாமுகளுடைய வாய் களினுல் கேட்பது ஷர்த்தாக மாட்டாது. ஏனுல் அவர் கள் சொல்வதில் கலிமா.

ஒன்று இருப்பினும் அதன் விளக்கம் விதர்ப்பமாக இருக் குமே அதற்காகவேண்டி கலிமாவை அறிந்து நிறப்பமான வர்களுடைய கல்பில் நின்று மெடுத்தால் தவ்ஹீதென்கிற வித்து முளைத்துத் தழைத்து நிரப்பமாகும்.

ان فى ذالك لذكرا لمن له قلب اوالقى السمع وهو شهيد

இந்த ஆயத்தில் உண்மையாக மேலேவந்துள்ள பிரகாரம் கல்பை யுடையானுக்கும் அவரிடத்தில் தெரிந்து கொண்டவர்களுக்கும் இல்மென்னும் அறிவு தரிபடுமென்று அல்லாஹு தாஆலா திருவுளஞ் செய்திருக்கின்றான்.

லாயிலாஹா இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி யென்னுங் கலிமாவுக்கு தரஜா பத்துண்டு அவையாவன:-

(1) தரஜா வென்பது—படி
(2) மர்த்தபா வென்பது—உயர்வு
(3) மக்காமென்பது—தாவளம்
(4) மன்ஸிலென்பது—தானம்
(5) வுஜூதென்பது—தோற்றம்
(6) ஆலமென்பது—தேசம்
(7) சூரத்தென்பது—ரூபம்
(8) சமஉஎன்பது—அறிவு
(9) தருஷனென்பது—பார்வை
(10) நப்செஎன்பது—உதிப்பு

ஆக இப் பத்தையும் கலிமாவிற்கு தோற்றமென்றும் ஆதார மென்றும் சொல்லப்படும். இந்த ஆதாரம் பத்திலும் ஹயாத்தாகிறது அசைவு.

வித்தினுள் வேர், மரம், பணர், இலை, பூ, காய், பழம் ஆகிய இவைகள் ஒளித்திருப்பது போலிருக்கின்றது.

والله على كل شيئ محيط

அல்லாஹு தஆலா எல்லா வஸ்த்துக்களையும் அடைய வளைந்திருக்கின்றானென்று திருவுளமானதுபோல். அந்த ஹயாத்துக்கு ஐந்து குணங்களுண்டு. அஃதென்னவென்றால்: வித்தில் நின்றும் மரம்முதலிய புற்பூண்டுகளும் பிறவியால் மனு முதலிய மிருக ஜாதிகளும் முட்டையால் பறவையினங்களும் சினையினால் மீனினங்களும் புழுக்கத்தால் புழுப் பூச்சிகளும் ஜனனமாவதற்கு சிபத்து மஆனி என்கிற தாத்தோடொத்த சிபத்து ஏழுண்டு. அவைகளாவன: ஹயாத்தென்னும் ஜீவன், இல்மென்னும் அறிவு, இருதத்தென்னும் நாட்டம், குத்ரத்தென்னும் தத்துவம், சம்உ என்னும் கேள்வி, பசரென்னும் பார்வை, கலாமென்னும் மொழிதல் ஆகிய ஏழுந் தவிர சிபத்து மஃனவிய்யுடைய காரணங் கொண்டுண்டாகிய சிபத்து ஏழுண்டு. அவைகளாவன: ஹய்யுன் ஹயாத்துள்ளவன், ஆலிமுன் அறிவுள்ளவன், முரீதுன், நாட்டமுள்ளவன் காதிருன் தத்துவமுள்ளவன், சமீஉன் கேள்வியுள்ளவன், பசீருன் பார்வையுள்ளவன், முத்தகல்லிமுன் மொழிதலுடையவன் என்றும் சொல்லப்படும்.

மூச்சாகிறது ஹயாத்துடன் கொளுகிக் கொண்டிருப்பதால் அந்த மூச்சை சிலர் றூஹானி என்றும் சொல்கின்றார்கள். மண், தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இந்த ஐந்து பஞ்ச பூதங்களும் மேற் கூறிய ஹயாத்தைச் சார்ந்திருக்கிறது.

அதற்கு விவரமாவது: ஆகாயத்தில் நின்றும் நெருப்புண்டாகி, அந் நெருப்பில் நின்றும் காற்றுண்டாகி, அக் காற்றில் நின்றும் தண்ணீருண்டாகி அத் தண்ணீரில் நுரைபுண்டாகி, நுரை இறுகி மண்ணுண்டாகி விளங்குவதில்

வார்த்தை, பார்வை, மூச்சு, கேள்வி, உணர்வு ஆக இவ் வைந்தும் அதற்கு சூட்சம பூதமாயிருக்கின்றது. எனில் இதற்கு ஹயாத்தாகிறது மூலாதாரமாயிருப்பதுடன் சுன னஹம்து ஆறு அட்சரங் கொண்டுள்ளதென்றும் சொல்லப்படும். இவ்வித மெல்லாங் கூடி ஒப்பில்லாப் பொருளாய் ஆகாய மார்க்கத்தில் காற்றெழும்பி நெருப் பெழ இடியு மின்னலுடன் மழையாக வர்ஷிக்கச் செய்த தனால் கடலாகிறது பெருகி பூமியின் நான்கில் மூன்று பங்கை மூடிக்கொண்டது. அம்மூன்று பங்கின் மீதுவிழு கிற சூரியனின் கிரணங்களின் சூட்டினால் அக்கடல்நீரில் நின்றும் ஆவியுண்டாகி, அத்துடன் அக்கடலிலிருக்கின்ற ஜந்துக்களுடைய ஆவியுஞ் சேர்ந்து அக்கினி மண்டலஞ் செல்ல நாடியபோது குளிர் தங்கிய காற்றானது அவ்வாவி யைக் கொண்டெழுந்து பனி மண்டலத்திற் சென்றவுடன் அப் பனியின் குளிர்ச்சியாலும் காற்றுடைய வழக்கத்தா லும் அந்த ஆவி கட்டுண்டு புகையின் ரூபமாய் வெளியா கின்றதனால் அதனை ஆவர்த்த மென்கிற நீர்மேக மென்று சொல்லப்படுகிறது.

அம் மேகத்தை அல்லாஹுத்தஆலாவின் உத்தாரங் கொண்டு, காற்றானது இழுத்து அவன் நாடியவிடங்களில் மழைகளைப் பெய்யச் செய்கின்றான். அதனால் பூமிகுளிர்ந் தும் ஆறருவிகள் பெருகியும் பற்பல விருட்சங்களும் பூண்டுகளும் முளைத்துச் செழித்துக் கனிகளையும் மற்றைய வஸ்துக்களையும் கொடுப்பதால் மனிதர்கள் புசித்துப் பிழைத்திருப்பார்களென்று அஜாயிபுல் மகுலூக்காத் தென்னுங் கிதாபில்.

هو الذي ارسل الرياح بشرا

என்கிற ஆயத்தின் பொருள் எழுதப்பட்டிருக்கின்றது. ஸல்லாஹு அலைஹி வஸல்லம்.

وجعلنا من الماء كل شيئى حى

எனும் ஆயத்தில் ஆல்லாஹு தஆலா நாம் ஆக்கி வைத்தோம் தண்ணீரில் நின்றும் வஸ்த்துக்களனைத்தையும் ஹயாத்தா இருக்கும் பொருட்டென்று திருவுளமாயிருக்கின்றனே அந்தத் தண்ணீரினுல் பூமியின் கண்ணிருக்கின்ற வித்துக்களாகிறது முளைத் தெழும்போதே பூமியின் நிறத்தைத் தொலியில் மஞ்சள் நிறமாகவும் தண்ணீரின் நிறத்தை புஷ்பங்களில் சிவப்பு நிறமாகவும் நெருப்பின் நிறத்தை மர வைரத்திற் கருமையாகவும் காற்றின் நிறத்தைஇலைகளிற் பச்சையாகவும் ஆகாயத்தின் நிறத்தை வித்தில் வெண்மையாகவும் காண்பித்து அவைகளிலுண்டாகி இருக்கும் சத்துக்களாகிய அறுசுவைகளில் இலட்பை வேரிலும் துவர்ப்பை பட்டையிலும் கரிப்பை சாரத்திலும் கசட்பை மர வைரத்திலும் புளிப்பை இலையிலும் இனிப்பை பழத்திலும் காட்டி வளர்வதில் மண்ணினுலுக்கி அழிதலும் தண்ணீரால் ஊற்றுண்ணலும் நெருப்பால் காய்தலும் காற்றினுல் வெடிப்பதும் ஆகாயத்தாற் சாவியாகுவதுமாகிய ஐந்தும் நபாதாத்துகளுக்கு அதாவது புற்பூண்டுகளுக்கு பிணியெனப்படும். இதற்கு பிரிவு இருபத்தைந்துண்டு. அதாவது,

மரம், நார், சக்கை, தோல், இலை இவ்வைந்தும் மண்ணின் செய்கை. இவைகளுக்கு முவக்கல் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம்.

நீர், சாறு, பால், பிசின், எண்ணெய இ[illegible] தண்ணீரின் செய்கை இவைகளுக்கு முவக்கல் மீக்காயீல் அலைஹிஸ் ஸலாம்.

வாடல், காய்தல், சுருங்கல், வெடித்தல், வேகல், இவ்வைந்தும் நெருப்பின் செய்கை இவைகளுக்கு முவக்கல் இஸ்ருயீல் அலைஹிஸ் ஸலாம்.

ஆடல், அலைதல், முறிதல், பார்த்தல், இறைதல் இவ்வைந்தும் காற்றின் செய்கை இவைகளுக்கு முவக்கல் இஸ்ருபீல் அலைஹிஸ் ஸலாம்.

மரம் மரத்திலிருந்து பூ, பூவிலிருந்து காய், காயிலிருந்து பழம், பழத்திலிருந்து விதை இவ்வைந்தும் ஆகாயத்தின் செய்கை. இவைகளை உற்பத்தியாக்கும் முவக்கல் அடுல் அர்வாஹ் என்று சொல்லப்படும். ஆனால், மேலே சொல்லியவை அடங்கலும் ஒவ்வொன்றுயுக் கடந்து மீண்டும் வித்திற்குட் சேகரமாகுவதால் ஒன்றை விட்டொன்றைப் பிரிக்காமல் மொத்த ஆதாரமாக இருந்ததே அஂத மர்த்தபா வென்பது.

இதனை லாத்து ஐனென்னும் குறிப்பில்லாத தென்றும் ஹக்கீக்கத்து ஹக்கென்றும் கன்ஸ மக்பியென்றும் முன் கதவுல்விஷராத் தென்றும் முன்கதவுல் விஜ்தானி யென்றும் அதமுல் அதமென்றும் அபதுல் ஆபாதென்றும் மஜ்ஹ-அலி நுகத்து என்றும் வராஉல் வரா என்றும் ஙய்புஹ-வியத் தென்றும் லாஇஃத்திபா ரென்றும் லாஷபீத்தி ஷெய்யின் என்றும் இன்னுமனேக விதமெல்லாஞ் சொல்லப்படும்.

இவைகளுக்குட் [illegible]யில் தரஜா பத்துண்டு. அதில் [illegible]யது தரஜா. தரஜாவென்பது படி. அதிலிருப்பது லா அதன் கருத்து பொத்துன் நப்சிய்யத்து இவையாவது தாத்தோடொத்த பெத்து. இதற்கு மஅனா வுஜூது. வுஜூதுக்கு மஅனா உண்டென்பது. அஃது யாதொரு நிச்சயத்தில் நிதானப்படுத்துவதற்குக் குறிப்பற்றதென்று சொல்லப்படும்.

இரண்டாவது மர்த்தபத்து. மர்த்தபாவென்பது உயர்த்தி. அதிலிருப்பது அஹதிய்யத்து. அதன் கருத்து ஹக்கீக்கத்துல் ஹக்கு. அஃதாவது குறிப்பில்லாததற்கு யாதொரு உயர்வு தாழ்வு இல்லையென்று சொல்லப்படும்.

மூன்றாவது மக்காம். மக்காமென்பது தாவளம். அதிலிருப்பது வஸ்லு. அதன் கருத்து கன்சுல்மகுபி இதைக் கூடுதல் பிரிதலில்லையென சொல்லப்படும்.

நான்காவது மன்ஸில். மன்ஸிலென்பது தானம். அதிலிருப்பது ஹாஹூத்து. அதன் கருத்து முன்கதவுல்லிஷாரத்து. இது வெளியாவதற்கு யாதொரு இடமற்றதென்று சொல்லப்படும்.

ஐந்தாவது வுஜூது. வுஜூதென்பது தோற்றம். அதிலிருப்பது வஹதத்துல் வுஜூது. அதன் கருத்து அதமுல் அதம். இதைத் தோற்றமென்றும் தனக்குத் தெரியாததென்றும் சொல்லப்படும்.

ஆறுவது ஆலம். ஆலமென்பது தேசம். அதிலிருப்பது ஆலமூல் ஙய்பு. அதன் கருத்து அபதுல் ஆபாது. இது இன்ன தேசத்தில் தானிருக்கிறதென்ற குறிப்பில்லை என்று சொல்லப்படும்.

ஏழாவது ஸூரத்து. ஸூரத்தென்பது ரூபம். அதிலிருப்பது பேஸூரத்து. அதன் கருத்து மஜ்ஹூல் நுக்கத்து. இதை அதற்கொரு சொரூபமில்லை என்று சொல்லப்படும்.

எட்டாவது சமஜ். சமஜென்பது அறிவு. அதிலிருப்பது பூஜா. அதன் கருத்து வராவுல் வரா. இதுவாகிறது இன்ன சுருபமெடுக்கவேண்டுமென்கிற அறிவில்லையென்று சொல்லப்படும்,

ஒன்பதாவது தர்ஷன், தர்ஷன் என்பது பார்வை. அதிலிருப்பது தாத்து. அதன் கருத்து ஙய்பு ஹூவியத்து. இதுவாகிறது அதற்கோர் பார்வையுமில்லை யென்று சொல்லப்படும்.

பத்தாவது ஙப்சு. ஙப்சென்பது எண்ணம். அதிலிருப்பது ஙப்சு முல்ஹிமத்து. அதன் கருத்து'லா இஃதிபார் இதாகிறது தன் எண்ணம் தனக்குத் தெரியாதென்று சொல்லப்படும்.

மேலே சொல்லி வந்தவை அடங்கலும் தாத்தும் சிபாத்தும் மற்றைய மவ்ஜூதாத்துகளும் ஒன்றைவிட்டொன்று பிரியாதிருந்ததே அந்த மர்த்தபா வென்றறிக.

இரண்டாம் பசுல்

تسقى بماء واحد

அல்லாஹு வதஆலா துஸ்கா பிமாயின் வாஹிதின் என்னும் ஆயத்தில் நாம் குடிப்பாட்டிஞேம். ஒரு தண்ணீரை அதைப் பிரிவாக்கிஞேம் ஏற்ற குறைத்தலாக நீங்கள் புசிக்கும் வஸ்த்துக்களின் சுவைகளை என்று கூறிருக்கிறுன். ஆனபடியால், ஆகாயமானது அந்தரமாயிருப்பதால் அதில் நின்றும் காற்றெழும்பி அக்கினியை விளைவித்து நம்மையறியாமல் நமக்கே பசியையுண்டு பண்ணினதால் அந்தப் பசியைத் தணிக்கும் பொருட்டு ஊண் தேடுவதில் மானிடர்களுக்குறிய கனி வர்க்கங்கள் இலை இனங்கள், நீர் வகைகள், மாமிசங்கள் இந் நான்கு விதமானவைகளைப் புசித்ததாலே கனிகளால் வாய்வும், இலைகளால் வறட்சியும், நீரினுல் குளிர்ச்சியும், மாமிசத்தால் அக்கினியும் உற்பவிக்கின்றது. அப்படிப் புசிப்பதில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கசப்பு, இலைப்பு, கரிப்பு இவ்வறு சுவைகளுமுண்டாம். அவைகளில் இனிப்பினுல் பேறும் துவர்ப்பினுல் இளமையும், புளிப்பினுல் மூப்பும், கரிப்பினுல் இன்பமும், இலைப்பினுல் பிணியும், கசப்பினுல் மரணமும் நிறைந்திருக்கின்றது.

இன்னும் நெல் முதலிய தானியங்களைத் தின்பதில் அதன் சத்துக்களை உண்ணுவானது இழுத்துக் கொள்ளும். மற்றது மல ஜலமாய்க் கழிந்துவிடும்.

ونحن اقرب اليه من حبل الوريد

என்னும் ஆயத்தில் அல்லாஹு தஆலா நாம் முடுகியுள்ளோம். வரீது என்னும் புழை நரம்பைக் காணவென்றும் திருவுளமாயிருக்கின்றானே அந்தப் புழை நரம்பானது உண்ணுவு இழுத்த சத்துக்களை வாங்கி அதிலுள்ள சுவைகளில் இன்பத்தைத் தாமரைக் காய்க்கும், புளிப்பை நுரையீரலுக்கும் கசப்பைப் பித்துக்கும், கரிப்பைக் கருயீரலுக்கும் இலைப்பை மண்ணீரலுக்கும் செலுத்துகின்றது.

இவ்விதம் செலுத்தியதில் தாமரைக் காயில் இன்பம் சென்றவுடன் அத் தாமரைக்காய் விம்மி அதில் நின்றும் அக்சாப் பென்னும் வெண்ணரம்பில் ரத்தமூரி பீர்க்கின், நெற்றியின் உள்ளேயிருக்கின்ற விதமாய் உடலெங்கும் சுற்றியிருக்கும் உறூக்கு என்னும் இந்திரிய நரம்பிற் செல்ல அவ்விரத்தத்தால் சதையாகி அச்சதையால் கொழுப்பாகி அக் கொழுப்பால் மூளையாகி அம் மூளையால் விந்தாகி, அவ்விந்தில் கபமுண்டாகி அத்துடன் தத்துவங்களும் கலந்திருக்கின்றது.

மேற்கூறிய மூன்று நரம்புகளுக்கும் வாத, பித்த, சிலேத்மமென்று பெயர் சொல்லப்படும்.

தத்துவங்கள் நப்சிய்யத் ஒன்று. சல்பிய்யத் ஐந்து. மஃனவிய்யத் ஏழு. லெபுலிய்யத் ஏழு. பக்கா ஒன்பது தரஜா ஆறு. மர்த்தபா ஆறு. மக்காம் ஆறு. மன்ஸில் ஆறு, வுஜூது ஆறு, ஆலம் ஆறு. சூரத்து ஆறு சமஜூ ஆறு. தர்ஷன் ஆறு, நப்சு ஆறு. குப்ரியத் இரண்டு. ஷிர்க்கு நான்கு. அன ஒன்று ஆகிய தொண்ணூற்றுறுக்கும் ஐறுல் அவ்வலென்றெ முந்தின குறிப்பென்றும்.

ஹக்கீக்கத்து முஹம்மதீ என்றும், அவ் அதுரு வென்றும் காபிலிய்யத்துல் மஹலு என்றும், கலமுல் அஃலா என்றும் றூஹுல் குத்சி என்றும், அபுல் அர்வாஹ் என்றும், றூஹு என்றும், காபகவ்சைனி என்றும், நூறுல் அவ்வலு என்றும், அக்லுல் அவ்வலு என்றும், ஷுரத்து லாஷைஉன் என்றும் இன்னும் அனேகவிதமெல்லாம் சொல்லப்படும். இவைகளுக்கும் கவிமானில் பத்து தரஜாக்கள் உண்டு. அவைகளில் முதலாவது தரஜா. தரஜாவென்பதுபடி அதிலிருப்பது இலாஹ. அதன் கருத்து சிபாத்து சல்பிய்யா அஃது தாத்துக்குத் தகுதி இல்லாததை நீக்குவதில் ஐந்து. அதாவது கிதம் என்னும் பூர்வீகம் அதை உண்டென்பது வந்தும் இன்னதுதானென்று சொல்வதற்குக் குறிப்பற்றதெனச் சொல்லப்படும்.

இரண்டாவது மர்த்தபத்து. மர்த்தபா வென்பது உயர்வு அதிலிருப்பது வஹதத்து. அதன் கருத்து ஹகீக்கத்துல் முஹம்மதீ இஃது உயர்வு தாழ்வு இல்லாததற்கு உயர்வுண்டாச்சுதென்று சொல்லப்படும்.

மூன்றுவது மக்காம். மக்காமென்பது தாவளம். அதிலிருப்பது தவ்ஹீது. அதன் கருத்து அவ் அதுரு இதை உயர்ந்ததும் தனித்ததென்றும் சொல்லப்படும்.

நான்காவது மன்சில். மன்சிலென்பது தாவளம். அதிலிருப்பது லாஹூத்து. அதன் கருத்து காபிலிய்யத்துல் மஹலு இதனை தனித்தும் தானமற்றதெனச் சொல்லப்படும்.

ஐந்தாவது வுஜூது. வுஜூதென்பது தோற்றம். அதிலிருப்பது ஆரிபுல் வுஜூது. அதன் கருத்து கலமுல் அஃலா

இதைத் தானமற்றிடினும் அறிவென்கிற தோற்றமிருக்கிறதென்று சொல்லப்படும்.

ஆறுவது ஆலம். ஆலமென்பது தேசம். அதிலிருப்பது ஆலமுல் லத்தீபு. அதன் கருத்து றூஹுல் குத்சி அந்தத் தோற்றத்திற்குக் கண்டிப்பில்லையெனச் சொல்லப்படும்.

ஏழாவது சூரத்து. சூரத்தென்பது உருவம். அதிலிருப்பது தாத்துகே சூரத்து. அதன் கருத்து அபுல் அர்வாஹ் இதற்குச் சொருபமில்லையென்று சொல்லப்படும்.

எட்டாவது சமஜு. சமஜென்பது அறிவு. அதிலிருப்பது சூஜு அதன் கருத்து றூஹு இதனை அதற்கறிவு உண்டென்று சொல்லப்படும்.

ஒன்பதாவது தர்ஷன். தர்ஷன் என்பது பார்வை. அதிலிருப்பது நூறு. அதன் கருத்து காபகவ்சைனி இதனை அந்த அறிவுக்குப் பார்வை இருக்கிறதென்று சொல்லப்படும்.

பத்தாவது நப்சு. நப்சென்பது எண்ணம். அதிலிருப்பது நப்சு ரஹ்மானிய்யத்து. அதன் கருத்து அக்லுல் அவ்வல். இதனை அந்தப் பார்வைக்கு அறிவை வளர்க்கும் எண்ணமிருக்கிறதென்று சொல்லப்படும்.

இவ் விடத்தைத்தான் தாத்தும் சிபாத்தும் மற்றுமுள்ள மவ்ஜுதாத்துகளனைத்தும் ஒன்றைவிட்டொன்றும் பிரியாதபடி மொத்தமாயிருந்த அறிவு வெளியாச்சுதென்று சொல்லப்படும்.

மூன்றும் பகுல்

نحن قسمنا بينهم

என்ற ஆயத்தில் அல்லாஹு வதஆலா நாம் பங்கிட்டு விட்டோம் உங்களுக் கிடையில். உங்கள் நாட்டத்தை ஹயாத்திலேயே துன்யாவிலென்று திருவுளமாயிருப்பதின் விளப்பமாவது: ஆண்டவன் மனிதர்களை நோக்கி நீங்கள் பூமியின் கண் ஜீவனோடிருக்கும் காலமெல்லாம் காலத்தில் உங்களுடைய எண்ணங்களை உங்களுக்கிடையில் நாம் பாகித்துவிட்டோ மென்றதாகும். ஆதலால், மனிதனுக்குக் கல்பு இரண்டுண்டு. அதிலொன்று கல்பு ஹகீக்கீ, மற்றொன்று கல்பு மஜாசி எனப்படும். இதற்கு விபரம் கல்பு ஹகீக்கீயிலிருந்தும் எழும்புகிற உதிப்பாகிறது தபாயிஊன் என்கிற சூடு குளிர்ச்சி சீதளம் வறட்சிகளாகிய பூதங்களிற் கலந்து அசைந்து எரிகின்ற தீபம் போல் அவ்வுதிப்பு நிலையில்லாது ஆடி நிற்பதை மஜாஸியானது ஞானங்கள் ஐந்திலும் செலுத்திவிடுகின்றது. ஆகையால் இதைவிட அனுமதி பெறுவதற்கோர் அணுவேனும் வேறிடமில்லை யென்றாகும்.

அல்லாஹு தஆலா ஹதீது குத்ஸியில் லாத்தத்த கர்ரக்க தர்றத்தன் என்ற ஹதீதின்படி ஓரணுவாவது ஹக்குடைய உத்தார மில்லாமல் அசையாததென்று திருவுளமாயிருக்கின்றான். கல்புகளுக்குப் பொருள் மனம் புத்தி என்றும் உளம் புந்தியென்றும் சொல்லப்படும்.

மேற் கூறிய பூதங்களில் மண்ணுனது எலும்பு, நரம்பு, மாமிசம், தொலி, உரோமம் ஆக ஐந்தையும் வெளியாக்கும். தண்ணீராகிறது மூளை, விந்து, சிறுநீர், பேதி, வாந்தி ஆக ஐந்தையும் வெளியாக்கும். நெருப்பாகிறது அசதி, பசி, தாகம், செமியல், சோம்பல் ஆக ஐந்தையும் வெளியாக்கும். காற்ருகிறது கேள்வி, கொட்டாவி விக்கல், நடை, ஆட்டம் ஆக ஐந்தையும் வெளியாக்கும். ஆகாயமானது கிருபை, லோபம், கோபம், பயம், உண்மை ஆக ஐந்தையும் வெளியாக்கும். ஆக இவ்விருபத்தைந்தையும் அதிலடக்கி பஞ்சபூதமென்று கூறப்படுகின்றது.

மனம், புத்தி, அகங்காரம், சித்தம், வாயுப்பஞ்சகம், இவ் வைந்தையும் காரணங்களென்று சொல்லப்படும்.

இவைகளில் மனம் உதிக்கிறது, புத்தி அறிகிறது, அகங்காரம் உதித்தெழும்புகிறது, சித்தம் அதைப்பறிமாற்றம் செய்கிறது, வாயுப்பஞ்சகம் அதை ஐம்புலன்களிலும் ஓட்டுவிக்கின்றது.

ஆனதால் மனதை புத்தியிலும் அகங்காரத்தை சித்திலும் அடக்காததால் நன்மையும் தீமையும் உடையவன் என்று சொல்லப்படுகின்றது.

كل يوم في شان

என்னும் ஆயத்தில் அல்லாஹுதஆலா ஒவ்வொரு நாளும் நடக்கிறதடங்கலும் அவன் புறமென்று திருவுளமாயிருக்கின்ருன். ஆனதால் கல்பு ஹகீக்கீய் யாகிறது

அதாகிறது வன்னிப்பையுடைய மொத்த ஆதார
சிபத்து.
மான அறிவைப் பிரிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்
டவுடன் அவ்வெண்ணம் ஐம் பூதங்களில் கலந்து சூரிய
னின் கிரணங்களானது பூமியெங்கும் பிரகாசிப்பதுபோல
திரேகமெங்கும் அவ்வெண்ணமானது பரவி தொலி, சதை
எலும்பு, மூளை, ரத்தம், விந்து, கபம் அல்லது இரசமென்
னும் இவ்வேழையும் தாத்தென்று சொல்லப்படும்.

அந்த ஏழு அடைப்புகளுக்குட் சென்றவுடன் இரு
புருவத்துக் கிடையில் கடுகுப் பிரமாணமுள்ள ரபீம் என்
கிற முள்ளானது மேற் கூறிய தாத்துக்குள்ளிருக்கும் சத்
துக்களை காந்தம் இரும்பை இழுப்பது போல லபில்மீர்
சாத் என்கிற வாசல் வழியாய் இழுத்து சிரசிலேற்றிவிடு
கின்றது.

يحى العظام وهى رميم

என்றும் மீண்டும்

ان ربك لبالمرصاد

என்றும் அல்லாஹு தஆலா திருவுளமானதுபோல்
அந்தரமாக எழும்பிய உதிப்பில் காற்றுண்டாகி அக்காற்
றில் நெருப்புண்டாகி அந் நெருப்பில் தண்ணீருண்டாகி
அத்தண்ணீர் வெளியாகும்போது வாலையில் இறங்குந்
திராவகம் போல அதற்குள்ளிருக்கின்ற பொருட்களின் சத்
துக்கள் வேர்வையாக வெளியாவது போல் பேரும். இள
மையும், செல்வமும், பிணியும், மூப்பும், மரணமும்
இவைகளோடு மேற் கூறிய பூத சத்துக்களையும் சேர்த்து
திரேகத்தில் வசிக்கின்ற நரம்பின் வழியாக அந்தரபிந்து

குணகுணங்கள் இரகசம்பந்தப்படி புருவத்திடையிலிருக்கும் றமீம் என்கிற எலும்பிற் கூடுகிறது. அது பற்பல பிரிவாய் நரம்பின் வழியாய் வந்து கூடியதை குன்னென்று சொல்லப்படும். குன் என்பதை அம்ரென்னும்ஏவலென்று சொல்லப்படும் உத்தரவென்றும் சொல்வதுண்டு, உம்மிடத்தில் றூஹைப்பற்றி கேட்பார்களேயானால் றூஹாகிறது என்னுடைய றப்புடைய அம்ரென்று சொல்லுமென்று அல்லாஹுதஆலா திருவுளஞ் செய்திருக்கின்ருன். இவ்விடத்தையே அயியான் தாத்தா யென்ருகும் ரோஸ் மீதாக்கு என்றும் விதி கூடிய தானமென்றும் சொல்லப்படும்.

இனி பொத்து மஆனி பொத்து மஆனியுடைய விபரம் மூன்ரும் மர்த்தபா வாஹிதிய்யத்தில் வெளியானது அறிவு. அதில் விதிகூடி அயியான் தாபித்தாவாச்சுதே அந்த அறிவை இல்மு என்றும் அந்த அறிவு தான் வெளியாக நாடுச்சுதே அந்த நாட்டத்தை இருதத் தென்றும் அந் நாட்டமெங்கும் பரவிய சத்தை ஒன்ருகச் சேர்க்க வேண்டுமென்கிற தத்துவங் கொண்டதே அந்தத் தத்துவத்தை குத்ரத்தென்றும் அந்தத் தத்துவமெங்கும் பரவியதை ஒன்ருக்கி சிரத்தில் கூட்டிப் பார்வை யிட்டதே அந்தப் பார்வையை பசறு என்றும் அப் பார்வையாகிறது ஒன்ருக சிரத்தில் கூட்டிப் பார்த்தவுடன் இன்னின்ன கற்பனை குன் என்று உண்டானதைக் கேட்டதே அக் கேள்வியை சம்உ என்றும் சொல்லப்படும்.

இவ்வளவுக்கும் முந்தின மூலம் ஹயாத்தாக இருப்பதால் முதுகின் எலும்புக் கிடையில் முக்கோண நடுவில் ஓர் அரிசிப்பிரமாணமுள்ள உத்புதன்பு என்கிற எலும்பா

கிறது உச்சியிற் சேகரமா இருக்கின்றதென் கூறிய ஜலத் தைக் காக்கைப்போல் இறுக்குக் கொண்டவுடன் நபி ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஆதமுடைய மக்க ளின் சிரத்திலை பூமி இக் றனிறும். உஜுதுகுன்பு என் னும் முன்னைத் தவிரவென்று இருவனரமாயிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட எலும்பில் அந்த ஜலமும் கலந்துகொள் ளும்.

அப்படிக் கலந்த ஜலமாகிறது பெண்களின் மார்புக் கிடையிலிருக்கும் வுஜூதுகுன்பு என்கின்ற எலும்பில் அவர்களுடைய சுக்கிலம் வந்து கலந்தவுடன் வெளுத்துப் பாலாகி விடுகின்றதுபோல, இந்த ஜலமும் வெளுத்து விந்தாகி விடுகின்றது. அல்லாஹு தஆலா

يخرج من بين الصلب والترائب

ஆண்களுக்கு முதுகு எலும்பாலும் பெண்களுக்கு இரு மார்புக் கிடையிலும் விந்து வெளிப்படுமென்று திரு வுளமாயிருக்கின்றான். அந்த விந்தாகிறது பீசத்திற் சென்று அங்கிருந்து ஆண் குறி வழியாக மூன்றசைவுக ளுடன் அசைவுக்கொரு துளியாக பெண்களின் கருப் பையில் பாய்ந்து இரத்தத் துளிகளிலொன்றாய்க் கலந்து கூடுவது போல் அம்மூன்று துளியும் ஒன்றாய்க் கலந்து ஆணிமுத்தைப் போலாடி நிற்கும். அவ்வேளையில் ஆட வர்களுக் கொப்பாய் பெண்களின் சிரசிலிருக்கின்ற ஜலம் வழிந்து அவர்களின் நடு நெஞ்சின் கண்ணிருக்கின்ற வுஜூ புதன்பில் கலந்து நாதமாகி மேற்படிப் பையில் ஓடி அங்கே ஆணி முத்தைப் போலும் இரத்தத் துளியைப் போலும் ஆடி நிற்கின்ற விந்தைக் கவசம் போல மூடிக் கட்டிக்

கொள்வதால் விதியை மதி மூடிற்றென்றும் பயக்கூன் என்றுஞ் சொல்லப்படும். பயக்கூன் என்பதற்குக் கருத்தாவது நீங்கள் வந்தபடி நாங்களாகிக் கொள்வோம் என்பதாம். இதனை முஸ்தக்பல் வருங்காலமென்று சொல்லப்படும்.

ஒரு சிசுவுக்கு தகப்பன் பங்கு நான்கென்றும் தாயின் பங்கு நான்கென்றும் அவைகளில் எலும்பு, நரம்பு, மூளை விந்து இந் நான்கும் தகப்பன் பங்கென்றும், இரத்தம் சதை, தொலி, உரோமம் இந் நான்கும் தாயின் பங்கென்றுஞ் சொல்லி எட்டு வஸ்துவையும் பங்கிட்டிருப்பதற்குச் சரியான திருஷ்டாந்தமும் மனோரஞ்சிதமாகிய ஞானத்துக்கு உபயோகமில்லாமையால் அதை விடப்பட்டது.

முன் சொன்னதில் கலாவே முஹ்க்கம் என்றும் கலாவே முபுரம் என்றும் இரண்டுண்டு. அவைகளில் கலாவே முஹ்க்கம் என்றதை விதியென்றும் கலாவே முபுரம் என்றதை விதியல்லாததென்றும் சொல்லப்படும்.

இவைகளில் தந்தை தாய் இவ்விருவருக்கும் விதியும் விதியல்லாததுமிருப்பதால் தந்தையின் புறத்தால் வந்த விதியல்லாததையும் தாயின் புறத்தால் வந்த விதியையும் மாதாவின் நாதங் கூடும்போது மாற்றிவிடுகின்றது. அது ஏனெனில் இவ்விருவருக்கும் விந்து வழி வெவ்வேறாயிருப்பதால் மேற்சொன்ன முஹ்க்கம் முபுரம் இவ்விரண்டுக்கு மிடையில் கலாவென்னும் விடப்பட்டது. கத்று என்னும் வல்லபமும் ஊடாடி வரும். இதனை அல்லாஹுதஆலாவால் முடிவுசெய்த உத்திரவென்று சொல்லப்படும்.

இவைகளை தஜாயுஜுஜானி என்கிற இரண்டாம் குறிப்பென்றும் ஹகீகத்துல் இன்சானென்றும் நஃசு ரஹ்மானிய்யத்தென்றும் தஜல்லத்தானி உம்மஹாத்துல் பொத்தென்றும் அஜலென்றும், ஆலம் அம்ரென்றும், ஆலம் ரூஹென்றும். நுக்கத்தஜுவென்றும். பிஷுறும். நூறு மிஹாத்தென்றும். ரத்தி ஷய் என்றும் இன்னும் அநேக ஆதாரங்களும் சொல்லப்படும். இவைகளுக்கும் கலிமாவில் பத்து தரஜா இருக்கின்றது.

முதலாவது தரஜா. தரஜாவென்பதுபடி. அதிலிருப்பது இல்லல்லாஹு. அதன் கருத்து பொத்துல் சல்பிய்யாத் தாத்துக்குத் தகுமல்லாததை நீக்குவது.

இரண்டாவது பக்கா. இதன் பொருள் முடிவற்றதாகும். அதென்னவென்றால் குறிப்பில்லாததற்குக் குறிப்புண்டாகித் துணையைத் தேடிக் கலந்து தன்னைத் தவிர வேறில்லை யென்றதாம்.

இரண்டாவது மர்தபா. மர்த்தபாவென்றது உயர்வு. அதிலிருப்பது வாஹிதிய்யத்து. அதன் கருத்து ஹகீக்கத்துல் இன்சான். அதாவது வேறொன்றையும் காணாமல் தானாகத் தனித்ததென்றதாம்.

மூன்றாவது மக்காம். மக்காமென்பது தாவளம். அதிலிருப்பது மஅரிபத்து. அதன் கருத்து நஃசு ரஹ்மானிய்யத்து. அதாவது தானாகத் தனித்துத் தன்னை அறிவதற்குத் தாவளமாச்சு தென்றதாம்.

நான்காவது மன்ஸில். மன்ஸிலென்பது தானம். அதிலிருப்பது பாஹூத்து. அதன் கருத்து தஜல்லத்தானி அதாவது தன்னை அறிவதற்கு தானமாச்சுதென்றதாம்

ஐந்தாவது வுஜூது. வுஜூதென்பது தோற்றம். அதிலிருப்பது ஷுஹூதுல் வுஜூது. அதன் கருத்து உம்முஹாத்துஸ் சிபாத்து. அதாவது ஒப்பிடப்பட்ட தோற்றமுண்டாயிற்றென்பதாம்.

ஆறாவது ஆலம். ஆலமென்பது தேசம். அதிலிருப்பது ஆலம் உலூஹிய்யத்து. அதன் கருத்து ஆலம் அப்று. தோற்றம் தரிப்பதற்கு இடமாயிற்றென்பதாம்.

ஏழாவது சூரத்து. சூரத்தென்பது உருவம். அதிலிருப்பது சிபாத்துக்கே சூரத்து. அதன் கருத்து ஆலம். அதாவது வர்ணிக்கப்பட்ட சூரத்தாச்சுதென்று சொல்லப்படும்.

எட்டாவது சமஜு. சமஜென்பது அறிவு. அதிலிருப்பது லூஹூறு. அதன் கருத்து ஆலம் அஜல். அஃதாவது சூரத்து வெளியாவதற்கு அறிவுண்டாச்சுதென்று சொல்லப்படும்.

ஒன்பதாவது தர்ஷன். தர்ஷனென்பது பார்வை. அதிலிருப்பவை சிர்ரு. அதன் கருத்து நூறுடீதாத்தி. அதாவது தனக்குள் மறைவாகிய உறுப்புக்களை வெளியாக்கிப் பார்க்கின்றதென்பதாம்.

பத்தாவது நப்சு. நப்சென்பது எண்ணம். அதிலிருப்பவை நப்சு லவ்வாமத்து. அதன் கருத்து நுக்கத்தா ஐனு. அதாவது பார்வையிட வேணுமென்ற எண்ணம், வெளியாச்சுதென்று சொல்லப்படும். இங்ஙனம் சொல்லியலைகள் நீண்டிருந்த போதிலும் மணமானது ஒரு க்ஷணத்தில் பதினெண்ணாயிரம் ஆலத்தையும் சுற்றிவிடுவது போல் இதுவும் ஆகுமெனக் கொள்க.

நான்காம் பகல்

ثم خلقن النطفة علقة

என்கிற சூரத்தின் ஆயத்தில் அல்லாஹுத் தஆலா பின்பு நாம் வெண்மையான நுத்துபாவை சிவந்த இரத்தக் கட்டியாய்ச் செய்து விட்டோம். அவ்விரத்தக் கட்டியைத் தசைக் கட்டியாக்கினோம். அத்தசைக் கட்டியை எலும்பைக் கொண்டு திட்டப் படுத்தினோம். அவ்வெலும்புக்கு அத்தசையைப் போர்வையாக்கினோம். பின்பு நாம் உண்டுபண்ணின அதிலே நின்றும் றூஹை ஊதிவிட்டோமென்று திருவுளமான அந்த நுத்பாவான விந்தை நுக்தாவென்றும் அவ்விரத்தக் கட்டியை நூறு என்றும் அத்தசைக் கட்டியானதை ஆமை ஜமாதாத்தென்னுமல்லை இவைகளுடைய சூரத்தென்றும் சொல்லப் படும்.

அவயவங்களுண்டாகின்றதை முளை மரம் நபாத்தென்னும் புற்பூண்டுகளுடைய சூரத்தென்றுஞ் சொல்லப் படும். இதில் றூஹென்றும் றூஹானியென்றும் இருவித சத்துக்களுண்டு. அவைகளில் றூஹுக்கு அசைவில்லை. றூஹானிக்கு அசைவுண்டு. அதுபோல் மனதுக்கு அசைவில்லை. புத்திக்கு அசைவுண்டு. ஆண்களுக்கும் பெண்களுக்கும் மனமும் புத்தியும் இருப்பதால் சூரியனுடைய கிரணங்களாவது மழைத் துளி விழும்போது சிவப்பும்

பசுமையும் ஊதாவும் நீலமும் போல் பல நிறங்களுடன் வானத்தின் கண் விழும். வில்லைப் போலே மனதை மனமும் புத்தியை புத்தியுங் கூடி சேர்ந்தபோது தகப்பனிடத்திருந்த நுத்பாவானது தாயின் கருப்பையில் விழுந்தவுடன் ஆணிமுத்தைப் போல் உருண்டையா யிருப்பதை அப்பையின் சூடானது அதைப் பருக்கச் செய்கின்றது. அப்படிப் பருக்கும் போது அதில் நின்றும் மிருதுவான சவ்வு வெளியாகி அதை மூடிக் கொள்கிறது. அதனுட் சில புறைகளுண்டாகின்றன. அத்துடன் நரம்புகள் பிரிவாகிறதோடு காற்றும் அப்புறைகளில் நுழைகின்றது. அக்காற்றானது எந்தப் புறையில் நுழைகின்றதோ அந்தப் புறை வழியாய் உணவும் செல்கின்றது. அல்லாஹ்வின் உத்திரவுப்படியே சூரத்தெனும் உருவமெடுக்கின்ற குவ்வத்துண்டாகின்றது அப்படி உண்டுபண்ணப் பட்ட குவ்வத்தானது அதனைச் சில பங்குகளிட்டு அவைகளில் ஒருபங்கை நடுவாகக் கல்புக்கும் மறு பாகத்தை வலப்புறமாக ஈரலுக்கும் இன்னுமொரு பாகத்தை மேலாலே மூளைக்கும், மற்றொரு பாகத்தைக் கீழாலே ஆண் குறி பெண் குறிகளுக்கும் செலுத்தி விடுகின்றது. பின்னர் நாபீஊ ரிதாவென்னும் புளை நரம்பு இர்பான் என்கிற துடி குணத்தையுடைய சிறிய இரத்த நரம்புகளுடைய உணவும் நாபி வழியாய்ச் சென்று வரும். இவைகளெல்லாம் ஆறு நாளிலுண்டாகின்றது. ஏது போலென்றால், அல்லாஹு தஆலா ஏழு வானங்களையும் பூமிகளையும் ஆறு நாட்களிலுண்டாக்கினே மென்று திருவுளமானது போலே. அந்த யவ்மென்னும் நாளினை கவ்னுஹாதிதாவென்னும் புதிதான ஆலமென்றும் லுகத்தில் அதாவது இலக்கியத்தில் ஆறு மர்த்தபாவுக்குச் சொல்கிறதென்றும்

வருகின்றது. இவ்வாருல் ஆறு நாள் வரையில் அசைவற் றிருந்த நாட்டமானதுக்கு அவயவங்கள் முளைத்ததே அதனை றாஹூ வெளியாகிறதென்று சொல்லப்படும்.

மாதாவின் புசிப்புகளின் சத்துக்கள் நாடோறும் அத் தசைக் கட்டியின் நாபி வழியாய்ச் செல்வதால் தென்னை மரத்தின் குரும்பையானது பெருக்கப் பெருக்க அதனுள் ளில் நீரும் உற்பத்தியாகிப் பெருகுவது போல அத்தசைக் கட்டியினுள்ளில் குடல்களும் அஞ்சிருக்கு மூல நப்சு களுமுண்டாகின்றது. அதாவது சரீரமுண்டாகின்றது. தாயினுடைய உணவுகள் நாளுக்கு நாள் பேதகப்படுவ தாலும் அத்துடன் தொங்கித்திருக்கும் சூடு குளிர்ச்சி சீத ளம் வரட்சி இவைகளின் பேதகமுங் கலந்து அவ்வுண வுடன் செல்வதாலும் குண பேதகங்களாலும் பற்பல வியாதிகளும் தத்துக்களும் கலந்து கொண்ட தென்று சொல்லப்படும். அதன் பின் பதினைந்து நாளில் இரத்தக் கட்டியாகு தென்று இருபத்தேழு நாட்களுக்குள் தசை யாகி மலையினுடைய உருவத்தைப் போல் பெருத்து நீளு கிறதென்றும் முப்பத்தேழு நாளில் தோளின் பக்கமாகத் தலையும் வயிற்றின் பக்கமாகக் கையுங் காலும் வெளியா கும்போதே எலும்பும் கூடி உண்டாகி நீளுகிறதென்றும் பின்னர் அவ்வெலும்பு கண் மீது இரத்தம் சூதகம் இவை களுடைய உறவைக் காட்ட குணத்தால் தசை அதிலுண் டாகிற தென்றும் அதன் பின் திரியும் நெய்யுஞ் சேர்ந்து எரியும் விளக்குக்கு சூடுண்டாகுவதுபோல் அதற்கும் ஆத்ம சக்தியுண்டாகின்றது. இங்ஙனம் மேற்கூறிய வக் கணைகளெல்லாம் அதற்காக சாட்டியிருக்கின்றது. ஸூஹ லென்னும் சனி நட்சத்திரத்தினுடைய நடைமுறை என்று வான சாஸ்திரிகளால் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதனை வதஇயுனுத்தானி இரண்டாங்குறிப்பென்றும் ஹகீக்கத்து மாலக்கு மென்றும், ஆலம் அருசிரென்றும் ஆலம் அஜல்லென்றும், ஆலம் அவ்சாப் பென்றும், ஆலம் அர்வாஹ் என்றும், கூரத்து இல்மிய்யாவென்றும், ஆலம் துபூத்து யென்றும், ஆலம் அஜ்சாத் தென்றும், ஆலம் கூலாத் தென்றும், தஜல்லத்தாரவிது என்றும் இன் னும் அநேகமாக எல்லாம் சொல்லப் பட்டிருக்கின்றது.

இவைகளுக்குங் கலிமாவில் பத்து தரஜா உண்டு. அவைகளில் முதலாவது தரஜா. தரஜாவென்பதுபடி. அதி லிருப்பது முஹம்மது. அதன் கருத்து சிபாத்து சல்பிய் யத்து அஃது தாத்துக்குத் தகுமல்லாதை நீக்குகிறது. அதில் முகாலபத்துன் லில்ஹவாதிதி நூதனமான படைப்புகளுக் கெல்லாம் ஒவ்வாத்தது என்று சொல்லப்படும்.

இரண்டாவது மர்த்தபா. மர்த்தபா வென்பது உயர்வு அதிலிருப்பவை அர்வாஹ். அதன் கருத்து ஆலம் அருசிர் அஃதாவது மறைவாகிய உறுப்புகள் அதனதன் இருப்பி டங்களுக்கு வருவதென்று சொல்லப்படும்.

நான்காவது மன்ஸில். மன்ஸிலென்பது தானம். அதன் கருத்து ஆலம் அஜல். அதென்னவானுல் றூஹு இருக்கு மிடங்களில் அமைந்ததென்று சொல்லப்படும்.

ஐந்தாவது வுஜூது. வுஜூதென்பது தோற்றம். அதிலிருப்பவை மும்தனிவுல் வுஜூது. அதன் கருத்து ஆலம் அவ்சாபு. அஃதாவது றூஹுடைய தோற்றம் வெளியாயிற்றென்று கூறப்படும்.

ஆறுவது ஆலம். ஆலமென்பவை தேசம். அதி லிருப்பவை ஆலம் மலக்கு. அதன் கருத்து ஆலம் அர்

வாஹ். அஃது றூஹானுடைய ஆலம் வெளியாயிற்றென்று கூறப்படும்.

ஏழாவது சூரத்து. சூரத்தென்பது உருவம். அதி லிருப்பவை லியாலுக்கே சூரத்து. அதன் கருத்து சூரத்து இல்மிய்யத்து இஃதென்னவென்றால் தான் நாடிய உருவ மாயிற் றென்று கூறப்படுகின்றது.

எட்டாவது சமஜு. சமஜென்பது அறிவு. அதி லிருப்பது தசவ்வுர். அதன் கருத்து ஆலம் துபூத்து. அஃ தாவது ஆண் அல்லது பெண் என்கிற உருவமெடுக்க அறிவு துலங்கிற்றென்று சொல்லப்படும்.

ஒன்பதாவது தர்ஷுன். தர்ஷன் என்பது பார்வை. அதிலிருப்பவை றூஹு. அதன் கருத்து ஆலம் அஜ்சாது அஃதாவது தாய் தந்தை அல்லது தந்தை இவ்விருவரைப் போல் உருவமெடுக்கும் பார்வை உண்டாயிற்றென்றும் இவ்விருவரைப் போலிருக்கு மென்பதில் வேறு விதங் காண்கினும் அச்சிசுவின் மேலுதட்டின் கீழுள்ள அவய வங்களைநோக்கில் அவ்விருவரில் ஒருவரின் வடிவமல்லாமல் வேறொரு வடிவத்தைக் காட்டாததாலும் அத்தானமே மனிதர்களுக்குக் குறிப்புள்ளவையான தானமெனக் கூற லாயிற்றென்று காண்க.

பத்தாவது நப்சு. நப்செசன்பது எண்ணம். அதிலி ருப்பது நப்சு முத்மஇன்னு. அதன் கருத்து ஆலம் மகூ லாத்து. அஃதாவது ஆண் அல்லது பெண் என்று பிரிவா கின்ற எண்ணத்தை இபாதத்து என்றும் றூஹுடைய ஆலமென்றுஞ் சொல்லப்படும்.

ஐந்தாவது பசுல்

يلقى الروح من امره على من يشاء من عباده

அல்லாஹு தஆலா திருவுளமா யிருக்கின்றான். என்னுடைய அடிமைகளில் நின்றும் சிலர் நாடுவார்களே அவர்களின் பேரில் என் அம்ரென்னும் ஏவலில் நின்றும் றாஹு சந்திக்கு மென்று வந்திருக்கிற படியால் அவயவங்கள் விளங்கிய சிசுவிற்கு ஆகாரம் செய்வதால் மயக்கங் கொண்டு தன்னை மறந்து தூக்கத்திலாகியபோது கண்ட கனவை الست بربكم உன்னைப் படைத்த நாயன் நானல்லவா என்று உண்டாகிய சப்தத்திற்கு قالوا بلى என்னைப் படைத்த நாயன் நீதானென்று மறுமொழி கொடுத்த வாக்கியத்தைக் கலாமென்று சொல்லப்படும். இதில் தன்பீஹு அஃதென்ன வென்றால் அல்லாஹு வதஆலா அந்த பிண்டத்தின் மீது முஷ்தரி என்னும் குரு நட்சத்திரத்தைக் கொண்டு சூட்டை அதிகரிக்கச் செய்ததால் அப்பிண்டத்துக்கு யாதொரு குறைவும் சேதமுமில்லாது இரண்டு மாதம் வரை யிருக்கின்றது. பிறகு அல்லாஹு தஆலா மிர்றீஹ் என்னும் செவ்வாய் நட்சத்திரத்தைக் கொண்டு மிண்டம் சூட்டை உண்டாக்குகின்றான். அதனால் அப் பிண்டம் சூட்டை உண்டாக்குகின்றான். அதனால் அப் பிண்டம் மூன்று மாதம் வரை இளகி இருக்கின்றது. இவ்வாறாய்

நான்கு மாதம் முடிவானதும் அல்லாஹு தஆலா ஷம்ஸென்னும் சூரியனைக் கொண்டு அப் பிண்டத்திற்குச் சேர வேண்டியவை எவை எவையோ? அவைகளுடன் உருப்புகளுடைய சூரத்துகளும் வெவ்வேறாக உண்டாகின்றதும் அல்லாமல் சரீரமெல்லாம் சிற்சில புள்ளிகளுமுண்டாகின்றன. அத்துடன் மரங்களுக்கு வேரோடுவதுபோல நரம்புகளும் வளர்ந்தோடி அவைகளுடைய இரேகைகளும் வெளியாகின்றன. அப்போது ஆத்ம சக்தியானது அந்நரம்புத் தாரை வழியாய்ச் சென்று எங்கும் நிறைந்து சமமாகி விடுவதால் அதற்கு அசையுதலுண்டாகின்றது. அதன் பின் அல்லாஹ்ற உடைய உத்தாரங் கொண்டு ஸுஹறு என்னும் சுக்கிர நட்சத்திரத்தினால் உருவம் சரிவரச் சமைகின்றது. பின்னர் அல்லாஹ்றவின் உத்தாரங் கொண்டு அத்தாரி தென்னும் புதனைக்கொண்டு ஆறு மாதம் துவக்கமான போது கைகளுக்கும், கால்களுக்கும், உதடுகளுக்கும் மற்றுமுண்டான உருப்புகளுக்கும் அசையுதலுண்டாகின்றது மன்றி உறக்கம் விழிப்பு கனவு இவைகளெல்லாம் உண்டாகின்றன.

ஏழாம் மாதத்தில் தசை அதிகமாக வளர்ந்து சேர்ந்து கெட்டிப்படுகிற தென்றும் நுஜூமிகளால் சொல்லப் படுகின்றது. வல்லாஹு அஃலம்.

இவ்விடத்திலாக்கும் அடிமை யென்னும் பூநாரம் பூண்டா னென்றது. இதனை வதஐயுனூர் ராபிஉ நான் காம் குறிப்பென்னும் ஹகீகத்து ஜின்னு தென்றும், ஆலம் புறூ ஹென்றும், ஆலம் முக்பிஹு என்றும், ஆலம் அன்பஉ வென்றும், ஆலம் அஜூமு வென்றும் ஆலம் தஷ்பீரென்றும் ஆலம் நிவாசுவா வென்றும், அன்ளாரென்றும்,

ஆலம் அன்சனென்றும் தஜல்லா ருபித்தென்றும் இன்னு மனேக உவமைகளும் கூறப்படுகின்றன.

இவைகளுக்கும் கலிமாவில் பத்து தரஜாத்துண்டு. அவைகளில் முதலாவது தரஜத்து. தரஜாவென்பதுபடி. அதிலிருப்பது ரசூல். அதன் கருத்து சிபாத்து சல்பிய்யாத் இஃது தாத்துக்குத் தகுமல்லாததை நீக்குகிறது. அதிலே நான்காவது கியாமுஹு பிநப்ஸிஹி. இதற்குப் பொருள் என்றென்றும் தன் நப்சிலே தானே நிலைபாடானவன். அதாவது அடிமை என்கிற தூதை ஒப்புக் கொண்டதென்று சொல்லப்படும்.

இரண்டாவது மர்த்தபா. மர்த்தபாவென்றால் உயர்வு அதிலிருப்பது மிதால். அதன் கருத்து ஹக்கீகத்து ஜின்னத்து. அதாவது ஹைவான்களுக்கு ஒப்பாய் உரோமம் நகம் உற்பத்தியாயிற் றென்று கூறப்படுகின்றது.

மூன்றாவது மக்காம். மக்காமென்பது தாவளம். அதிலிருப்பது தரீக்கத்து. அதன் கருத்து ஆலமே புறாக் அதாவது வெளி நோக்கப் பார்வை யுண்டாகிற தென்று கூறப்படுகின்றது,

நான்காவது மன்ஸில், மன்ஸிலென்பது தானம். அதிலிருப்பது ஜபறூத்து. அதன் கருத்து ஆலம் முக்பிஹு அதாவது குடலில் மலமுண்டாகும் தானமாச்சு தென்று சொல்லப்படுகின்றது.

ஐந்தாவது உஜூது. வுஜூதென்பது தோற்றம். அதிலிருப்பது மும்கினுல் வுஜூது. அதன் கருத்து ஆலமே அன்பது அவையாவது சூட்சமத் தோற்றம். வெளியாயிற்றென்று கூறப் படுகின்றது.

ஆறாவது ஆலம். ஆலமென்பது தேசம். அதிலி ருப்பது ஆலம் ஜின்றுத்து. அதன் கருத்து ஆலம்அரும் அதாவது நித்திரை வந்து கலந்த தென்று கூறப்படுகிறது.

ஏழாவது சூரத்து. சூரத் தென்பது உருவம். அதி லிருப்பது காபுகே சூரத்து. அதன் கருத்து ஆலம்தஃபிறு அதாவது கனவுடைய உருவம் உண்டாயிற் றென்று கூறப்படுகின்றது.

எட்டாவது சமஜூ. சமஜென்பது அறிதல், அதி லிருப்பது நீந்து. அதன் கருத்து ஆலம் நிஸ்வான். அதா வது அசதியும், மறதியும் வந்ததென்று கூறப்படுகின்றது.

ஒன்பதாவது தர்ஷன். தர்ஷன் என்பது பார்வை. அதிலிருப்பது தில். அதன் கருத்து ஆலம் அன்வாறு. அஃதாவது இவைகளை கல்பு பார்க்கிறதென்று கூறப்படு கின்றது.

பத்தாவது நப்சு. நப்செசன்பது எண்ணம். அதிலி ருப்பது நப்சு குல். அதன் கருத்து ஆலம் அன்பாஸ் அதாவது பற்பல எண்ணங்களும் வந்து கலந்ததென்றுங் கூறப்படுகின்றது.

ஆறும் பகல்

அல்ஆரிபு பில்லாஹி முஹியித்தினுபுனு அரபி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவுளஞ் செய்திருக்கின்றார்கள்:- அல்லாஹு வதஆலா வலுப்பமென்கிற பூலோக மைதானில் தன் இருதத்துக் கொண்டு சமைந்த பந்தடிக்குங் கருவியை குத்ரத் தென்னும் வல்லமை கொண்டு பிடித்து லோகமென்கின்ற பந்தை ஒவ்வோரமைப்பில் ஆயிரமாயிரமாக அக் கருவிகொண்டு அடிப்பான். அது கொண்டு துவர்க்க மிருந்து முடிவு வரையிலும் முடிவிலிருந்து துவர்க்கம் வரையிலும் போக்கி வைப்பானென்று வந்திருக்கின்றபடியால் இதிலுண்டான சிபத்தேழிருக்கின்றது.

அவைகளில் ஜீவன், அறிவு, நாட்டம், தத்துவம், பார்வை, கேள்வி, பேச்சு இவ்வேழும் ஒட்டாப் பொருளாயிருந்து மூன்றும் மர்த்தபாவின் காரணத் திரேகத்தில் ஒட்டியும் சூட்சமத்தில் வெளியாகி ஸ்தூலத்தில் தொங்கித் திருப்பதால், ஜீவனுள்ளவன்—அறிவுள்ளவன், நாட்டமுள்ளவன்—குத்ரத்துள்ளவன், பார்வையுள்ளவன்—கேள்வியுள்ளவன், பேச்சுள்ளவன் என்கின்ற சிபத்துகளை பகிரங்கமாகத் தான் எடுத்துக்கொண்டு தனது தானத்தை விட்டுத் திரும்பி பூமியிற் பிறந்ததை சஜ்தாவென்றும் கூறப்படுகின்றது. இதைப் பற்றி ஆரிபு பில்லாஹ் முஹியித்தீனுப்னு அரபி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவுளமாகின்றார்கள்,

ஹிக்மத் தென்னும் தந்திரங் கொண்டு ஒன்பதுவான மும் நிரப்பமாகிவிட்டது. ஒன்பது மாதம் நிறைந்தவுடன் என்னுடைய நாயன் வெளியாகுமென்று திருவுளமாயிருக் கின்றார்கள்.

எட்டா மாதத்தில் அந்த கெர்ப்பத்திலிருக்கும் சிசு விற்குப் பலமுண்டாகி உடல் பருத்திருப்பதால் இடம் நெருக்கமாகி வெளியில் வர நாடுகின்றது. அத்துடன் அல்லாஹ் உடைய நாட்டமும் ஒத்திருந்தால், அசதியும் சனதியும். அச் சிசுவை மிகைத்து அசைதல் அதிகமாகி அவ் வருத்தத்தால் பிறக்கில் பிறந்த சிசு மரித்திருக்கும். அப்படி மரிக்காவிடினும் பிறந்து நீடித்திருந்து இவ்வாறுகு வதை ஸுஹலென்னும் நட்சத்திரத்தாலாகுமென்றும் ஒன் பதாமாதம் அசதி நீங்கி சரீரத்தின் குண குணங்கள் சரி யொத்துத் தன்னுடைய குவ்வத்து கொண்டு கர்ப்ப அறையை விட்டு வெளியில் வருவதை முஷ்தரி என்னுங் குரு நட்சத்திரத்தினல் ஆகின்றதென்று சொல்லப்படுகின் றது. இதனை வத்தஜயுன் காமிசெனும் ஐந்தாங் குறிப்பு என்று ஹகீக்கத்து ஹைவாநாத் தென்றும், ஆலம் அனு சிர் என்றும், ஆலம் மஹ்சூதாத் தென்றும், ஆலம் அஜ்சாமென்றும், ஆலம் அஸ்பலென்றும், ஆலம் ஷஹா தத் தென்றும், ஆலம் கல்க்கென்றும், ஆலஒளனு வென் றும், ஆலம் ஆபாக் கென்றும், வத்தஜல்லா காமிசென் றும் இன்னுமனேக விதமாக வெல்லாஞ் சொல்லப்படுகின் றது,

இவைகளுக்குங் கலிமாவில் பத்து தரஜாத். தரஜா வென்பது படி. அதிலிருப்பது அல்லாஹ். அதன் கருத்து சிபாத்து சல்பிய்யா. இஃது தாத்துக்குத் தகுமல்லாததை

நீக்குவது. அதில் ஐந்தாவதில் வஹ்ஹதானிய்யத்து இதன் பொருள் தனித்தவன். படிப்படியாய் ஏழாந்தரஜாவில் வந்து வெளியாகி அஸ்மாவுல்லாஹி யெனும் அல்லாஹ்வுடைய திருநாமங்களிலொன்றை எடுத்தானென்று கூறப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது மர்த்பா. மர்த்தபாவென்பது உயர்வு. அதிலிருப்பது ஷஹாதத்து. அதன் கருத்து ஆலம் அஜிஸிர். அஃதாவது தோற்றம் வெளியாகிக் காணப்பட்டதென்று கூறப்படும்.

மூன்றாவது மக்காம். மக்காமென்பது தாவளம், அதிலிருப்பது ஷரீஅத்து. அதன் கருத்து ஹகீக்கத்து ஹைவானுத்து. அஃது துன்யாவிலுள்ள நியமங்களை ஒப்புக் கொண்டதென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

நான்காவது மன்ஸில். மன்ஸிலென்பது தானம். அதிலிருப்பது நாசூத்து அதன் கருத்து ஆலம் மக்சூதாத்து அஃது இன்பதுன்பம் யாவைகளுக் கிடமாயிற்றென்று கூறப் பட்டிருக்கிறது.

ஐந்தாவது வுஜூது. வுஜூதென்பது தோற்றம். அதிலிருப்பது வாஜிபுல் வுஜூது. அதன் கருத்து ஆலம் அஜ்சாம். அதாவது கண்டிப்புள்ள தோற்ற முண்டாயிற்றென்று கூறப்படும்.

ஆறாவது ஆலம். ஆலமென்பது தேசம். அதிலிருப்பது ஆலம் ஹைவானுத்து. அதன் கருத்து ஆலம் அஸ்பல். அஃது உண்பதும், குடிப்பதும், உறங்குவதும், சேர்க்கையு முண்டாயிற்றென்று கூறப்படும்.

ஏழாவது சூரத்து. சூரத்தென்பது சொரூபம். அதிலிருப்பது லாஹிர்க்கே சூரத்து. அதன் கருத்து ஆலம் ஷஹாதத்து அஃது சொரூபம் வெளியாயிற்று எனக் கூறப்படும்.

எட்டாவது சமஜு. சமஜென்பது அறிவு. அதிலிருப்பது பதன். அதன் கருத்து ஆலம் கல்க்கு. அஃது மானிடனென்றறிய லாயிற்றென்று கூறப்படும்.

ஒன்பதாவது தர்ஷன். தர்ஷன் என்பது பார்வை. அதிலிருப்பது நப்சு. அதன் கருத்து ஆலம் கௌனு. அஃது தன்னைத்தான் காணலாயிற் றென்று கூறப்படும்.

பத்தாவது நப்சு. நப்செசன்பது எண்ணம். அதிலிருப்பது நப்சு அம்மாரு. அதன் கருத்து ஆலம் ஆபாக்கு. அஃது பற்பல ஆசைகளின் எண்ணங்கள் வந்து கலந்ததெனக் கூறப்படும்.

பாயிதா நுத்பாவானது தகப்பனிடத்திலிருந்து தாயினது கர்ப்ப அறையில் பாய்ந்து தங்கிய நாள் முதல் வெளிவரும் வரையில் ஒவ்வோர் மாதமும் அங்கு சமைந்திருக்கும் அக் கருவின் வடிவங்களை நுத்பா தரித்து ஒன்பது மாதம் பத்து நாளைக்குள் ஆறு மர்த்தபாக்களையுங் கடந்து பிறந்து ஏழாம் மர்த்தபாவைப் பெற்றுக் கொள்வதைத் தான் இன்சான் காமிலென்று சொல்லப்படும்.

அந்த மர்த்தபா தானுக்கும் மேற் கூறிய மர்த்தபாக்களில் அஹதிய்யத்தைத் தவிர மற்ற ஐந்து மர்த்தபாக்களுங் கூடியதா யிருக்கும். ஆதலால், உண்மையாக அவ்வேழு மர்த்தபாக்களில் முந்தின மூன்று மர்த்தபாக்களையும் மர்த்தபத்து இலாஹிய்யத் தென்னும் நாயகத்தன்மையுடையதாயும் வாஹிதென்னும் ஒன்றானதாயு மிருக்கும்.

ஆரிபீன்களிற் சிலர் சிபத்தும் சிபத்தையுடையானும் ஒன்றென்றும் பேரும் பேரையுடையானும் ஒன்றென்றும் கூறியிருக்கிறார்கள்,

ஆனதால் பிந்தின நான்கு மர்த்தபாக்களும் உபூதிய்யத் தென்னும் அடியார்களின் மர்த்தபாக்களென்றது. இந் நான்கும் முகத்திதா இருக்கும். அதாவது புதிதாக்கப்பட்டது. அப்படியே அடியாருடைய மர்த்தபாக்கள் புதிதாயிருக்கினும் முந்தின மூன்று மர்த்தபாக்களும் ஆரிபீன்களிடத்தில் நல்ல துலக்கம் போலென உவமையாகும். இனி அத் துலக்கமும் அதனையுடையானும் வெவ்வேறுமெனச் சொல்வாருமுளர். உண்மையாக இந்தப்படி இஃத்திக்கா தெனும் உறுதி கொள்வதை இல்முதசவ்வுபு அதாவது அறிவுடைய ஞானமென்றும் இதேபோல் நடப்பவர்களை சூபியெனும் குற்றமற்றவரென்றும் சொல்லப்படும். அப்படி அவர் சூபியா யிருப்பின் இல்முல் யெக்கீனை அறிந்து அதன் மர்த்தபா அளவில் சேர்ந்து அந்த ஆசையின் நெருப்பென்னும் நரகத்தைக் கண்டு பின்பு அந்த ஆசை கொண்டு ஐனுல் யெக்கீன் என்னுங் காட்சி அதாவது கண்டதை நிச்சயிப்பதும் ஹக்குல் எக்கீனளவில் அதாவது நிச்சயித்ததை அனுபவிப்பதும் அப்படியொருவன் அவ்விதமான இல்முல் எக்கீன் ஐனுல் எக்கீனை ஆசை வைப்பானுனல் அதில் சேர நாடுவானுகில், ஷரீஅத்து தரீக்கத்து ஹகீக்கத்து மஅரிபா வெனும் இந் நான்கின் விபரங்களிலும் அனுபவமுள்ள காமிலென்னும் காட்டித் தரும் ஒரெழுத்தைக் கனிமா நாலாறில் காமிலான பீரே என்னும் முஃமினை கண்டும், அவரில் தரிசனை என்னும்

அஞ்சனை என்னும் தரிசிப்பை தரிசித்துவிட்டதுதான் முருக கடா. தரிசிப்பது முஷாஹதாவாகும். இதைத்தான் அல்லாஹ் குர்ஆனில் உன்னில் உன்னை பார்க்க வேண்டாமாவென்று இன்னுமோரிடத்தில் இங்கே பாராதவன் கண்ணிருந்தும் குருடனும் ஆகிரத்திலும் அவன் குருடாகவே ஆவானென்றும் இன்னும் வழிகெட்டு தட்டழிவானென்றும் வந்திருக்கின்றது. அந்த உண்மையைத் தரிசிப்பதை மறந்து இராமல் கெட்டியான ராஜுனை அல்லாஹ்வின் சமூகம் முடுக உண்மை இருப்பிடத்தை தேடுவோம். அல்லாஹும்ம ஸல்லி அலா ஸெய்யிதினா முஹம்மதின் அஸிலயில் ஆலமீன்.

ஆலத்தார்களுக் கெல்லாம் முன்னானவர்களே
வ அஃரபில் முர்சலீன்

முர்சலீன்களுக் கெல்லாம் மேலாம்பரமானவர்களே
மகுஸனி கன்ஜில் உஜூது

உள்ளமைக்குள் பிரகாசமானவர்களே
வஹிட்காஹி கஜாயினில் ஜூத்

வுஜூதென்னும் கஜானைவுக்கு திறவு கோலானவர்களே
வஸிபுலத்தில் வாஜிதிவல் மவ்ஜூது

மவ்ஜூ தாத்தனைத்திற்கும் பிடுலாவானவர்களே
வசாஹிபிலிவாயில் ஹம்திவல் மக்காமில் மஹ்மூத்

ஆசை கொண்டு தங்களை நாடி வருபவர்களுக்கு மேலான
வீடாகிய பளிங்கு மாளிகையிலிருந்து லிவாவுல்
ஹம்தென்னும் கொடி மேல் இருப்பவர்களே
ஹமாமில் புருஜூல் மலக்கூத்

புருக்கள் கூட்டுக்குள்ளிருந்து பார்க்கு மாப்போல் மலக்
கூத்துடைய ஆலத்திருந்து பார்ப்பவர்களே

வத்தாஹூசி ஹலரத்தில் ஜபறூத்
மேலாம்பரமான ஜபறூத்தில் மயில் வண்ணமானவர்களே
வமுதர்றிசி மஸ்ஜிதில் லாஹூத்
பாடம் படிக்கிறவர்களுக்குப் பாடமானவர்களே.

பாட்டு

ஆசைக் கடல் பொங்கி விந்தாகி—அந்த
ஆஷிக்கு மஃஹூக்குந் தானுகி
லாஷக்கயுருவாகி வெளியாகி ஹூஹூ லாத்தன்சா
ஹூவை என் பிறவி!

முச்சுடரானது மச்சுடராம் வெள்ளை முத்தோடு
பச்சை பவளமுமாம்
மெய்ச்சுட ரானதைக் கண்டு தெளிந்து நீ
வேவிதி யானஞ் செய் என்பிறவி!

மூலமுக் கோணத்தின் வாயலிலே யொரு
முத்தி மனோன்மணி நித்திரையாம்
காலைப் பிடித்தவள் மெள்ளவிருத்தி நீ
கண்டு விளையாடு என்பிறவி!

அத்தினி சித்தினி பத்தினியாம்—நல்ல
ஆபரணமாலை யணிந்தவளாம்
முத்துச் சுழிமுனை மண்டபத்துளந்த
மூத்தா ளிருக்கிறு ளென்பிறவி!

நாசூத்தில் நின்று மலக்கூத்திற் பின்பு
நாடுஞ் ஜபறூத்து லாஹூத்து
ஹாஹூ பாஹூத்து ஜம்ஹூத்தில்—அவள்
ஹக்கை வணங்கிறு ளென்பிறவி!

பொங்கும் உறூஜி நுஸூலாளே—நல்ல
பூரண வட்ட முகத்தாளே
அங்கத்தி லானந்த மின்னுளே—அவள்
ஐம்பத்தோ ரச்சர மென்பிறவி!

கன்சுல் மகுபிலிருந்தவளா மென்று
காரணக் கண்மணி யானவளாம்
குன்னென்ற சொல்லிற் பிறந்தவளாம்
அவள் கூத்தாடிப் பார்த்தாடு தென்பிறவி!

கொஞ்சிக் குதிரைமே லேறிடுவாள்—அந்த
கோபுர வாசல் திறந்திடுவாள்
ஊஞ்சலிலாடி விளையாடி டுவாள்
உஜூது உள்ளமை யானவ ளாம்பிறவி!

உச்சியின் கீழந்த ஊசிமுனை தனி
லூமைய ளேறுற வாடிடுவாள்
மச்சுமேலேறி மறைந்திடு வாளந்த
மாமதியாமணி யாம்பிறவி

வெட்டுக்குங் கட்டுக் கடங்காதபரி வெட்டவெளியி
பாயாம லெட்டையும் நாலையும் கொண்டு [னிற்
கட்டுப்பரி எட்டிப் பிடித்துக்
கொள்ளென் பிறவி!

வீணாக மூச்சினைக் கட்டாதே—யந்த
வீணரில் நின்றுற வாடாதே
வீணாக வாணுளைப் போக்காதே—யந்த
வீணரைத் தள்ளுநீ யென்பிறவி!

வாசிக்குதிரை வசப்படுமோ மேலும்
வானத்தின் வாயல் திறந்திடுமோ
ஊசிமுனைக் கப்பால் ஊசாடுங் காரண
முள்ளமை யாகுமா மென்பிறவி!

எழுதாதலிபும் நுக்கத் தேதுகலி
மாவின் நிலையின் குருவேது
சுழியும் முனையும் வழியேது இதைச்
சொன்னவர் காமிலா மென்பிறவி!

மூலமுக்கோண மாமுச்சுட ராமதில்
முங்கிய தாத்ததுவோ ரலிபாம்
தூலத்திற் கண்டு அறிந்த பெரியாரைத்
தூக்கிச் சுமந்து கொள்ளென் பிறவி!

அஞ்சிலுதித்துப் பின் பிஞ்சாகியதில்
அஞ்சில்வளர் பிஞ்சு காயாகி
நெஞ்சதில் வாழுமஞ்சினி லொன்றதை
நேசித்து வாசஞ் செய்யென் பிறவி!

தாத்து சிபாத்தின் உவமையறி கடல்
தாத்துக் குமிழி சிபாத்தாகும்
காற்றிற் குமிழி கரைந்து விட்டால்
கடலல்லாது வேறுண்டோ என்பிறவி!

ஹக்குக்கும் கல்க்குக்கு முவமையறி
தண்ணீர் ஹக்கும் சிபாத்துச் சிறந்த பனி
கல்க்குப் பனிய தழிந்த தென்றால்
ஹக்கு வல்லாது வேறுண்டோ என் பிறவி!

தன்சீஹ் தஷ்பீஹ் அறிய வேண்டும்—பின்பு
தன்சீஹ் மஹ்றிஃபா விளங்க வேண்டும்
சொந்த மக்அது சந்திப்புத் தானத்தில்
சூழ்ச்ச மிருக்குது என்பிறவி!

தன்சீகில் லைசகமிதிலிஹி ஷய்யென்றும்
தஷ்பீகு வலகுல்மதல தென்றும்
சொந்த மஹறளில் மக்அது சிதுகு என்றும்
சொன்னான் குர்ஆனி லென்பிறவி!

கடலாமை முட்டை கரைதனிலிட்ட பின்
கடலிலிறங்கித் தியானஞ் செய்து
உடனே தன் முட்டை பொரிக்குமுவமை போ
லுள்ளில் தியானஞ் செய் என்பிறவி!

ஆதாரமாறையுந் தாண்டிநீ சென்ற பின்
ஆரு மறியாத தானத்திலே
பாதாரங் கண்டு பணிந்த பெரியோர்கள்
பாக்கியமுள் ளோராம் என்பிறவி!

எள்ளுக்குள்ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்தோனை
ஏகாந்தமாகிய நாயகனை
உள்ளுக்குள் காட்டித் தருகின்ற உஸ்தாதை
உள்ளமை யென்றறி என்பிறவி!

முத்துண்டும் முத்து சலாபக்கடலிலே
முங்கிக் குளிபாடும் பேர்களவர்
முத்தியாம் முச்சுழி முச்சுடர் மவ்னத்தில்
மோச்சமடை வோராம் என்பிறவி!

சீனென்னும் சிங்காரக் கண்ணுடிக் குள்ளொரு
சீனிலமைந் ததோர் ரகசியத்தைச்
சீனத்திலாகுதல் போயறி யென்றசொல்
செப்பினுர் நபிநாயக மென்பிறவி!

ஆலக் கருவானக் கோலக் குருவிது
யாரறிவா ரிந்தப்பா ருலகில்
பாலங் கடப்பவர் பாக்கியமுள்ளவர்
பாவிக்கு தவாது என்பிறவி!

சிங்காரக் கம்பத்துள் சிங்கியுஞ் சிங்கனுஞ்
சீராட்டும் நீராட்டும் பாராட்டும்
சிங்கியைக் காட்டும் முர்ஷிதவர்களைச்
சிந்தையி லெண்ணிக் கொள் ளென்பிறவி!

முத்து முகப்பினில் முச்சந்தி வீதியில்
முச்சுடர் வட்டக் கண்ணுடி யதுள்
குத்து விளக்குண்டு கூத்தனும் சித்தனும்
கூத்தாடு வாரங்கே என்பிறவி!

தோல் கூட்டுக்குள்ளே யிருக்கின்ற சூட்சத்தை
தோசிய றிவாரோ இவ்வுடலில்
மேல்வீட்டைத் தாண்டிய மெஞ்ஞானி யானோர்க்கு
மேலோன் பதியாம் என்பிறவி!

மவ்த்து வரும்போது மற்ருென்று தவாது
மன்னுேன் லிக்காவது மத்தியிலே
மவ்த்தாகிப் போகுமுன் தவ்பாவின் பத்தியம்
பத்திரமாயிரு என்பிறவி!

காசுகாசென்று கடைசியிற் சாகின்ற
கழுதைகட் குயானென்ன சொல்வேன்
நாசிநுனியிட்டு நாசமாப் போகுமுன்
நானியற் சார்ந்துகொள் ளென்பிறவி!

வேட்டை யிபுலீஸ் வெறிநாயாம் அம்மாரு
வெட்டவெளி துன்யாவிற் சிக்கி
கோட்டைப் பிடித்துக் கொடியை இழுத்துக்
கெடுதி யிலாக்கு வானென்பிறவி!

சதியனி புலீசின் சதியிலகப்பட்டுச்
சதிமோசம் போகாமற் சடுதியிலே
மதுரம துபோல் மதிக் கலிமாவை
மனதிற்றி யானஞ் செய் யென்பிறவி!

முற்றியது கும்மி முத்து வைரம்போல்
முற்றுக முன்னூலின் சொற்படியே
உற்றவன் சய்யிது முஹம்மது
ரைத்தசொல் உள்ளமையென் றறிவாய் பிறவி

[ஞானகும்மி முற்றிற்று]

மத்துஷத்து, ஹம்ஸா, நுக்கத்து, சுக்கூன், ஸபர், ஸேர், பேஷ், தோஸபர், தோஸேர், தோபேஷ், ஆயத்து முத்தலக்கு, ஜாயிஸா இந்த பதினொலும் நமது உறுப்புக்களி லுள்ளவைகள். இதை பதினொன்கு இல்மு என்பார்கள்.

இன்னும் நமது உறுப்புகளில் இருபத்தெட்டு எழுத்துகளும் ஹம்ஸா ஒன்றும் இருபத்திரண்டு நுக்கத்துகளும் ஆக ஐம்பத்தோரட்சரங்கள் அமைந்திருக்கின்றன. இந்த உருவத்துக்கு ஆதமி என்று பெயர். இதன் கோலம் முஹம்மதும் இதை நடப்பிப்பது அல்லாஹ்வுமாம்.

இதை எதைக் கொண்டு இந்தக் கோலமாக்கப்பட்டதெனில் மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐந்து பஞ்ச பூதங்களினுலாம். அதாவது அஹது என்னும் தாத்திலிருந்து உஹதென்னும் சிபாத்து வெளியாகி, இவ்விரண்டும் ஒன்ருகி அதாவது வாஹிதாகி அர்வாஹ என்ற ஆலத்தை வெளியாக்கியது. அதை என்ன விதம் செய்வதென்று ஆலோசித்ததே ஆலமிதாலென்பது.

அர்ஷு முதல் சகலத்தையும் இன்னின்ன விதம் அமைக்க வேண்டுமென்று திட்டப்படுத்தியதுதான் ஆலம் அஜ்சாம். திட்டப்படுத்தியது போல் ஆகுக! எனவே, சகலமும் உருவெடுத்து அவையவைக்குரிய நாமங்களும் அவையவை செய்ய வேண்டிய கிரியைகளும் நியமிக்கப்பட்டுவிட்டது.

அவை அனைத்தும் ஒன்றிலொன்று மோதிக்கொள்ளாமல் நடனமாடிக் கொண்டே - ஹக்கை வணங்கிக் கொண்டே இருக்கின்றன. நாமும் அதுபோல் தவத்தில் ஆவோமாக!

ஆதி பெரியோனே, தவப் பொருளே, ஆலம் அடங்கலும் நிறைந்த ஹுவானவனே! சோதியொளிவான கல்புல்லாவே, சொல்லும்போது நீ எழுந்தருள்வாய்! ஓதிப்

புகழ்ந்து கவிகள் பாட ஓர்மை தவ்ஹீது நிலைபடவும், நீதி பெருகவே ஞான வாசல் நினைவில் வெளியாகவுமிந்த நேரந்தனில், விளங்கி யாவையும் தெரிந்து சொல்ல ஒளிவாய் நின்று இலங்கு மிந்த உண்மை வுஜூதை என் கல்பில் வைத்து அழியாதிருந்து வாழ்வதற்கு, ஆசை பூண்டு இதை மொழியும் போது, சரிகிடாது முஹியித்தீன் ஆண்டகை அருளாலும் ஷாஹு மீருன் சாஹி பொலியே பாவம் பழிவந்து அணுகிடாமல் காத்தருள்க!

இலங்கும் கிலுறு நன் நாயகமே மருளை அகற்றியே பொருளைக் காண, மார்க்க ஒலிமார்கள் காத்தருள, பொரு ளான கலிமாவின் முடிவு காணச் செய்யும் ஹிஜ்ரீ ஆயி ரத்து முன்றூற்று எண்பத்து நான்கு, மாதம் துல் ஹஜ்ஜு இருபத்திரண்டு சனிக்கிழமை அல்லாஹ்வின் உதவி கொண்டு மனந் திறந்து எழுத ஆரம்பிக்கிறேன். வாருங் கள் எனக்கு ஆசை பொங்கி வையகத்தாரின் கல்பிலங்கி யாரும் புகழ்ந்து பார்த்து புகழ்வார்களாக! ஆமீன்!

துய்யோன் கிருபையால் மனந் திறந்து துடர்ந்து உரைக்கவே கருத்துண்டாகி, செய்யுளாயிதை துவக்கஞ் செய்தேன் ஜல்ல ஜலாலுஹு முன் வருவாய்! வாரும் எனக்கு ஆசை பொங்க வையகமனுவோரின் கல்பிலங்கி யாரும் புகழ்வார்கள். அல்லாஹு வென்று ஓதி சேருங் கூட்டங்கள் பெருக்கமாக செய்யும் அமல்களில் தரித்தி ருந்து நேரந் தவறுமல் உனையறிந்து நின்று விளையாட விபரஞ் சொல்வேன்.

விபரஞ் சொல்கிறதாகிறது மனதில் நாடிப் படைத்த பெரியவா உன்னைத் தேடி வாடி வதங்காமல் மலர்ந்திருந்து வாசம் உலகமெங்கும் பரந்து வீசி தேடி மகிழ்ந்தெல்லோ

ரும் ஆசை பொங்கித் தெளிந்த மனதோடு வாங்கியிதைக் கூடி எல்லோரும் புகழ்ந்திடவும் கோமானே என்னிலுன் னருளானதை ஆன புகழிறை உதிப்பினோடு அணைந்து வெளிவந்த ஆசையானதைத் தானே அழைத்து முன்னி ருத்தி ஆஷிக்கு மஃஷூக்காகி போனவிடங்களில் இரண் டுங் கூடி புணர்ந்து விளைந் தொளி அர்வாஹாகி, வானம் புகழ்ந்தோங்க நின்றிலங்கி வந்தது. முஹம்மதின் கோலந் தனில், கோலமதில் விளைந்த பொருளைத் தேடி, குறித்த முஷாஹதா செய்யும்போது, ஆலம் பலவுமே ஒன்றுகூடி அண்ணல் முஹம்மதின் கோலம் பூண்டு வாலவயதில்லா மதலையாக வந்தென் மடி மீதில் விழுந்துகொண்டு மேலே நிமிர்ந்தென் முகத்தைப் பார்த்து மார்க்க மதிலுபதேசஞ் செய்தார்.

செய்த உபதேசத்தை கல்பில் வைத்து செந்தமிழில் எழுதச் சொல்லி மெய்யாய் உரை செய்து நபியுல்லாவும் மேன்மையுள்ள என் உம்மத்தோர்க்கு அச்சமில்லாமல் உலகமீது ஹக்கான மார்க்கத்தைச் சொல்லிக் காட்டும். பொய்யும், பொறாமையும், சூதுவாதும் பொறுக்காதிவ் வழி. திறக்கக் கண்பாரு திறந்தவுடன் அதில் நின்றிலங் கும் திருக் கலிமாவைத் தரிபாடாக்க மறந்து மார்க்கத்தை விட்டிழுந்து, மஸ்திலிறங்கி நீ நடந்திடாமல், கறந்த பாலது போலுன் கல்பிருந்தால் கண்ணின் முன்னிலே நானி ருப்பேன். சிறந்த ஆரிபா உலகத்தோர்க்கு ஷய்காயிருந்தி யானால் என்னைக் காண்பாய்.

என்னைக் காண்பது உண்மையாகும் ஏதுமுனக்கொரு குறைவுமில்லை. இன்றிருந்துன் கல்பின்மீது இல்ஹாம் வெளியாகித் துலக்கமாகும். தன்னையறிந்த பின் கல்வி

யாவும் தானே வெளியாகும். உந்தனுக்கு பின்னே மனு வோர்க்கு மார்க்கமதைப் பிரியமாய் உண்மை சொல்லு மென்றும், இந்த விதமான உபதேசங்கள், எங்கள் முஹம்மது நபியுல்லாவும், சிந்தை மகிழ்வுடன் சொல்லி விட்டு, செல்வமதுவாகத் திரும்பும் போது, என்தன் கல்பது மகிழ்ந்து பொங்கி, ஏகமும் ஒன்ருகக் கண்ட பின்னர், வந்த வழிகளைத் திரும்பிப் பார்த்து வாகாய் உரைக்கின்றேன் அறிந்து கொள்வீர்.

உரைக்கும் வகையைத் தான் கையில் வாங்கிப் படிக்கும் போதினில் உண்மைதனைத் தெரிந்து உறுதி பூண்டு கரைத்துப் பாவத்தைத் தீர்க்குமென்று. காதல் மிகக் கொண்டு நபியின் மீது திரைக்குமறைவாக நின்றிடாமல், திருக் கலிமாவை உற்றுப் பார்த்து. மறைக்கு மாருக நடந்திடாமல் மார்க்கப்படி கொள். ஈமான்தனை ஈமானென்பது ஐங்தெழுத்து. இரண்டு அலிபும், யேயும், மீமும் நூனும் ஒன்று கோமான் அலிபென்றும் அறிவதற்கும் கொள்ளும் யே இன்சான் வெளியாகியே பூமான் முஹம்மது மீமுமாகி புகழ்ந்து அல்லாஹ்வைக் கண்டதாலே சீமான் ஒளியது பரந்து வீசி ஜகத்தில் நூன் நூறென்றறியலாமேனும். அறிந்த நூறதை முன்னிலாக்கி ஆமன்து பில்லாஹி என்று ஓதி பிரிந்து போகாமல் மலக்கு அங்கு பேசியது வேதம். நபிகளுக்காம் இறந்த பின்பு கியாம நாளில் எழுப்பி நன்மை தீமை கேட்டு திறந்த சுவர்க்கம் நரகமென்று அறிந்திடுவீர்,

அறிந்தவுடனே தான் இசுலாமாவாய் இதிலும் ஐந்தெழுத்து களுண்டுபாரு. முறிந்துபோகாது கலிமாவென்ருல் முழுதும் அலிபதி லெடுத்துக் காட்டும். பிரிந்து

போகாமல் அலிபில் சேர்க்க பேரின்ப நல்லருள் முன்னில் வரும். சிறந்த முறையதை அறிந்துணர்ந்து சிந்தையில் கலிமாவை யுகந்து கொள்வீர். கொள்ளுங் கலிமாவில் நான்கெழுத்தும் காபும் லாம் மீமும் தேயிமாகும். விள்ளும் நான்கெழுத்தின் பொருளாவது விளங்கியறிந்து கொள். மறக்காமலே உள்ளும் வெளியிலும் கலிமாவை உவந்து மனதினில் உறுதி பூண்டுகொள்ளும் முதல் எழுத்து காபுமாகும் அப்ஜதில் இருப்பது சிபத்தாகும்.

அடுத்த லாமது ஜிபுரீலாகி ஏகுந் தூதராய் மீம் முஹம்மதுக்கு எடுத்து உரைத்தரகசியமாம். வாகுபொருந்தும் தேயானது வளரும் துருபென்ற பண்ணின் சாகு முதலந்த வுஜூதானதை சார்ந்து அறிந்தோர் மூமினுவார்.

மூமீனோர்க்காக வுஜூதானதை முழுதும் உரைக்கிறேன் அறிந்து கொள்வீர். ஆமினு அம்மாமகனார் ஆல நபி அருளினர் இதை உம்மத்தோர்க்கு புவியில் வுஜூது என்ற உள்ளமையை பூர்விகமதுவாக தரிபாடாக்கி, நாமுமதற்கு ஒவ்வாமலும் நாடித் தனித்தது தன்னில் தானே தன்னில் தானுக தரித்திருந்து தங்கும் ஜீவன் அறிவுமாகி முன்னில் நாட்டம் குத்ரத்தாகி, முழுதுங் கேள்வியும் பார்வையாகி, உன்னி வெளியாகிப் பேச்சானது, உயிரில் கலந்துமே நின்று கொண்டு, பின்னே ஏறிட ஜடமில்லாமல் பிரிந்து வுஜூது திரிந்ததுவே. திரிந்து வருமந்த நாள் தனிலே தீன் நபியுல்லா கோலம் போலும், தெரிந்து செய்திட வேண்டுமென்று தீர்ப்பு இறைவனும் செய்துகொண்டு பிரிந்து போகாமல் வுஜூதானது பெரிய தலத்தினில் அடக்கம் செய்து, விரிந்து மலர்ந் திவ்வுலகையாள பாவ... ஆதமை தெரிந்தெடுத்தான். எடுத்த ஆதத்தின் ஜட...

மறை துலங்கும் படி பாகத் தானமைத்து, விரிந்து இலங்கிய உறுப்பு பாவும், விளக்கமுமாக மலக்கமைத்து, திறந்த சஷ்டாத்தின் கையைக் கொண்டு, பிரசை அமைத்துமே ஆதி நாயன், விரிந்த ஜடலத்தின் றூஹானதை வேத விதி போலே என்றான்.

என்றவுடன் அந்த றூஹானது, ஏக பெரியவன் தன்னை பார்த்து, இந்த ஜடலத்திலுள் செல்லமாட்டேன், செய்திகளெல்லாம் தெரிந்து கொண்டேன், என்றவுடனந்த றூஹைப் பார்த்து விரும்பிச் சென்றந்த கோட்டை தன்னை, ஒன்றும் குறையாமல் சுற்றிப் பார்த்து, ஓடி வெளியிலே பாயுமென்றான். பாயுமென்று உடலின் மீது படைத்த பெரியவன் சொல்லும்போது, சாய்ந்து கிடக்கின்ற உடலருகே சென்று றூஹானது உள் புகுந்து, சுற்றிப் பார்த்துப் பாய்ந்து மூளையில் ஏறும் போது, பகருந் தும்மல் வந்தல் ஹம்து லில்லா வென்றேத, ஆய்ந்தும் நமதிறைவன் இர ஹமக்கு முல்லாஹ் அப்போதுறைத்ததுமே புகழ்ந்து சொல்வான். சொல்லும் ஆதத்தின் ஜடலமீதில் சென்றதினுல் ரூஹு கூடுண்டாகி, வெல்லுமந்தச் சூட்டினுலே, வெயர்த்து நரம்பெங்கும் இரத்தமேறி அல்லும் பகலுமே வெது வெதென்று. அடர்ந்த சரீரம் இளக்கமாகி, எல்லாம் பொருந்தவே றூஹுடனே எழுந்திட ஆதம் நாடும்போது, குத்ரத்தாக நல்லகாதினில் கேள்வி வந்து தேடுந் தேட்டத்தில் பார்வை பொங்கி, தெரிந்த உலகெங்கும் பார்த்தறிந்து, கூடுந் தலங்களில் ஒன்று சேர்ந்து, குறித்தபடியே தான் இருக்கச் செய்து ஆடுந் தலம் விட்டுத் திரும்பிப் பார்த்து ஹக்கன் லாயிலாஹ இல்லல்லாஹு.

லாயிலாஹ இல்லல்லாஹு வென்றுரைத்தவர் ஆதம் பாவா, வாயிலிருந்து முதல் கலிமா தன்னை வருந்தி உரைத்தவர் ஆதம் பாவா, சாவில்லாமலிருக்கும் றூஹு ஜடலத்தில் புகுந்துமே கலிமாச் சொல்லி வெளிவந்த கலிமாதன்னை சோதி பெரியவன் நிறப்பமாக எல்லாம் ஆதம் நபி தமக்கு ஈந்து ஏக ரஹ்மத்தாய் உலகில் விட்டு பொல்லாக் குபிரறுத்து தீனை நாட்டும் புகழாங் கலிமாவை அறிய வேண்டி நல்லாவுரை செய்து நபியுல்லாவை நாடிக் கலிமாவைச் சொல்லுமென்ருன். சொல்லும் நமதிறசூல் உம்மத்தில் சொன்னுர்கள். அதில் சில சூபியாக்கள், மன்யகூலு லாயில்லாஹ இல்லல்லாஹு பிலாதஹ்கீக்கி அல்பமர்ரத்தின் பஹுவக்காபிர் என்றுமெங்கும் புகழும் ஹதீஸின் பொருளாவது; அல்லும் பகலுமாய்க் கலிமா தன்னை ஆயிரம் தரம் அவர்கள் ஓதினும் ஓதியதன் திட்டம் தனையறிந்து ஓர்மையுடனே தானோதாவிட்டால் ஜாதியவன் குலம் காபிரென்று ஜகத்தில் சூபியாக்கள் சொல்லி வைத்த செய்திகளை அறிந்து உங்களுக் கியம்புகின்றேன்,

நீதியாய்ச் சொல்வது கலிமா சிறை நினைவில் மறக்காமல் உண்மை கொள்வது லாயிலாஹ இல்லாஹு கூறும் பன்னிரண்டு எழுத்துமாகும். விள்ளும் பன்னிரண்டு எழுத்தின் இனம் விளங்கி அறிந்துகொள். மூன்ருவதாக அள்ளும் அலிபு ஐந்தும், லாமு ஐந்தும். அருளும் ஹே இரண்டும் சேர்ந்ததாலே தள்ளும் லாயிலாஹ இல்லல்லாஹு துலங்கி வெளிவந்திவ் வுலகமாச்சு. உலகில் அலிபது அல்லாஹ்வாகும். வுஜூதில் தரித்தலாம் ஆதமாகும். விலகி நின்றிடாமல் ஒன்று சேர்க்க விரிந்த ஹேயது றூஹுமாகி, நிலாக் கதிரொளி வீசியெங்கும் நிலைத்து அரசாண்டிருப்பதாலே, அலைகடல்சூழ் புவி வானம்

யாவும் ஆடி நின்றுலாவுவது கலிமாவாச்சு. ஆன கலி மாவை இரு பிரிவாய் அமைத்து லாயிலாஹ ஓர் பிரிவாய்த் தானே இல்லல்லாஹு ஓர் பிரிவாய்த் தரித்த இரண்டையும் பார்க்கும் போது. போன புகழ் கொண்ட முன் பிரிவில் போற்றும் விக்கிரஹ வணக்கம் வேண்டாம். மானே பின் பிரிவு இல்லல்லாஹுவை மனதில் உவைப்பது பர்லாகுலாமே.

ஆகும் கலிமாவை ஐந்து பங்காய் அமைத்துப் பிறந்திடும் வகையை கேளு. ஏகும் லா இலாஹ இல்லா. அல்லா என்று எழுத்தைப் பிரித்துக் கொள்ளே. ஹுவை தாக போகும் லா என்ற எழுத்திரண்டின் பொருளும் மண்ணும் பல வகையில், வாகுடன் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு வகையாய் பிரிந்துமே நின்று கொண்டு நின்ற வகைகளில் பேதலித்து நேர்மையுடனே தான் வெளியில் வந்து, சென்ற இடங்களில் விலையுயர்ந்து சேர்ந்து உலகெங்கும் பிரகாசமாய். அன்று புகழ்ந்திட உலகம் யாவும், அடர்ந்து படர்ந்துமே பூமியாகி, நின்று விளையாடும் கோலத்தாலே. நிலைத்த படைப்புக்கும் ஆதியாச்சே: ஆதியாய் நின்று நாசூத்திலே அறிவு மிகவுள்ள ஜிப்ரயீலே, நீதியாய் அழைத்து முன்னில் வைத்து. நினைவில் குர்ஆனை தரிபாடாக்கி, யாதும் பிசகாமல் திக்ர் செய்து. இலங்கும் லாயிலாஹ இல்லல்லாஹு, ஓதிப் புகழ்ந்துமே நிலையில் வந்து, ஒளிவாய்த் திரண்டதும் கலிமாத் தானே. தானே கலிமாவில் இலாஹ வென்று தரித்தது மூன்று எழுத்துமாகும். ஆன சிபத்தது தண்ணீரதாய் எழுந்து அதன் முன் சிபத்தான மண்ணைச் சூழ்ந்து போன வுடனது இலகி நின்று பொருந்தும் குணங்களும்

பேதலித்து, தானவுயிர்களை ஆக்க அறிக்க தத்துவம் பெற்றுமே முன்னில் நின்று, நல் நினைவை ஊட்டி, முதலோன் மீக்காயில் தனை அழைத்து பின்னர் தரீக்கத்தாய் செயலும் பூண்டு, பிரிந்த வகையெல்லாம் ஒன்றாய்க் கூட்டித் தன்னில் குர்ஆனை பயானும் செய்து, தரித்து இல்லல்லாஹு திக்ர் செய்து, எண்ணி முடியாத இனங்களெல்லாம் எழுந்து வந்திரண்டாம் ஆதியாச்சே.

ஆதியாம் இல்லா மூன்றெழுத்தும் அமைந்து வெளியான சிபத்தாவது, ஓதியதோர் காற்று தானுமாகி, ஓடியே பல திசையும் சென்று, நீதியாமதன் குணம் பேதலித்து, நேர்மையாம் ஹகீகத்தில் வந்து நின்று, செய்தி முழுவதும் ஒன்றாய்க் கூட்டிச் செல்லும் இஸ்றுபீல்தனை அழைத்து முன்னிலே தானும் வைத்து அருளுங் குர்ஆனை பயானுஞ் செய்து, மூளைத்து மூளையில் தரித்து நின்று, முந்தவே அல்லாஹூவென திக்ர் செய்து, நுழைத்து இருத்தியே வெளியில் வந்து, நுட்பமதுவான தலத்தில் சேர்த்து, வளைந்து கோட்டையில் தரித்திருக்க, வந்தது மூன்றும் ஆதியென்றே என்ற கலிமாவில் அல்லாஹ் தானுமெழுந்து மூன்று எழுத்துமாகும். ஈன்ற சிபத்தது நெருப்புமாகி, வெளியில் பறந்து அனலுண்டாகிச் சென்ற இடங்களில் பேதலித்து, சேர்ந்த படைப்பினுள் புகுந்து கொண்டு, அன்று எழுந்திடும் அனலானது, அக்கினி மயமாக வீசும் தானே. வீசும் இஸ்றயீல் தனை அழைத்து, விளங்கும் பேசும் குர்ஆனை நிலை நிறுத்தி மஃரிபாவில் தறிபாடாக்கி, ஹூ!ஹூ! வென திக்ர் செய்து, வாசம் மிகவுள்ள பின்பு கலிமாவிலே வந்த இந்நான்கு பிரிவினாலும், நேசமதுவாக வெளியில் வந்து, நிலைத்த பிரிவு நான்கும் ஆரிபாகும்.

பாரும் மண் தண்ணீர் காற்றுடனே, பகரும் நெருப்பு நான்குங் கூடி, சேரும் படைப்பாகச் செய்து கொள்ளும். சிறந்த வுயிர் கொடுக்க முடியாது. நேரந் தவறுமல் நடக்குங் கோலம். நினைவில் பதியவே வைத்துக் கொண்டு. பேரும் புகழான கலிமாவினில், பேரின்பமதைத் தேடிப் போவோம். போகும் கலிமாவில் ஹூ வென்றேத, பொருந்து மெழுத்து ஒன்றேயாகும். ஆகுமதன் சிபத்து என்னவென்ருல், ஆகாயமதுவாக உயர்ந்து நின்று, வாகு வளமான அருசிர் என்று வந்த வகைகளை ஒன்று கூட்டி. ஏகன் வுஜூதினில் துவைத்துக் கொண்டு. எழுந்திடும் கல்க்காக நிலைத்திடுமே. நிலைத்த படைப்பினில் முதலாவது. நீதி முஹம்மதுர் ரஸூலுல்லாஹி. பலத்த குலயான முஹம்மதுவைப் பிறித்து அதனுலே உலகம் யாவும், கலந்து பிரியாமல் ஒன்று கூட்டிக் காட்சியாய் வைத்துக் குறிப்பதான, தலத்தில் தரிபடுத்தி நிறப்பமாகத் தனது மஹ்பூபில் சேர்த்தமைத்த, அந்த முஹம்மதுர் ரஸூலுல்லாஹி, அணைந்து லாயிலாஹ இல்லல்லாஹூவைத் தந்த ஆஷிக்கு மஃஷூக்காகித் தரித்த உகப்பினில் கலந்ததாலே சொந்த லாயிலாஹ இல்லல்லாஹூ, இந்தக் கலிமாவில் கடையெழுத்தும், இலங்கும் முஹம்மதில் முதல் எழுத்தும், எழுத்து இரண்டையும் ஒன்று கூட்டி, எழுந்து இல்லென்று தம்மில் வந்து, அழுத்தமதுவான தம்மைக் கொண்டு அடக்கி யாலவையும் பார்க்கும் போது, இழுத்து வருமந்தக் கருவும் ஏறி ஒன்ருக நின்றிலங்கி, வழுத்த முடியாத பொருளாமென்று, வைத்து மனதினில் இருத்திப்பாரு. இருத்திப் பார்க்கவே உலகம் யாவும், இந்த இல்லதில் இருக்கக் காண்பாய். பொருத்திப் பார்க்கவே உயிரினங்கள் பொருந்தி யிருக்குமந்த இல்லினுலே, வருந்திப் பார்க்கவே அலிபும் லாமும், வணங்கு மிறையுமவன் நபியுமாகும்.

இருத்தி அழியாமல் ஞாபகத்தில் எடுத்து நன்றுக உற்றுப்பாரும். பாரு நம்மை தாய் வயிற்றில் பக்குவம் செய்தது ஹூம்மதாகும் சேரும் பக்குவம் முடிந்த பின்பு சிறப்பாய் நம்மை புகழ்ந்து கூறி, ஆறும் புகழுவே மதலை என்று, ஆதி முன்னிலையில் தான் நிறுத்தி, பேரும் புகழ்ந்தோங்க நமது மாதா பேரின்ப கடலிலே மூழ்கி நின்று, மனமது கவலை கொண்டு நினைவில் இறைவனைத் தரிபடுத்தி அன்று வயிறது வலிக்கும்போது, அடக்கி இல்லென்று இறுத்தி மெல்ல இந்தப்படியே தான் மூச்சடக்கி, விரும்பி இல்லென்று தம்மில் வந்து சென்ற பாதையால் திரும்பும் போது, ஜல்ல ஜலாலஹூ அருளுண்டாச்சே. அருளது வந்து நம்மை மூடி ஹூம் என்று பொதிந்து கொள்ள, இருளதை விட்டு வெளியிலாக்க, ஏக ரஹ்மானும் தீர்ப்புச் செய்து, பொருள்கள் யாவையும் வாங்கிக் கொண்டு, புவியில் முகம் குப்புற விழுகச் செய்து, திரண்ட உருச் செய்த இல்லானதை திரேகமதி லெங்கும் உற்றுப்பாரு, உற்றுப் பார்க்கவே உடல்கள் யாவும், உலாவி இல் இல்லென்று ஓடியாடி அற்றுப் போகாது மூச்சை விட்டும் அசைந்து வருவது நாடியாகி, முற்றும் தன் ஏவல் போலிலங்க, சற்றும் மறைக்காமல் சொல்லி வாறேன் சரியாய் அறிந்து கொள் மூஃமினுவாய்.

மூஃமீன் குலமான இக்வான்களே! மூடி இருந்தோர் இரகசியமதைப் புவி மீதினில் திறந்தேனின்று புகழாய் அவைகளை உற்றுப் பார்க்கவே ஆமீனம்மா மகனுர், ஆல நபி அலியார் தமக்கு அருளிச் செய்த, நாமமிதுவாகும். நபியும் மத்தே நாடி மனதினில் அறிந்து கொள்வீர்! கொள்ளும்படியாக நம்மைத் தானும் கோமானருள் கொண்ட மனைவியோடு, உள்ளம் மகிழ்ந்துமே கூடும் போது, ஓடி

வருமந்த நுத்துபாவும், விள்ள முடியாத இல்லென்று வெளியில் பாய்வதும் கண்ணில் காண்பாய்! துள்ளி வருமந்த மலஜலத்தைத் தொடரும் படியாக கழிக்கும்போது, கழிக்கும் போதினில் இல்லென்று கருத்தில் அடக்கினல் வெளியிலாகும். அழிக்க முடியாத இல்லானதை அடக்கினல் எந்த வேலைகளும், விள்ளும்படி செய்து முடித்து வாருேம். வேறு உனக்கெந்த உவமை வேண்டும். செழிக்கும் வழியான இல்லானதை சேர்த்து திக்ராகச் செய்து கொள்வாய்.

கொள்ள மனதில் நாட்டம் வந்தால், கோமானருளினல் சொல்லக் கேளும். உள்ள துன்யாவின் தேட்டம் யாவும் உன்னை விட்டுமே அகன்ற பின்பு, எள்ளும் பிசகாமல் உன் மனதில், யேகன் ரஹமத்தை உகந்து கொண்டு அள்ளும் ஆசைகள் அடங்கலையும் அடக்கி மனம் இருக்கும் நாளில், அந் நாளில் உனைச் சூழ்ந்து அனுதினமும் நாடி இருக்கும் உயிரினங்கள், வாழ்வில் அவர்களுக்குப் போதுமான வழியைத் தேடியே வைத்து விட்டு, தாளில் பதிவாய் எழுதி வைத்து தரித்த மனதினில் ஆசை பூண்டு ஆயுளில் பெரிதான தவத்தை நாடி, அப்போது இல்லென்றே திக்ர் செய்வீர், செய்யும் திக்ரினில் இல்லென்றதைச் செப்புவார்கள். அதன் சிறப்பை மட்டிட முடியாதென்று மெய்யும் மேன்மையு முண்டுமந்த, இல்லென்றதற்கு துய்யோன் அருள் மிக உண்டாகுமே! துய்யோன் அருள் கொண்ட திக்ரை செய்ய தொழுது துன்யாவை மறந்துவிட்டு, ஐயமில்லாமல் ஓர்மை பூண்டு, இல்லென்றே வாசியை நடத்த வேண்டும்.

மூடித் திறவாமல் இருப்பாயாகில், முடிவு உனக்கது செய்ய ஆகும். சொன்ன கலிமாவைக் கொண்டு வந்த சோதி நபி ரசூலுல்லாவும், சொன்ன ஸஹாபாக்களை வரவழைத்து, முழுதும் சொன்னார்களிந்த விதம், அந் நேரந்தனில் ஸஹாபாக்களும் அடர்ந்த கூட்டமாய் ஒன்று சேர்ந்து, மன்னனிரசூலுல்லா மனமுவந்து, மார்க்க முறையாக உரைத்தார்களே! உரைத்தவுடனே தான் ஸஹாபாக்களும், ஓடித்திரண்டுமே ஒன்றுகூடி, பெருத்த ஆசையாய் உறுதி கொண்டு. பேரின்பக் கடலில் மூழ்கி யப்போ, தெருத் தெருவாகக் கூட்டங் கூடி, திங்கள் முஹம்மதின் பாதம் போற்றி, பொருந்திக் கொண்டுமே சகலோர்களும் புகழாம் முஹம்மதின் முன்னிற் சென்றார். சென்று கலிமாவை லாயிலாஹ இல்லல்லாஹு சொல்லச் சொன்னார்கள். இரு கைகளை ஏந்தி முஹம்மது ரசூலுல் லாஹி என்றே முழக்கத்துடனே தான் தக்பீர் கட்டி, ஏக பெரியோனைத் தான் தொழுதார். தீர்ந்து எல்லோரும் ஒன்று கூடித் திருக் கலிமாவை பயிரதாக்கி, காந்தமதி லூசி கவ்வுமாப் போல் கேட்பார்களெல்லாம் கலிமாச் சொன்னார்.

சொன்ன கலிமாவை அறியாப் பாவி சோதி நபி உம் மத்தில் சேரமாட்டார். முன்னே கலிமாவைச் சொன்னே மென்று, மூஃமீன் குலத்தினில் சேர்ந்து கொண்டு பின்னே தொழுகாமல் இருப்பாராகில், பேரின்ப கலிமாவை இழந்த பாவி. என்ன தவமவர் செய்திட்டாலும், ஏகன் திருக் காணுதிருப்பவர் அவர் கலிமாவைக் காணமாட்டார். வாணாளழியுமுன் தமக்கு கியாம நாளில் கஷ்டமுண்டும். வருந்தி வணக்கத்தில் தரித்திருந்து, காண வேண்டும். சினதை பேணும் புகழான இஸ்லாத்தினில் பேசுகிறேன்.

உற்றுப்பாரும். ஆணும் பெண்ணும் சீனைத்தேடி அறிந்து கொள்ளுங்களென்று சொன்னார் என்றுமே சீனதை சிர்ரென்பார்கள். ஏதோ எனக்கதில் கொஞ்சம் போல, கண்டபடி அதைச் சொல்லப் போறேன். கருத்தில் பொருத்தமாய் உகந்த பேர்க்கு, அண்டபகிரண்ட புவனமெல்லாம் அடங்கியிருக்குது சிர்ரென்ற சீனுக்குள்ளே, விண்ட புகழெல்லாம் ஒன்று கூட்டி அறிந்தவர் ஆரியாவார்.

ஆவார் சீனுக்கு இலக்கம் அறுபதுதான். அடங்கி இருப்பதால் உலகமாச்சு. சாவார் கணக்கெல்லாம் சீனின் மீதே. சாற்றியிருக்கின்ற இரகசியத்தை நாவாலுரைத்திட முடியாதென்று, நாடி மறைத்தார்கள் ஞானவான்கள். போவார் காண்பார் இரகசியத்தை போதனை செய்ய முடியாதென்பார். முடியாதென்றுமே சொன்னதாலே, மூழ்கினோர் கலக்கமுற்று, படியாய் வைத்துமே மேலே ஏறி பாருங்களிவ் வுலகம் யாவும், காணும் கொடியும் பறந்து உலகையாட்டும், கோலம் பலதிலும் வந்து நின்று, அடியாய் இலங்கும் பொருளைப் பார்த்தால், ஆதியின் திருவருள் சீனதாகும். சீனென்றது சிர்ராமென்றும், சீனில் யாவுங் கூடியிருக்குதென்றும். சீனில் அறுபது நாழிகையும் சேர்ந்து வடிவாக இருந்தாலும். சீனில் நுழைந்துமே சிரசுண்டாகி, சேர்த்துக் குகையாகச் செய்து வைத்து சீனில் வெளியான சிர்ரெல்லாம் சேர்ந்து இஸ்லாத்தில் வெளி வந்ததே. ஆன சீனதில் அமைந்திருக்கும் அறுபது நாழிகையில் மனுவும் ஜின்னும் ஆன இறைவனைப்புகழ்ந்து நாடி தக்பீர் கட்டி வணங்க வேண்டும். தீனை இதில் நிலை நிறுத்திவிட்டு திக்ரை பிந்தியே செய்ய வேண்டும். அனுதினம் நாளும் சீன் அலிபு வாலை சேர்ந்து, நாடி

ஒதி வந்தேன். ஒதி வந்ததில் மூன்றெழுத்தும் ஒடித் திரண்டு அறுபத்தேழாய், ஒதி வந்ததில் அல்லாஹுவென்று மொழியும் இஸ்மில் புகுந்து, ஒடித் திரண்டு நிறப்படமாகி உலாவி வருமந்த வாசியாகி, நீதி பெருமந்த வாசி தன்னில், நினைவுடன் அல்லாஹு வென்று ஓத மனங் கொண்டு நாடும் நாளில் ஒடி நிறைந்து வாசிதானும் நாதமணி போல, திரண்டுருண்டு நாதாந்த வீட்டினில் வந்து சேர்ந்து வேதவிதி போலே தொழுது கொண்டு விரும்பி அனேகந் தொழில் செய்து வந்தேன்.

நீதியுடனந்தத் தொழில்களெல்லாம் நேராய் முடிந்த பின் நேசமானேன். நேசமானது சுவாசமாகி நினைவில் ஹுவதுந் தரிபாடாகி, ஆசை மிகைப்போடு தொழுது கொண்டு, அடுத்த லாமும் அலிபும் மீமைப் பார்க்க தோஷ மணுகாத லாம் நோன்பதாகும், தொடுத்த அலிபது ஹஜ்ஜுமாகும். நேச மீமது ஸக்காத்துமாகும். நிலைத்திருந்திடும் உண்மை காணும்.

காணும் படைப்பினில் அலிபும் சீனும் கலந்து உருவாகத் திரண்டதால் தோன்றும் படைப்புகள் அடங்கலேயும் தொடுத்துக் கருவாக்கி ஆணும் பெண்ணுமாய் ஒன்று கூட்டி ஹக்கான கலிமாவைச் சொல்லிச் சொல்லி, பேணு மிறைவனை வணங்குதற்குப் பெருந் துடக்கதை நீக்க வேண்டும் நீக்க வேண்டுங் காண் பெருந் துடக்கை, நீக்காமலென்றுங் கூடாதென்று, ஆக்கும் வகைகேளு முழுக்கானதை அறியாதிருப்போர்க்கு ஹராமாவது, நோக்கமுடன் குர்ஆனைத் தொழுவதுவும் நன்மைக்காக அதை ஓதுவதும் ஊக்கமுடன் தொழுகை தொழுவதுவும், ஓர்மையாய்ப் பள்ளியில் புகுதுவதும், இந்த வகை நான்குடன் மக்கா சொந்தமாகவே வையும் எண்ணி தவாபு செய்வதுவும்,

ஹாரு முமாகும். சுபுஹானல்லாஹி சொற்படியே, அந்த முடனிந்த ஐந்துவகை அறிந்துமுழுகிட வேண்டுமென்றால் இந்த பாடலைப் படித்துப்பார்த்தாகில் எல்லா விபரமும் விளங்குந்தானே. விளங்கும் வழியான முழுக்கானதை கருணையுடன் மூன்று தலத்திலாகும். நாட்டமுடனந்த தலத்தையெல்லாம் நன்றாய் உரைப்பதை அறிந்துகொள் வீர்,

தேட்டமுன் பாலிகுப் பருவமதும், தெளிந்து வருகு முன் முழுக்கின் வகை கேட்டுப் படித்திட வேணுமென்று கிருபையுடன் நபியுல்லா சொல்லைப் பாரும். நமது ஷறு ஹின் வழி படித்த அறிவாளர்கள் தன்னைத் தேடி ஆகும், பாலிகு ஆகுமுன்னே அதுகளின் டம்லு ஷர்த்தைத் தேடி. சேரும் படியாகப் படித்தறிந்து. மழகி வந்தால் தீர்ந்த முழுக்கு வந்தாலந்த தினத்தில் முழுக்கை இறுத்து குளித் துமே தொழுது கொள்வாய்.

கெள்ளும் பருவத்தின் முன்னதாக கோமானிரசூல் சொன்னபடி, விள்ளும் என் பேரில் விதிக்கப்பட்ட வேறென்னும் பெருந்தடக்கை நீக்கி, உள்ளும் புறமும் ஒன்றுபோல உன்னைத் தொழுகவே நாடி வந்தேன் என்று அள்ளுந் தண்ணீரால் திரேகமது, அடங்கலும் நனையக் குளித்தால் போதும், குளித்தால் போதுமென்று நீயும், குர்ஆனை ஓதியே தொழுகாவிட்டால், குளித்த இடத்தி னில் தொழுகைக்காகக் குறித்த நிய்யத்து பொய்யாகிவிடும். மறுதரங் குளித்தாலும் மறுதரமும் அகலாது. முழுக்கு உன்னைவிட்டு கிழக்கு வெளுக்குமுன் குளித்துத் தொழுகச் சொல்லி வேதவிதியது சொன்னதுண்மை.

பொருளை அறிந்தவர்க்கு அருளுமுண்டு. பூலோக மெங்கும் புகழுமுண்டு. அருளுங் குடிகொள்ளும் அவர்கள் மீது. ஆதியின் இதாரும் காணச் செய்யும். இருளும் நீங்கியே ஒளி யுண்டாகும். ஏகமும் முறைப்பத்தாய் சூழ்ந்துகொள்ளும். பருளுந்தவமிது சருகிடாமல் மனதில் உவப்போடு இருந்து கேளும். துன்யாவில் இருந்து வாழ்ந்து கெடுவும் முடிந்துமே பயணம் போக நாளும் வந்தபின் மவுத்தின் வேலை நமக்கு முழுக்கொன்றிருக்கு தப்போ. ஆளும் ரஹ்மானின் கிருபை வேண்டும். அந்த முழுக்கை நிவர்த்தி செய்ய வாழும் பணம் செல்வம், மனைவிமக்கள் வருந்தி அழுதாலும் முடியாதப்போ. முடியாதிந்தத் தலத்தினுலே மூஃமீன் குலமல்லால் தப்ப மாட்டார். அடியோடு இவர்கள் செயல்களெல்லாம், அகன்று மனதினில் அச்சம் பூண்டு, நீண்ட நினைவெல்லாம் கிட்ட வர, நெஞ்சில் படபடப்பு அதிகமாகும். துடியாய் மொழிந்த நாவானது தூக்கி மொழிந்திட ஏலாமலே, அந் நேரமதில் கேள்வியுண்டு. நெஞ்சில் அறிவோடு பார்வையுண்டு. சேரும் மூச்சுண்டு. தன்னுலொன்றும் செய்து முடித்திட ஏலாமலே, ஆரம்ப முதல் நாம் செய்து வந்த அந்தச் செயலெல்லாம் வானெழுந்து, தூரந்தொலை இல்லாமல் கிட்டவர துலங்கும். இரு கண்ணுல் பார்க்கும் போது அந் நேரந்தனில் கண்ணின் முன்னே பெண்ணின் ரூபம் போலும், பெண்களுக்கு ஆணின் ரூபம் போலும் தோற்றமாகும் அந்த வேளையில் மோகமாகி சிந்தை கலங்கியே அறிவிழந்து, அவ்வழகைக் கண்டு மனதினில் பார்க்கும் மோகத்தால் மதிமயங்கி ஆசையால் மயங்குவார்கள். அந்த வேளையில் மணியுமிறங்கியே முழுக்காளி

யாவர், தயங்கி வெளியான முழுக்கிஞேடு தீர்ந்து இன்னுயிர் போகுமாஞல், தயக்கமுடனந்த முழுக்காலதை தானே நீக்கிட முடியாததால் பயத்தின் கொடுமையால் அநேகர் பாரில் நடுங்கியே மவ்த்தாஞர்கள். மவ்த்து வருமுன் மவ்த்தாஞல் மாய்கை முழுக்கதை நீக்கிக்கொள்வாய். மவத்தின் உள்ளமை நாட்டத்திலே மறைத்து இருக்கின்ருன் ஆதிநாயன். மவ்த்தை உடலது ஒப்புக் கொள்ளும் மருளுவார்களிதை அறிய மாட்டார். மவ்த்தை அறியாமல் இருப்போர்களை மடையர்களென்று ரசூல் சொன்ஞர்களே, சொல்லேன் மவ்த்தின் உள்ளமையை சோதி ரஹ்மானின் கிருபையாலே, மன்னுனுரை செய்தான் குர்ஆனிலே, மவ்த்து என்பது மறைவாமென்றும், சொன்னபடி நாம் மறையும் முன்னே சேர்த்து சகலமும் முடிக்க வேண்டும். இன்ன விதமாக நமது றூஹு ஏகுமென்று அறிந்து கொண்டால், சொந்தமாகிய றூஹு சென்ருல் சொந்தமனுவோர்கள் அழுகுவார்கள். அழுது புலம்பியே குளிப்பாட்டிக் கபனுடுத்தி அப்போ தூக்கியே மனுவோர்களும் பழுது வராமல் எல்லோருமொன்ருய் பாங்காய்ப் பள்ளியில் கொண்டு சேர்த்து தொழுகை வைத்ததுமே துஆவுமோதி துலங்கும் கபுரறையில் கொண்டு வைத்து மூழுதும் மூடி முடிந்த பின்பு முன்கர் நக்கிரும் வருவார் அங்கு. வந்திவர்களைப் பார்க்கும் போது ஆகா முழுக்குடனிருக்கக் கண்டு தங்கி முழுக்கிவரில் இருக்கும் வரை தனியோன் தீதாரைக் காஞரென்று, பொங்குங் கோபத்தாலிரு விழியும் புகலும் நெருப்பாக எரியக் கேட்பார், இங்கு ஏன் வந்தாய் முழுக்காளியாய் எங்கள் குலத்தாருன்னைத் தீண்ட மாட்டார். இந்த முழுக்காளியைத் திரும்பிப் பார்க்கவும் பிரியமில்லை. ஆண்டவனிடத்திலே இவருக்காக அநேக குற்றங்கள் சாட்டுவார்கள். வேண்

டாமெனச் சொல்லி மறுக்கப்பட்ட வேலைகள் மிகுதமாய்ச் செய்த பாவிதாண்டி நரகினில் வீழ்வாயென்று தனியோன் மலக்குகள் போவார்களே.

போனவுடனே தான் இவர் தனக்கு புகழுடன் எங்கும் மோட்சமில்லை. தான மய்யத்து வருகுமுன்னே தரித்த முழுக்கதை நீக்கினோர்க்கு வானம் புவியெங்கும் புகழ்ந்திலங்க வருவார் மலக்கல் மய்யத்துமப்போ, ஆன ரஹ்மானின் ஸலாமுரைத்து, அருமையுடன் வாங்க உங்கள் றூஹைத்தான் ஆண்டவனும் உடனே வாங்கி வரவுஞ் சொன்னான். தங்கள் அனுமதி எதுவோவென்று தனியோன் இஸ்றயீல் கேட்கும்போது, திங்கள் முஹம்மது ஷபாஅத்தோடு தீர்ப்பு எனக்கு முடிந்துவிட்டால் பொங்கும் எனது றூஹைத்தானும் பேராதரவாய் வாங்குமென்று சொல்வார். சொல்லும் போதினில் இஸ்றயீலும் சோபனங் கூறி றூஹை வாங்கி வெல்லும் புகழான ஆதி நாயன் பாலில் விபரஞ் சொல்லியே றூஹை வைப்பார். எல்லாங் குறையாமல் நிரப்பமான எந்தன் அடிமையைப் பாருமென்று சொல்லுவானப்போ ஆதி நாயன் சூழ்ந்து மலக்குகள் புகழுவார்கள்.

புகழ்ந்து நிற்பார்கள் மலக்குகளும் புவியில் குழி தோண்டி முடிந்துவிடும். இகழ்ந்துவிடாமல் மனுவோர்களும் இறைவன் அருளினல் கூட்டங் கூடி மகிழ்ந்து மனமாற தொழுக வைத்து மண்ணறையில் கொண்டு அடக்கஞ் செய்து புகழ்ந்து துஆவும் அவரவர்கள் ஓதி போவார் அவர் மனேயை நாடி, அவர்களும் போகும் நேரம் தெளிவாய் முன்கர் நக்கீர் வந்து வாடி மலர்ந்த முகத்தைப் பார்த்து வந்த இருவரும் சொல்லுவார்கள்,

தேடி வந்தோமிப் போதுங்களையும் தீர்ப்புச் செய்து மூஃமினுக்கு கூடி நம்மை முஹப்பத்தாகக் கொடுக்கின்றோம். சிட்டு சிறையைக் காண, காணும் மஹ்ஷரும் தராசு மீசான் கனத்த சிராத் தென்னும் பாலம் யாவும் பேணிக் காத்துமே பிரியமாகி பேரின்பக் கடலில் மூழ்கி யாவும் தோணும் ஜன்னத்தைத் தாண்டியங்கு துலங்கும் லிக்கா வினில் சேர்த்து வைக்கும் ஆணவமில்லாமல் தாழ்மையாகி அந்த லிக்காவினில் சென்று கொள்வீர்.

சென்று இறைவனைத் தொழுவதற்கு செய்திகளைத் தனையோ அறிய வேண்டும். கண்டு தொழுதிட வேண்டு மென்று கற்ற அறிவாளர் சொன்னதாலே, ஒன்று படுத்தியே வணங்கும் வகை ஓர்மைத் தவ்ஹீது நிலையுமாகும். இன்று தவ்ஹீதில் நின்று கொண்டு இலங்கும் கல்பினில் அல்லாஹுவை அறிந்து மனமுவந்து, அன்று சுஜூதிடும் அறிவைக் கேளும். வல்லான் தனை நாடி வணங்கவென்று வந்து முசல்லாவில் நின்று கொண்டு எல்லாம் அவனென்று மனதில் நாடி, ஏவலாமிந்த வணக்கமென்று நல்ல மனதினில் உறுதிபூண்டிடுவாயுன் கல்பில் தாத்தானதை நாடியே சிபத்தைப் பார்க்க தாத்தின் சுடரொளி சிபாத்தாமென்று தாத்தைத் தேடியே சிபத்தானதும் தவிர்த்தும் அழுகுமந்தக் காட்சி காண்பாய். தாத்தைக் கண்ட பின் சிபத்தானது தனத்த வுஜூதாக இருக்கக் காண்பாய். தாத்தில் வுஜூதைக் கண்டு நீயும் தரித்து கல்பினில் ஹாழிருக்கு மென்ற நாட்டங் கொண்டு ஹக்கான நாயனை நினைவில் கொண்டு ஹாழிருக வைத்துன் கல்பின் மீது ஹக்கான சிங்காசனங் கொலுவிருத்தி ஹாழிருய்த் தவ்ஹீது செய்தொன்றுக்கி, ஹக்கும் நீயுமாய் வணக்கம் செய்து ஹாழிருனோர்க்கு ஸலாம் சொல்லும்போது, ஹக்கன் தரிசனை என்றறிந்து

சொல்லாய். சொல்லுமிறையவன் தனை வணங்கிச் சேர்ந்த மூஃமினோர்களுக்கும் ஸலாமுறைத்து வெல்லுந் தொழு கையை மறந்திராமல் வேண்டித் தொழுதிறை முஹப்பத் தாகி அல்லும் பகலும் மறந்து இராமல் அவனின் நாட்டத் தில் இருக்கும் வகை சொல்லித் தருகிறேன் உங்களுக்கு சுவாச நிலை என்று அறிந்து கொள்வீர்.

நீங்கள் பேரளவிலில்லாமல் உண்மை முஸ்லிமாவதற் கிது வழிகாட்டி. கொள்ளும் சுவாசத்தின் பாதைமீது கொழுகி திக்ர் செய்யும் வகை எள்ளளவும் பிசகாமல் அறிந்து கொண்டால் ஏறி அர்ஷினில் சென்றுலாவி விள் ளுங் கருணை தான் அர்ஷின் மீது வீற்றிருக்குமந்த காட்சி காண்க. உண்மையான வழி இதுதானென்று உரைக் கிறேன் அதன் உண்மை கேளும். குளவியாகிறது ஒரு புழுவை எடுத்து வந்து மரத் துளையினுள் வைத்து நாள் தவறாமல் மரத் துளையின் மேலே நாடி வந்து உபதேசஞ் செய்யும். பூச்சி தேடும் முஹப்பத்தை புழுவானது தின மும் மனதினில் உருவதாக்கி வாழும். புழுவதின் கல்பின் மீது வந்து உபதேசம் பதிந்தாலே பதிந்த உபதேசம் செய் யும் செய்யும் பூச்சிப் பதறியலறியே பொதிந்த இலைகளில் இருக்கக் கண்டு போற்றிக் கதறியே தூக்கும் போது முதிர்ந்த குளவியை புழுவானது முந்த மனதினில் மறக்கா மலே பதித்து மனதினில் பார்க்கப் பார்க்க பகரும் குழவி தான் தெரியுமப்போ தெரிந்த நினைவது மறக்காமலே அனு தினமும் யாதினில் தரித்ததானது விரிந்து கைகால் இறக் கையதற்கு முளைத்துப் பறந்திடக் கோலம் பூண்டு இருந்த கையதற்கு ரூபத்தைப் பார்க்கும் போது இலையிலிருந்த புழுவைக் காணோம். சோதி ரஹ்மானின் கிருபையினால் சொல்லு கிறேனிதை அறிந்து கொள்வீர்.

உன்னுடைய உடலின் மீது கோமான் அருள் பெற்ற வாசியானது துள்ளியாவென்று உள்ளே சென்று துலங்கி உயிரை உருவாக்கி, விள்ளும் ஹயாத்தான இரத்தமும் சூடும் விளைந்து நரம்பெல்லாஞ் சென்று உலாவி அள்ளும் ரஹ்மத்தில் நிரப்பமாக்கி ஹக்கன் முஹப்பத்தில் அடைத்து நரம்பெல்லாம் பூட்டி வைத்து, ஹப்லுல் வரீதென்ற நரம்பில் மாட்டி, கிடைத்த பொருளெல்லாம் ஒன்ருய்க்கூட்டி கல்பென்னுங் குகையில் கொண்டு வைத்துப் படைத்த பொருளெல்லாம் ஒன்ருகச் சேர்த்து, பாய்ந்து முண்டகக் கமலமேறி அடைத்துக் கதவெல்லாம் பூட்டி விட்டு, அதிகாரஞ் செய்திடக் கீழிறங்கி கல்பென்னும் கோட்டை சேர்ந்து இலங்கி, மூச்சாகக் கோலம் பூண்டு, உறங்கி விழித்து கல்பில் வந்து, உண்மை வுஜூதாக எழுந்து நின்று திறங் கொண்டு அந்த யாஹூவானது தெரிந்து மூச்சானதில் வெளியாகுமே. வெளியில் வந்துள்ளே திரும்பும்போது, விரும்பி இல்லென்ற அட்சரத்தைஅழியாதேற்றிறக்கம் செய்து வர, அப்போது கல்பும் நிறைந்து போகும். ஒளிவானதுக ளெல்லாம் ஒன்று கூட்டி, யாஹூவில் கலந்துமே பார்க்கும் போது, கழிவு எதுவுமில்லை. உலகம் யாவும் கண்ட பின்னதை மாற்றிப் பிடிக்க மறு தரமும் மனதில் நினைவதை மறந்திடாமல் ஏற்றிறக்கம் செய்து கல்பில் வைத்து சாற்றிக் கமலத்தைப் பூட்டி வைத்து யாஹூ வென்ற அட்சரத்தை ஏற்றிறக்கம் செய்து, எச்சனமுமிதை மறந்திடாமல் ஏற்றிறக்கம் செய்து பாரும். பேரின்ப நல்லருளைக் கண்ணில் காண்பாய். உருகுங் கல்பது தாத்தின் ஜோதி உள்ள குபிரெல்லாம் அகற்றிவிடும். பொருளான கலிமாவிலே வரும். லாயிலாஹ இல்லல்லாஹூவில் மெய்க்கும் யாவும்

ஹூவும் மேலாம் திக்ராக நினைவு பூண்டு, கைக்கும் கருணையாய் கல்பின் மீது, இல்லானதை எடுத்து நடத்த வகையை கேட்டுத் தெரிந்து நடத்தி வந்தால் உந்திக் கம லம் சேர்ந்து கதவெல்லாம் தாழ்ப்பாளிட்டு மன்னமுற்றால் யா வென்றேத்தி ஹூ வென் றிறக்கி இல்லென்றே முழங்கி ஹக்கென்றடித்து இல்இல் இல்லென்றே முழக்கம் செய்து கொள்வதற்குத் தெரிந்த ஆரிபை அடுத்து தெரிந்துகொண் டால் காமில் குலத்தினில் சேர்வாய் உண்மை.

போகும் வழிகளில் உறைந்த நாட்டம் புகழும் முஹம்மது என்று அறிந்து கொள்வாய். வாகு பொருந்து மூன் நினைவு நாட்டம் வணங்குமிடங்களில் அல்லாஹு வான தலம் அறிந்துணர்ந்து அழகாம் கல்பினில், இருத்திக் கொண்டு நன்ருய்த் தொழுதுமே மறந்திடாமல், நாடிய திக்ர்கள் செய்யும் போது பொல்லா இபுலீசுப் பொருந்தா னப்போ, புதுமையடங்கலும் வெளியிலாகும் அல்லாஹ் வின் அருள் கொண்ட ஆரிபாவாய். அனைத்தையும் முடித்து நீ ஆமீன் கூறு. ரஹ்மானின் கிருபையாலே குவலயத்தில் யான் மனுவோர்க்காக சீறும் நாகத்தின் ரத் தினத்தை சிறையிலகப்பட்ட துன்யாவிலே தேறும்படி யாக சொல்லிவிட்டேன். இயன்ற அறிவாளி தேறிடுவார். நாறும் நஜீசினில் துவண்ட பேர்கள் நாடி ஒருபோதும் தேளார்களே!

தன்னை அறியும் வகை

லேளும் உனதடிமை இந்தப்பாவி. கிருபையுடனே தான் உன் அஹதியத்தை, நாளும் சமதாக இருக்கும் போது, நானில்லை நீயென்றே தனித்திருந்தாய். ஆளும் வந்து பார்க்க அத்தனையுமிருக்க உன்னைக் காணேம்! பாழும் உலகினையழித்துப் பார்க்கப் படைத்த பெரியவா உன்னைக்காண்பேன். காணும் போதல்லோ நீயும் நானும் காணுதிருந்திடில் நான் நீயுமில்லை. காணும் உலமெல்லாம் நீயாகவே கண்டு அவைகளைப் பார்க்கும்போது, ஆண் களில் பெண்கள் இன்பம் பூண்டு, அணைந்து கூடிடும் ஆசைக்காகக் காணும் வகையெல்லாம் நீ படைத்து கண்டு அவைகளைச் சொன்னதால், சொன்ன முறையது போல் அருந்தும்போது, சூட்சமதிலுள்ள சத்துகளை, முன்ன மேல் முரசு வாங்கி அதை மேல் நாக்கில் கொடுத்தவுடன் பின்னே இழுத்து மூளைக்கிழுத்து இருவிழிப் பார்வையாக்கி அன்னை முகத்தினில் ஒளிவுண்டாக்கி அறிவு புத்தி அக்க லாகும். அதன் பின் சக்கையெல்லாம் சேர்த்துக் குடலி லேயே வேக வைத்து, பற்பல பிரிவாகப் பிரித்து மல ஜலத் தைச் செல்லும் வழியாகத் தள்ளிவிட்டு, சத்தானதைச் சேர்த்துப் பதனமாக்கி, அல்லும்பகலுமாய்த்தெளிவுகண்டு அடர்ந்த நரம்பெங்கும் பாய்ச்சி, மீதமிருப்பதைத் தெளிவு செய்து, மேன்மையுள்ளஓர்பொருளதாக்கி அச்சமில்லாமல் ஆதியின் முன் அன்பாய் வைத்து கலிமா ஓதி மீதமிருப் பதை சொந்தமாகிய மூளையில் சேர்த்து, இச்சைமிகவான

மஃஷு-ஆக் கென்று இலங்கும் ஆஷிக்கில் கலந்துகொண்டு இறைவனின் ஆசை தன்னில் கோர்த்து. இவ்விரண்டும் திரளும் போது விண்ட ஆசைக்குகந்து நின்ற பீபீதனைத் தேடி விவாகஞ் செய்து, கண்டுமலர்விழி மஃஷு-ஆக்கைக் கண்டு அணைந்து கூடிட ஆசை பூண்டு கண்ட வினைவதன் ஆசையாலே, கருணையுடன் வாவென்றழைத்த ஆஷிக்கு முன்னில் வர, அதில் இஷ்க்கது நின்றிலங்க வளைத்து மஃஷு-ஆக்கு மோகமாகி, வாரி அணைத்துமே கூடும் போது முளைத்த கனிகளில் இருந்துமப்போ முன்னே சிரசினில் வந்திருந்த விளைந்த மணி சூடு நாதமாகி, வெளியிலேகிட ஆசையாச்சே! அந்த ஆசையால் மோகங் கொதிப்புண் டாகி, மிதாலைக் கண்டு ஓசையாலது ஒளிவுண்டாகி, ஓடி நிறைந் தெங்கும் தம்மதாகி, பாசையால் நம்மைப் பட மெடுத்து பளிங்கிரூபம்போல் தெளிவுண்டாக்கி வாசியாம் இந்தை மூச்சில் கொஞ்சம் வடிவாயேறியே நடையிலேகிட அன்னமாகி நடந்து வந்து மிதாலைக் கண்டு இடை இல்லா மல், வழிந்து விந்தாய் இலங்கும். கலத்தின் முனையிலாகி தடையில்லாமல் இல்லென்றிருத்தி தம்மதுவாக யாவென் றேத்தி அடைந்து விந்தினுள் வாசியை ஹு-ஆவென்றிறக்கி அப்பவே இல்லென்றே பாய்ந்தேவிந்து இறங்கவேமூச்சை இலேசாக விடுவியானால் ஆயுள் நீளமான குழந்தையாகும். விந்து இறங்கு முன் மூச்சை விட்டால் நுத்பா மெதுவாய் பாய்ந்ததானால் வயது குறைந்து விடுமென்றுணர்ந்து கொள்வாய்.

சிந்தை உகந்துமே அறிந்துணர்ந்து, சென்று கர்ப்பத் தில் தங்குந் தானே! இருந்து அவ்விடம் தன்னைப் பார்த்து

இலங்கும் அஹதும் உஹதும் வாஹிதாகி பொருந்தும் முச்சுடரும் ஒன்று கூடி, போற்றி அதனுள் இருந்துகொண்டு வருந்தி வணங்கவே சூடுண்டாகி, வந்த நுத்பா இரத்தமாகி அருந்தும் சுவை ஹூ அல்லாவென்று. அப்போது ஆலமுல் அர்வாஹாச்சே! ஆலம் அர்வாஹாய் இருக்கும்போது அந்த இடத்தினில் மிதாலைக் கண்டு, கோலமில்லாமல் மிதாலை நாடித் தொழுது அதனுள்ளே தேடியோடி காலம் முழுவதுமே கணக்குண்டாகி, கருவும் நினைவுமாய்த் திரண்டு நாதும் ஏலமதுவாக அருபியோசை இப்போது குல்லென்று சொல்லுமென்றான்.

சொல்லுமென்றுலந்த நேரமதில், சேர்ந்த கண், காது, மூக்கு, நாக்கு எல்லாமில்லாமல் சொல்லுமென்றால் எடுத்து உரைத்திட ஏலாமலே, அல்லும் பகலுமே மறந்திடாமல் ஆசை மிகக் கொண்டு தரிபாடாக்கி, வெல்லும்படியாக மறு முறையும் விரும்பிச் சொல்லென்று கேட்டதாலே, ஜவாபு சொல்ல கீர்த்தி பெற்றோர் யாருமில்லை. நாட்டம் போலவே மிதாலுமாகி, நடந்து வருவதுங்கோலமாகி கூட்டம் அவனல்லால் யாருமில்லை. கூடி அணைந்திருக்க மஃஷூக்கில்லை. தேட்டம் அவன் மேல் ஆசையாகி தினமும் குல்லென்று சொல்லுண்டாச்சு. சொல்ல ஒருவருமில்லாமலே, சூலாய் அதனுள்ளே தர்முமாகி, அல்லும் பகலுமே குல்லென்று அடங்கியிருக்கவே இடமில்லாமல், வல்லமை கொண்டு அஜ்சாமுமாகி, வந்து எங்கும் சுற்றிப் பார்த்து சொல்ல முடியாத ஹூவென்று சுழித்து வெளியிலே வந்ததாமே! வந்த வழியது உச்சியாகும். வாசியாய் எழுந்துமே நிலையிலாகி, சொந்தமாகிய மீமைத் தேடிச் சேர்த்து மாதாவருள் பெற்றுக்கொண்டு அந்த அருளதில் மீமைச் சேர்த்து அணைந்து மீமது

ஹூவில் பாய்ந்து, விந்தையாய் ஹூம் மென்று இருத்திக் கொண்டு வந்த வழி சென்றுள்ளே தரித்தது. உள்ளே அலிபும் லாமும் தானே இல்லென்று தம்மிலாகி விரித்து இல்லென்றோத ஒளிவுண்டாகி, விளைந்த ஒளிவதில் உவப்புண்டாகி, கருத்தில் உவப்பதை மோகமாகக் கண்ட மோஹத்தை உற்றுப் பார்க்க பெருத்த அஹது உஹது மாகி பேசும் வாஹிதாய் பிறந்ததன்றே. முச்சுடரும் ஒன்று கூடி பெரிய அர்வாஹ் ஆலமாகிச் சிறந்த ஆலமுல் மிதாலுமாகி, சொல்லும் கண், காது, மூக்கு, நாக்கும், விரிந்து மலர்ந்துமே உறுப்பு யாவும் விளைந்து முடிந்த பின் நேரம் பார்த்து, இரக்க மிகக் கொண்டு ஹூவானது இறுத்தி இல்லென்று உறுக்கும் போதில் இறக்கம் பொங்கி உடல்கள் எங்கும் வெதுவெதுப்பு பெருக்கும். அஜ்சா மாய், வெளியில் வர பேசும் இன்சான் கோலம் போலும் பிறக்கும். இல் இல்லென்னும் பிரியத்தாலே ஓடிப் பிழந்த தும் வாயானது. பிழந்தவுடன் வல்ல இறைவனைத் திக்ர் செய்ய சாயா நிழலுடனிருந்து கொண்டு, சந்தேகமறவே கற்றுணர்ந்து மாயா வினைகளை அறுத்தெறிந்து மனதிலு கப்போடு நினைவு பூண்டு, வாயால் அல்லாஹூ என்று உறைத்து வந்து நிலை நின்று பார்க்குமப்போ இருவிழிதான் திறந்து பறந்து ஹூவானது எங்குமோடி வரும்.

புகழ்கின்ற அல்லாஹூவை அந்த இடத்தினில் கல்பு பார்த்து சேர்த்து, அல்லாஹூஸ் ஸமது என்று சென்ற இடமெங்கும் நிறப்பமாகித் தீர்க்க ஆலமுல் அஜ்சாமாகிச் சேர்ந்த உறுப்புகள் நிறப்பமான இன்சான்தான் அவ்வயிற் றில் அமைந்து உருவாக இருக்கும் நாளில், தானே சகலத் தையும் உணர்ந்ததாலே தாய் தந்தை முயற்சி இல்லாமலும் தானே லம்யெலித் என்று சொல்லி தான் ஒருவராய்

பெற்றோனில்லை. தானே வலப்பூலது நாறொருவரையும்
வருந்திப் பெறவுமில்லை என்று அறிந்தபின், ரப்பின்கோலம்
ஏகமனதினில் பதிந்தவுடன் நன்றாய்ப் பார்க்கவே அவனைப்
போல நாயன் ஒருவருமில்லை என்று பாடி வலம் யக்குன்
லஹூ குப்வன் அஹத் பகரும் பொருள் கொண்டு நிலையி
லாகி ஓடி நடந்துமே உடலைச் சூழ்ந்து உயிரில் கலந்தங்கே
இருக்குமென்றும், புகழ்ந்து துலங்கி வாழ்க எழுந்த உட
லெங்கும் ஹூ வல்லாஹூ கன்று மாவான மீமைப்
பார்த்துக் காணுமுடல் யாவும் முடித்து விட்டோம்.
சென்று இருந்திடும் உடலின் மீது, செய்து முடித்த கடை
சித் தலம். அன்று மீமுடன் ஆஷிக்காகி அணைந்து ஹூ
வது லாவுமானால், அறியுங்கள் மூஃமீன்களே! அமைந்து
உடலுக்குள் இருந்த கோலம் தீனால் உயர்வது இஸ்லா
மாகும். தீனில் பிறக்கவே இன்சானாகி தானாக வளர்ந்தி
டும். அலிபு நீண்டு தரித்த புகழ் ரப்பில் ஆலமீனும்.
னால் மறைந்த பைத்துல் மஃமூர் சிங்காசனத்தினுள்
மறைந்ததாமே! மறைந்து மூளையில் வெளியதாகி, மங்கா
ஒளிவாய்க் கல்பில் நிறைந்த சிங்காசனத்தில் கொலுவிருந்து
நேர்மையுடனே தான் அர்ரஹ்மானு அல்லமல் குர்ஆன்
கலக்கல் இன்சான அல்லமஹூல் பயான் என்றுரைத்து
உரைந்து உருவாக வந்திருக்கும், உண்மை வுஜூதே
யான் சொல்லக் கேளும். அர்ரஹ்மான் எல்லோருக்கும்
கிருபை புரிபவன் நானே யாகும். வாழும் அல்லமல்
குர்ஆன் என்றால் வருகும் உனக்கது வேதமாக, நாளும்
கலக்கல் இன்சான் றூஹூ கொண்டு நாமுனை ஹயாத்தில்
சேர்த்த பின்பு ஆள்வதற்குன்னை துன்யா மீது அனுப்புதற்
காகவே முன்னிலாக்கி ஆக்கி மூன்னிலே தானும் வைத்து
அல்லமஹூல் பயான் அல்லாஹ் சொன்னான். வாக்கி
யங்களை துன்யா வெங்கும் வாழ்வு பரக்கத்தாய் வைக்கப்

போறேன். தாக்கி மனம் போலே நடக்காமலே, தனி யோன் யாரென்று பயந்துகொள்ளும் சாட்சியாம் யாபே ருக்கும் குர்ஆன் என்று சொல்லி அப்போது முன்னில் வைத்தான்.

வைத்து பயானும் செய்து, வள்ளல் முஹம்மதுன் நபியென்றோதி, மெய்த் துதியான குர்அன் தன்னை மேன் மையாய் அன்றோதக் கேட்டிருந்து சகித்து என்னிடமி ருந்து நீங்கள் சரியாய் குர்ஆனைப் படித்ததாலே, தைத்த மனதோடு துன்யாவேகித் தனித்து எனை வணங்கி வாங்க ளென்றான்.

வாருங்கள் இது போலே மஹ்ஷர் கூடி, வாயால் பேசுவதும் குர்ஆன் பாஷை, நீங்கள் துன்யாவில் சென்று பார்த்தால் நிலைத்த பல பாஷை இருக்குமெங்கும், சாங்க முடன் என்னை வணங்கும்போது சரியாய் நாட்டம் இருக்க வேண்டும். போங்களுங்களைப் பிரியம் வைத்து போற்று வார்கள் போய் வாங்களென்றான். போய் வாருமென்று சொன்னவுடன் புகழ்ந்து நாமும் திரும்பும்போது, தாயின் வயிறது வேதனையால் தாங்க முடியாமல் மனமுடைந்து வாய் விட்டலறியே அழுது கொண்டு, வல்லவா நீ என் னைக் காருமென்று பாய வருமந்த மூச்சானதை பக்குவமாக இல்லென்று இறுத்தும் போது. இறுத்தும் போதினில் இல்லாளது ஏறி உடலெங்கும் நிறைந்து கொண்டு பொருந்தும் வழியதில் என்னைத் தள்ளி புவியில் முகம் குப் புற விழுகச் செய்து வருந்தும்படி என்னை உலகிலிட்டு வரிசையுடனது பிரிந்துபோக திருந்தும் புகழாக மறையும் போது தீன்தீன் முஹம்ம தென்றழுந்து வந்தேன். வந்து துன்யாவைப் பார்க்கும் போது வளரும் ஆசை யாவும் என் கண்ணின் மீது. முந்தி இருந்துமே என்னையாட்டி

மோகமது கொண்டு அழுகச் சொல்லி சிந்தை உகந்துமே இன்பம் கண்டு சீக்கிரம் சீக்கிரம் அழுது நின்றால் அந்த வகைகளை எனது மாதா அருமையுடன் தர அருந்திக் கேட்பேன்.

கேட்கக் கேட்க என் மாதா கிருபை மிகக் கொண்டு அமிர்தமீய பார்க்கப் பலவகையில் பரந்து என்னுசை குடியிருந்து சேர்க்க சேர்க்க ஆசையெல்லாம் சரியாய் ஓரிடந் திரண்ட பின்பு, மோகம் உண்டாகி சிந்தையில் ஆசையாகியதால், முழுக்கு விதித்துவிடும். அந்த முழுக் கான பெருந் துடக்கு ஆகும். நான் என்ற ஆண்மையாக எந்த வகையிலும், இல்லாவிட்டால் எவரும் ஆரிபாய் வாழ்வாளே! சொந்த வகைகளை நாடி எந்தன் ஷெய்கைத் தேடியே அறிந்து யானும் அறிந்து பார்க்கவே தெரிந்த தெல்லாம் அங்கங்கு சொல்லி விட்டேன். பிரிந்த வகை களில் சேர்ந்திடாமல் பிண்டமாய் எழுந்து வந்ததெல்லாம் சிறந்த வகைகளில் சொல்லிச் சொல்லி ஷெய்கைத் தேடித் தேடியே அறியச் சொன்னால், முறிந்து போகுமே மனிதர் ஆசை முழுதும் அறியாமல் போனதானல், ஆன மனித ரின் மனதாசையை அழிக்க எனக்குப் பிரியமில்லை.

தானே அதிலொன்றும் மறைக்காமலேறி தரித்த உட லில் பிரித்துச் சொல்வேன், மானே மனதாசை கொண்டி ருந்து, மன்னவன் தன்னை அறிந்துணர்ந்து, நீனே உனது உடலை உற்றுப்பாரு. நினைத்த பொருளதை முன்னில் காண்பாய்! கண்களிரண்டும் இருப்பதாலே பேணும் அவ் விரு கண்ணின் மீது, பிசகாமல் நிறைந்து இருப்பதாலும் ஆணும் பெண்ணுமாய் பார்க்கும்போது, அந்தக் கண்ணி னுள் அடங்கி நிற்கும், தோணுமிரு கண்ணில் ரப்பின் ஜோதி துலங்கி வீசியே இருக்கும் பாரு. இருக்கும்

இடத்தை ஞானவான்கள் இன்னவிட மென்று சொல்லா மலே சுருக்கமதுவாகச் சொன்னதாலே சுழன்று மனமெல் லாம் பிறண்டுருண்டு, பெருக்கும் நமது ஷரகை விட்டுப் பேணுதலில்லாமல் கெட்டலேந்து, விரித்த தலையுடன் மஸ் தானென்றும், விளங்கும் ஞானியோகி என்றும், பொருத்த மான சில பாஷை பேசி, புவியோரை நிதம் மதிமயக்கி, அனேகம் பெயர்களை வழிகெடுத்தார். கெடுத்தவர்களை கிட்டே இருந்து யான் பார்த்ததால் என் மனம் சகிக்காமல் இதை எழுதலானேன். கொடுத்த என் குரு முஹியித்தீ னும், கோமான் அருளினால் குறைகள் இல்லாமல், தொடுத்து உரைத்தார்கள் ஞானம். தோகை மயிலான பேரொளி போன்று ஒளிவாலத்தனையும் அமைத்த விதமும் ஓடி அலையவே வைத்த விதமும், தெளிவாய் அறிய வழி யைக் காட்டி. தீன் நபியுல்லா உம்மத்தோர்க்கு கழிவாயில் லாமல் உருவாக்கிக் காமில் குலத்தினில் சேர்வாரென்று, வழியை அறிந்த பின் மனந் துணிந்து வெளியில் சொல்கி றேன் இரகசியத்தை. அறிய வேண்டுமானால் தக்கலே பீர்முஹம்மது சாஹிபொலி பாடலிலும், பெரிய நூஹு லெப்பை ஆலிம் பாடலிலும், தைக்கா சாஹிபொலி பாட லிலும், ஷெய்குதுமான் லெப்பை ஆலிம் பாடலிலும், குணங்குடி அப்பா பாடலிலும் இன்னும் நாட்டில் பேர் விளங்கிய மாப்பிள்ளை லெப்பை ஆலிம் இன்னும் அனேக பகான்கள் நமக்காகக் கருணை புரிந்திருக்கின்றார்கள், அது களை வாங்கிப் படித்து சிறப்புப் பொருந்திய ஷரீஅத்தைப் பேணி நடத்தி வந்தீர்களானால், அதுதான் செயலென்னும் தரீக்கத்தாகும். இவ்விரண்டும் ஒன்றுபட்டால் தான் ஹகீக்கத் தென்பது. இதில் நிரப்பமானால் மஃரிபாவென் னும் ஞானம் உதையமாகும், விபரம் உரைக்கிறேன் பொருளைப் பாரும். பொருளைத் தேடி ஆசை பூண்டு,

பொருந்தும்படியாகப் பார்க்கும்போது, அருளைக் குறித்துமே வட்டமாகி அமைந்து வளைந்ததும் வெள்ளையாக இருளை அகற்றியே இரு கண்களின் மீது இலங்கும் ஒளி மக்காமூன் மஹ்மூதாகி, மருளையகற்றியே இரு கண்ணின் ஒளி மனுவிலிருப்பது முச்சுடராய், முச்சுடர் வட்டமும் சக்கரமாய், மூலக்கொலு சிங்காசனத்திலிருந்துமது, அச்சுடர் வட்டத்தில் இருந்து தொழ, யாரும் அறியார்கள். அந் நிலையை மெய்ச்சுடர் கொண்டு கண்ணைக் காட்டி மேலாந் தலமென்று உரைத்ததாலே. எச்சுடருமீதுக் கீடில்லை என்று எழுதினார்கள் இந்தத் தலத்தைத் தானே.

இந்த விதமாக இவர்களெல்லாம் எழுதி மறைத்துமே வைத்ததாலே, அந்த இடமது எங்கேவென்று அலைந்து திரிகின்றார் அனந்தங் கோடி. வந்தவர்களிடம் பொருளைக் கேட்டால் வாயில் வந்ததைப் புலம்புகின்றார். எவ்விடங்களிலும் கிடைக்காமலே ஏங்கித்தவிப்பாருக்கிப் பொருளை படித்துப் பார்த்துமே மனதிலுகப்போடு, உறுதி பூண்டு இப்படிக்கொற்ற கண்ணுனதை இயல்பால் அறியத்தான் வேணுமென்றால், காமிலாகிய ஷெய்கைத் தேடிக் காட்டித் தரும்படி வணங்கிக் கொண்டால், அப்போ அவர் மனமானது உன்னைப் பார்த்துபதேசஞ் செய்வார். ஆலம் அடங்கலும் அமைத்த நாயன், அருளினன் அதை நன்றாகக் கேளும். நபி உம்மத்தே உள்ள செய்திகள் சொல்லக் கேளும். செம்மையாய் இன்சான் என்னும் பேரில் சேர்ந்தே இருக்கின்ற இரண்டு நூனும் ஹிம்மத்தாகவே இரு கண்கள் மீது இலங்கும் நூனதைப் பொருத்திவைத்து தம்மதுவாகப் பார்வை தன்னில் தரித்த அலிபதில் நூனை மாட்டி.

மாட்டி இரு கண்ணின் ஒளிவுக்காக, மற்ற அவி
பதை நிலையிலாக்கி, ஆட்டி அசையாமல் ஒன்று கூட்டி
ஹைப்லுல் வரீதென்ற நரம்பில் மாட்டி, நாட்டி முச்சு
டரை ஒன்ருகச் சேர்த்து நலமாம் லாஹூத்தில் இருக்கச்
செய்து, பூட்டி உள்ளாலே தம்மென்ற தாழ்ப்பாளிட்டு,
புகழ்ந்திலங்கு மிரு கண்ணைப் பார். பார்க்கும் போதிரு
கண்ணின் மீது பளிங்கு ரூபம் போல் தெளிவு முண்டு.
சேர்க்கும் ஒளியான கண்ணின் மீது, சேர்ந்த நிறமைந்து
இருப்பதாலே, ஆர்க்கும் தெரிய மண், தண்ணீர், காற்று
நெருப்பு ஆகாயமும், ஏற்கும்படியாக இவைகளைந்தும்,
எல்லாம் பொருந்தவே சூழ்ந்து கொண்டு. ஒளிவதில் கலந்
ததாலே சொல்லும் வெள்ளையது மண்ணுமாகும்.
வாழ்ந்த சிகப்பது தண்ணீராகி, வாகாய் மண்ணுமே
இளகி நின்று, தாழ்ந்து வளைந்துமே பச்சையாகித் தானே
காற்ருக நுழைந்து கொண்டு, ஆழ்ந்த கருப்பது நெருப்பு
மாகி அணைந்து நடுவில் நுக்கத்தை வைத்தாலே, நூன்
எனும் நூறதன் கோலமாகி, பக்கத்தி லிருப்போர் தன்
னில் பார்க்க பாய்ந்து நமதுரு அங்கு காணும் ஹக்காய்
இலங்கவே பார்க்கும் போது அக்கோலமது நமதொளிய
தாகும். சிக்கலில்லாமல் அறிந்துணர்ந்து. சிறந்திலங்கும்
நான்கு பூதங்களையும் பிடித்தடைத்து பூங்காவனம்
போல் தெளிவுண்டாக்கி, வேதம் தனில் நூன் நூனென்
ருேதி, வெளியில் நானென்ற எழுத்துமாகி ஆதம் நபி, மக்
கள் அனைவோருக்கும், அறியக் கடனென்று உறுதிபூண்டு
நீதமுடனிதன் சிர்ரைப் போல நிலைத்த வுடலதில் இல்லை
எனச் சொன்ஞர் நபி நாயகம். இரு விழிகளின் ஒளிவைப்
போல தொல்லை இல்லை. அறிவதற்கு தொட்டுத் தொட்
டதை புட்டுச் சொன்னேன், அல்லும் பகலும் இல் இல்

லென்று அடைத்துத் திறப்பதும் கண்ணின் வாசல் சொல்லென அறிந்தாயானால் நபி நாதரின் சுடரொளியாகும். அத்தலத்தில் வைத்து மிகப் போதனையாய் தாஹா முஹம்மதே உலகத்தோர்க்கு குலத்தில் உயர்த்தியாய் அமைத்ததாலே. கோபவினை செய்யாதுலகில் உண்மை பலத்தில் ஜெயித்திட யாருமில்லை.

பெரும் முஹம்மதென்ற மாலை சூடி நிலத்தில் இன்சானின் திரேக மீதில் நேரே இருந்திலங்க வைத்தான். பதினைந்து அடையாளமாய், வெளியில் இரு கண்ணின் ஒளிவானது. மெய்த்த புகழுடன் இவனின் முன்னே மேன்மையாய் நடந்துமே போகும்பாரு. இசைத்தபடி அது நடந்து சென்றால் சாய்கை நிழலடி ரூபம் இல்லை. கைத் தவத்துடன் நீர் நெருப்பும் காணும் விஷமுள்ள ஜந்துக்களும். எந்த வகையிலும் பார்வை தானும், ஏறி இறங்கியே போன போதும் அந்தப் பார்வைக்கு உலகிலுள்ள அனைத்தும் அடிமையாய் இருக்கும்பாரு. இந்த இடத்தினில் உறியவில்லை வந்த உரோமங்கள் வளரவில்லை. வருகும் அசதி கோபம் மறதி இல்லை. இப்போதுரைத்த அடையாளங்கள் எங்கள் முஹம்மது நபியுல்லாமேல் அப்போது இருந்த அடையாளம் போல் ஆகுமிரு கண்களில் இருப்பதாலே, எப்போதும் உலகினில் வந்த நபி இருக்கும் தலமிரு கண்களென்றால், தப்பாய் நடத்திட முடியாதென்று தெளபாச் செய்து நீ உறுதி கொள்வாய்; அதன் பின் மூளை சென்று கூர்ந்து இரு கண்ணின் அடியைப் பார்த்து விள்ளும் இல்லென்று இறுக்கி மூடி விளங்கு மூளையில் ஏறிச் சென்று, உள்ளும் வெளியிலும் ஒன்று போலே உலாவி உடலெங்கும் பார்க்க நாடித் துள்ளும். பிடரியின் நரம்பதாலே துலங்கும் முதுகந் தண்டாலோடி வந்து உந்திக் கமலம் சேர்ந்து வாகாய் அதனுள் நுழைந்து

கொண்டு இந்த உடலுக்கு உயிருமாகி இரு விதைக ளென்ற பேரும் பூண்டு, சொந்தமாகவே பூட்டிக் கொண்டு சுடரொளி இரு கண்ணுல் வீசச் சொல்லி அந்த இடத்தினில் அரசு செய்யும் ஹக்கன் திருவருள் சக்கேயிலே சக்கு இல்லாமல் இருந்த பின்பு சரீர அமைத்தலேப் பார்க்க வேண்டும். திக்குத் திசையாகி பேச்சு மூச்சுத் தீரும். தொண்டைக் குழியில் ஒன்ருய், தக்கபடியொரு குழாயின் உள்ளே தடையில்லாமல் சுவாசமோட சிக்கல் அதனடி யில் வந்ததாலே, சிதறியது பல பிரிவாக, பிரிவதில் நுரை யீரல் பித்து அதன் பின் கரு ஈரல் பற்குத்தியும் தானே மாங்காயும் கிட்டினி சேர்ந்து தரித்த இவை ஆறும் ஈமாகு கும். மானே இவை ஆறும் சுவாச வழி மறைத்து ஒழித்து நடக்கும் வாசிதானே மாங்காய் என்றுரைத்த தலத்தை கல்பென்றுஞ் சொல்லுவார்கள். சொல்லும் கல்பென் ணும் இருதயத்தை சொல்லுவார்கள் தாமரை மொட்டு என்றும் எல்லாம் இதற்குப் பொருத்தமாகும். ஏகன் அர்செனறும் சொன்னதாலே பொல்லாக்குபிர் ஒன்றும் செல்லாதங்கு. போற்று மிறையருள் இருப்பதாலே, எல்லாக் கேள்வியும் அத் தலத்தில் ஏறி இருந்திறை தீர்ப் புச் செய்வான். சொல்லும் இவ்வுடலின் அதிகாரி தான் சென்று இருப்பதும் மூளையாகும். மெள்ள இறங்கியது கல்பின் மீது, மேன்மை சிங்காசனங்கொலுவிருந்து செய் யுந் தீர்ப்பை உறுப்பினங்கள், செய்து முடித்திடும் தவ ருமலே, தூயோன் அருளது மூளை சென்ருல் தூக்கம் மறதியில் நடக்குந்தானே!

நடக்கும் வழியான பிரிவினத்தை நாடி அறிந்திட வேணுமென்ருல், அடக்கமது ஒரு வாவியாகும். அதன் நீர் வற்ருது உயிரளவும், எடுக்கும் மூளையில் ஏருமலே இருத்தி அறிவதைக் கல்பில் வைத்து, மடக்கியதை அங்கு

மறந்திடாமல், மாயை பாவதோஷம் நீங்கி நன்றாய்த் தோஷமணுகாமல் இருந்து கொண்டு துலங்குமிடமெல் லாம் பார்த்துவிட்டு, நேசமதுவாக உடலின் மீது நிலைத்த இரகசியத்தை நாடியப்போ, வாசமதுவாகச் சொல்வதற்கு வந்த வழிகளை உற்றுப் பார்த்து, வீசும் சுவாசத்தின் செல்வ மெல்லாம் விளைந்த தலம் பைத்துல் மஃமூருகும். ஆனால் பைத்துல் மஃமூருவது அமைந்த மூளையாம் தவ்ஹீதிலே. தானும் சிதுறத்தல் முன்தஹாவும், தங்கும் தலைக் குழி நடுவாமென்று, வானம் புகழ் அர்ஷு நெத்தியாகும். வளைந்த புருவம் குர்சாமென்றும், ஈன மணுகாத காப கௌசனி இரு புருவத்தின் இடையாமென்றார். இரு புருவத்தின் கீழிருந்தும் இலங்கும் ஒளிவல்லோ குத்சியா கும். துலங்கும் ஒளிகளின் பொருளை எல்லாம் தொடர்ந்து இதனைச் சொல்லியாச்சு. வருகும் உடலின் மிஃருபுதான் வாசமருந்தும் மூக்குமாகும். அருமையுடன் அதில் வணங்குங் குரு ஹக்கன் முஹியித்தீன் ஆண்டகை யாம். ஆண்டோனருள் கொண்ட நாவானது அமைந்த கலமாகும். அறிந்து கொள்வீர் பூண்டலெவ்ஹீ மேல் முரசாமென்று பொருந்தும் கலத்திற்கு மையாவது, வேண் டும் குரல்வளை ஊற்று நீரும். வளைந்தக் குட்டி நாக்கு பாத்திமாவாம். தாண்டி வெளியோடும் வாசிதானும் தரித்த ஹசன் ஹுசைன் நாமமாகும், ஆகும் தொண் டைக் குழியாவது அமைந்த றூஹதன் வீடுமாகும். மாறி இரு மார்பின் நடுவிலே தான், மக்கா முஹம்மதின் கரு ஸ்தானம் ஏகமாயிவைகளை அறிந்த பின்பு, இலங்கும் பற் குத்தி மண்ணுமாகும். ஊறுங் கரு ஈரல் தண்ணீராகும். உறைந்த நுரை ஈரல் காற்றுமாச்சே! ஆச்சு இது பித்து நெருப்புமாகி, அடர்ந்து உலகெங்கும் இருப்பதாலே, பேச்சு மூச்சுடன் கேள்வி பார்வை, பிரிந்த நாட்டமைங்

தும் இஸ்லாமாகும். பாச்சி அமைந்துமே உடலானதை பரிபாலனஞ் செய்யும் மூச்சானதை. காச்சி வடித்துமே கழிவில்லாமல் கல்பில் வைத்தல்லோ பார்க்க வேண்டும். வேணுமென்று யான் சொல்லுகிறேன். வேத நாயகா! உன் கிருபையாலே ஆண்டு இருப்பதும் அந்த மூச்சு, அறிவில் கலந்ததும் அந்த மூச்சு. வாழ்ந்து சுகிப்பதும் அந்த மூச்சு. வளரப் பிறப்பதும் அந்த மூச்சு. மாண்டுமடியாமல் அந்த மூச்சு மஹஷரில் பிறப்பதும் அந்த மூச்சே. பிறந்து மஹ்ஷரில் நின்று கொண்டு பெரியோன் கேள்விக்குப் பதிலளித்து சிறந்த நாயகன் உகந்துகொள்ளச் சொல்லும் வகைகளும் அந்த மூச்சு. கறந்த பாலினுள் வெண்ணை போல கலந்து இருப்பதும் அந்த மூச்சு. மறந்து போகாமல் அந்த மூச்சை ஏற்றி இறக்கியே யாஹூவில் சேர்த்து திக்ராகச் செய்த பேர்கள் பார்த்து இருப்பார்கள். லிக்கா தன்னை பாலகர் மாதாவைத் தேடுமாப்போல் சேர்த்துக் கொள்ளும் ரப்பின் ஜோதி செல்வ முஹம்மதின் உம்மத் மத்தாவார். தாத்தும் சிபத்தும் ஒன்று சேர்ந்தால் தரித்த வுஜூதங்கே வெளியாகுமே!

வெளியான வுஜூது உள்ளமையாய் வேதக் கடலாக விருந்து ஓடித் தெளித்த குர்ஆனைக வந்து நின்று, தீர்ப்புச் செய்திடும் மஹ்ஷரிலே ஒளிவாயிலங்கி என் தந்தையான, ஷெய்கும் என் மாதாவும் அழியா சுவர்க்கத்தில் சேர்ந்து வாழ ஆதி ரஹ்மானே நீ கிருபை செய்வாயாக!

செய்யுங் கிருபையில் முதல்வதாக என் மாதா பிதா இந்த புவிதனில் செய்த குற்றங் குறைகளை நீ பொறுத்து ரட்சிக்க வேணுமென்ற கையை ஏந்தி கெஞ்சி மன்றுடுகிறேன். வல்லவா! ரஹ்மானே நீ பொருத்தருள் ஆமீன்! இன்னும் என் கிளை கோத்திரம் என் உடன் பிறந்தார்,

மனைவி மக்கள் என் கண்மணியான என் முரீதீன்களும்
இன்னும் என் முரீதீன்களுக்கும் மற்றுமுண்டான என்
தோழர்களுக்கும் இந்த சிறப்பான உபதேசத்தை பார்த்
ஷரீஅத்தென்னும் வழியைப் பின்பற்றித் தரீக்கத் செய
லாகி ஹகீக்கத்தென்னும் ஓர்மைப்படுத்தி மஅரிபாவென்
னும் செப் தவஞ் செய்த கூட்டத்தில் மேன்மையாய்
சேர்த்தருள். எங்கள் நபியுல்லாவின் முன்னில் சேர்த்து
மகிழ்ச்சி ஷபாஅத்தில் சேர்த்து ஜன்னப் பதிசென்று சந்
தோஷமாய் பார்த்து இருக்க உன் தீதார் தன்னைப்படைத்த
பெரியவா! நீ கிருபை செய்து ஏற்றுக் கொள்ளுவாய்
யாரஹீமே! என்றும் எனக்கருளவேணுமென்று வார்த்தை
தவறாமல் உண்மைக்காக வருந்திக் கேட்கிறேன். உனது
அடிமை, தாவிக் கறை சேர இடமில்லாமல், தவித்து
அழுகிற நேரந் தன்னில், கூவி அழைத்தென்னைக் கூடச்
சேர்த்து குல்ஹுவல்லாஹுவை பயானுஞ் செய்து மாறி
நடத்திட வேண்டாமென்று மேன்மை மார்க்கத்தில் உறுதி
கொண்டு, மறதி வராமல் காத்தருள்வாய் படைத்தவா
உன் கிருபையாலே!

மக்கா முஹம்மதின் ஸலவாத்தோதி, இறுதியாம் சக்
ராத்தில் இன்ப முஹியிதீன் என் முன்னில் வந்து, அவர்
களும் சந்தோஷமாய் வரிசையுடன் என் அருகிருந்து எந்த
நேரமும் மறந்திராமல் இந்த பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்
ரஹீமுமோதிச் சொந்தமிதுவாகும். உந்தனுக்குச் சொல்
கிறேனிதை நீ மறந்திராதே! விந்தையாகிய யாவென்பதை
யும் ஹூ வென்பதையும் ஏற்றிறக்கம் செய்வாயாக! இன்
னும் உன் நினைவை ஹக்கிடமாக தரிபாடாக்கு
வேறென்று நினைவாயிராதே. நீ விரும்பி இருந்தியேயா
ருல் இஸ்முயிலும் திட்டமாகவே உனக்கு சலாமுஞ்

சொல்லி தாருமெனக் கேட்டார். றூஹானதை கஷ்டம் வராமல் வாங்கிப் போவார். காஜா முஹம்மதின் உம்மத் தாவாய் கஷ்டம் வராது உந்தனுக்கு. நபியுல்லா வாரார் கள் நானும் போறேன். நன்றி மிகவுள்ள என் முரீதே! என்றும் நபியுல்லா வருமுன்னே முஹியித்தீனும் நல்லுபதே சஞ் சொல்லி நகரும் போதில் நபியுல்லா வந்து பார்த்து கருணையுடன் புகழ்ந்து மனமுவந்து எந்தன் சக்ராத்தில் கைஇருக்கு ஆமீன்! உந்தன் கிருபையது எனக்கு வேண் டும். உண்மை வுஜூதை யான் கண்டதாலே, அந்த வுஜூதத்தை என் கல்பினுள்ளே அடைத்து இல்லென்றே முழங்கி ஹக்கென்றடித்து இல் இல்லென்று முழக்கஞ் செய்ய உதவி செய்வாயா ரஹீமானவனே! அலங்காரமாக ஏற்றிறக்கம் செய்து வருகும் போதினில் ஒளிவுண்டாகி ஓடி வந்தென்னைச் சூழ்ந்து கொண்டு ஆதி ரஹ்மானின் முன்னிலையில் நின்று அனுதினமும் ஆமீன் கூறி, மீத மிருக்கும் உன் இரகசியத்தை மீறி நடக்காமலென் முரீதீன் களை ஆதி பெரியோனே காத்தருள்வாய். காத்து அவர் களை ஒன்று கூட்டி செல்வ முஹம்மதின் உம்மத்தாக்கி, வார்த்தை தவராமல் ஜன்னப்பதி தன்னில் சேர்த்து எங் கள் முஹம்மது நன்னபியின் திருமணக் காட்சி பார்த்து, எல்லோரும் மன மகிழ்ந்து பந்தியிலிருந்து விருந்தருந்தி யாருக்குங் குறையாமல் அவ் வேளையில் கவ்லுல் கவ்தரின் தண்ணீரீந்து ஈந்து அவர்களின் தாகமாற்றி இன்பமதுவாக சுக்கூறும் செய்து, சாய்ந்து எல்லோரும் பவனி வந்து படைத்த பெரியவன் முன்னில் நின்று, காய்ந்து போகாமல் கல்பிலங்கிக் கலிமா அவர்களுக்கு சாட்சி சொல்ல ஏந்து மிருகையுயர்த்தி உம்மத்தோர்க்கு, எல்லோரும் கேளு மென்று நபி சொன்னதாலே சொன்ன சொல்லை நான்

அறிந்ததாலே சொல்கிறேன். உன்னிடம் யாஹூவானவனே! உன்னை ஹூப்பு வைத்த என் முகத்தைப் பார்த்து உனது முஹப்பத்தில் என்னை இருத்தி எந்நேரமும் உன்னை நினைத்திருக்க உன் கிருபைதான் வேணும் ஆமீன்!

பாரில்நான் செய்த பாவம் பொருத்தருள் பார்த்திபா எங்கள்
ஆண்டவா! இப்பாபியின் பிழைபொறுத்து அஹ்சின்
ரப்பிசல்லி இலாஹனா!

பாவமென்றறியாமல் செய்த பாவியான்
படைத்தவா பிழை பொறுத்தருள் யா
ரப்பிசல்லி இலாஹனா!

இந்த ஏழை என்தன் இறப்பை ஏற்றுக்கொள் இறைவா
எங்கள் ஆண்டவா இந்த ஏழையின் பிழை
பொறுக்க வேணும் யா ரப்பிசல்லி இலாஹனா!

ரஹ்மத்துல்லா ஸாஹிபென்னும் பாவியான்
ரஹ்மத்துன்லில் ஆலமீன் யா
ரப்பிசல்லி இலாஹனா!

வாழ்த்து

வாழ்ந்திருக்க வாழ்ந்திருக்க வாழ்த்தினோரும்
வாழ்ந்திருக்க இதை ஆதரித்தோர்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க இதில் ஆசை வைத்தோர்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க இதற்கு உதவினோரும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க இதைப் படித்துத் தேடினோரும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க இதிலுள்ளபடி வணங்கினோரும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க என் முரீதீன்களும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க என் மைந்தர்களும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க என் சுற்றத் தினத்தோரும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க என்னை அடுத்தோர்களும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க என்னை ஆதரித்தோரும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க எனக்குதவினோரும்
வாழ்ந்திருக்க!

வாழ்ந்திருக்க அ. அப்து சுக்கூரென்பவரும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க இதை பிரசுரிக்க உதவியவர்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க அவர்கள் மனைவி மக்கள்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க இந் நூலுக்குச் சன்மான மீபவரும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க என்னை சூழ்ந்தோர்களும்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க என் சுற்றினங்கள்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க என் சுய பந்தினோர்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க இந் நூலுக்குதவியவர்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க இந் நூலைச் சீர்படுத்தியவர்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க எனக்கு துணை புரிந்தோர்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க மூஃமீன் முஸ்லிம்கள்
வாழ்ந்திருக்க!
வாழ்ந்திருக்க இதுக் குறை தந்தோர்கள்
வாழ்ந்திருக்க!

முபாரக் அச்சகம், உத்தமபாளையம் - 66.